விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9196)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (30.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

# பிரதான கட்சிகளின் கருத்து முரண்பாடு;
# தீர்க்க ஜனாதிபதி - பிரதமர் பேச்சு





(கொழும்பு)
அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகள் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளை எப்படி தீர்ப்பது என்பது தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடையில் அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நடந்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான சவால்களை கூட்டாக எதிர் நோக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இருவரும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹசீம் உட்பட அமைச்சர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விமர்சிப்பது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் எஸ்.எம். மரிக்காரின் புதிய அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில், அமைச்சர் கபீர் ஹசீம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விமர்சித்தது குறித்து ஜனாதிபதி பங்களாதேஷில் இருந்து அமைச்சர் மலிக் சமரவிக்ரமவிடம் விசாரித்துள்ளார்.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர் டிலான் பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியை கடுமையாக விமர்சித்து வருவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்தின் இரண்டு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்காலத்தில் இப்படியான முரண்பாடுகள் ஏற்படாத வகையில் செயற்படுவது என இரண்டு தலைவர்களும் இணங்கியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

மேலும் அரசாங்கத்தை சீர்குலைக்க கூட்டு எதிர்க் கட்சி மேற்கொள்ளும் பணிப் புறக்கணிப்பு உட்பட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு 15☛

## 2ஆம் திகதி நாடு முழுவதும் எதிர்ப்பு

(கொழும்பு)
எதிர்வரும் 2ஆம் திகதியை தேசிய எதிர்ப்பு தினமாக அறிவித்து அரசாங்கத்திற்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த சைட்டம் எதிர்ப்பு 15☛

## அம்பாந்தோட்டை ஒப்பந்தத்திற்கு அமைச்சர் விஜயதாச எதிர்ப்பு?




(கொழும்பு)
அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் சட்டவிரோதமானது.

அம்பாந்தோட்டை சீனாவுக்கு கொடுக்கப்பட்டால் கொழும்பு துறைமுகம் நீச்சல் தடாகமாகுமென நீதியமைச்சரும் பௌத்த சாசன அமைச்சருமான விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த யோசனை சட்ட விரோதமானது. துறைமுக அதிகார சபை சட்டத்தின் கீழ் துறைமுகத்தை விற்பது அல்லது குத்தகைக்கு கொடுப்பது துறைமுக அதிகார சபைக்கு எவ்வித அதிகார 15☛

## புகையிரதம் மோதி குடும்பஸ்தர் பலி
### சாவகச்சேரியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
யாழ்.-கொழும்பு புகையிரதத்தில் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். நேற்று பிற்பகல் 2.10 மணியள 15☛

## சமையல் எரிவாயு விலை உயர்கிறது!

(கொழும்பு)
சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 200 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளது.

எரிவாயு சிலிண்டரின் தற்போதைய விலை 1,450 ரூபாயாகும். எனினும் இந்த விலையை அதிகரிக்கும்படி லாப்ஸ் மற்றும் 16☛

## கறுப்பு ஜூலை நினைவேந்தல் இன்று யாழ் முற்றவெளியில்

(யாழ்ப்பாணம்)
கறுப்பு ஜூலையின் 34 ஆவது வருட மாபெரும் நினைவேந்தல் நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு யாழ் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத்தமிழாராய்ச்சி படுகொலை நினைவுத்தூபி அருகில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்களான தமிழ் இளையோர் இயக்கத்தினரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எம் ஈழத்தமிழினம் சுமந்த வலிகளின் வரலாற்றை கட்சி பேதங்களுக்கப்பால் நினைவு கூருவோம். ஆடிப்படுகொலை இடம்பெற்று முப் 16☛

### சபாநாயகர் கதிரையில் அமர்ந்த
## பிரியங்கர ஜயரத்ன எம்.பி மீது ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)
நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன சபாநாயகர் கதிரையில் அமர்ந்தார்.

இது பாராளுமன்ற வரபிரசாதங்களை மீறும் செயலெனக் கூறி அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி சபா நாயகர் திலங்க சுமதிபால நாடாளு 15☛

## அமைச்சின் செயலர்கள் நியமனம்

(கொழும்பு)
வெளிவிவகார அமைச்சின் புதிய செயலராக ஐக்கிய அமெரிக்க குடியரசின் இலங்கை தூதுவராக கடமையாற்றிய பிரசாத் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். 15☛

### மாதகலில் நடந்த அவலம்
## கணவன் முன்னிலையில் குடும்பப்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாதகல் பகுதியில் இளம் குடும்பப்பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

மாதகல் மேற்குப் பகுதியைச்சேர்ந்த நிரஞ்சன் சாலினி என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு தூக்கிட் 16☛

## தமிழ் மக்கள் பேரவை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவை இன்று கூடுகிறது. பேரவையின் இணைத் தலைவர்களான வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், த.வசந்தராஜா ஆகியோர் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப் 15☛

மகாராஜா பொதிகள் சேவை
எந்த ஒரு வெளிநாடுகளுக்கும் கடலுணவுப் பொருட்கள், பழவகைகள் மற்றும் மரக்கறிவகைகளை எந்தவித மேலதிக கட்டணமின்றி அனுப்ப இன்றே நாடுங்கள்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
17.02.1932



மறைவு
30.06.2017

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு*

### அமரர் சிறீதேவி சிவசுந்தரம்

கடந்த 30.06.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் சிறீதேவி சிவசுந்தரம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறி உதவி புரிந்த அனைவருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

வீ.எம். றோட்,
பருத்தித்துறை.

தகவல் : மகன் (செல்லா)
மகள் ரதிகுமாரி - 0776548308
மற்றும் குடும்பத்தினர்

(சி-9203)

## தடம்புரண்ட கப் வாகனம்



(கோப்பாய்)

கப் ரக வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதால் அவ்வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் பலாலி வீதி உரும்பிராய் காளி அம்மன் ஆலயத்துக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இரும்பு பொருட்களை ஏற்றி பலாலி வீதி வழியாக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த கப் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையிலும் அதிக மான பொருட்கள் வாகனத்தில் நிரப்பப் பட்டு இருந்ததாலும் சாரதி தடுப்பை ஏற்படுத்திய போதும் கட்டுப்பாட்டை மீறி வீதிக்கு அருகில் இருந்த வர்த்தக நிலையத்தின் முன் பகுதியில் மோதுண்டு தடம்புரண்டுள்ளது.

இதனால் வாகனம் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன். மோதுண்ட கடையின் முன்பகுதி கூரையும் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-87)

## மரண அறிவித்தல்

### செல்வி ஈடித் நல்லதம்பி



(ஆசிரியை - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி )

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஈடித் நல்லதம்பி நேற்று (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் கடற்கரை வீதி வெளிச்சவீட்டடி பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (30.07.2017) காலை 10 மணியளவில் 4-ம் குறுக்குத் தெருவில் உள்ள அவரது பழைய வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அஞ்சலிக்காக பிற்பகல் 3 மணிவரை வைக்கப்பட்டு பின்பு 2-ம் குறுக்குத் தெருவில் உள்ள மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கோல்டின் திரேசா

தொ.பே: 076 895 8519 (சி-9204)

## மரண அறிவித்தல்



### அமரர் நல்லதம்பி ஈடித் இன்பமலர்

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியரும், பகுதித்தலைவரும்)

**தோற்றம் : 18.10.1937 - மறைவு : 29.07.2017**

பருத்தித்துறை 4-ம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் கோரியடி பருத்தித்துறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி ஈடித் இன்பமலர் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியரும் பகுதித் தலைவரும்) அவர்கள் நேற்று (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் நல்லதம்பி, நல்லதம்பி நேசம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி சிறில், அழகக்கோண், ஜீவமலர், வேலும்மயிலும் லிதியா பவளமலர், சாள்ஸ் நல்லதம்பி, எட்வேட் நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயா, நித்தி, சித்திரா, குஞ்சு, சுபேன், மகா ஆகியோரின் சிறிய தாயாரும், கமரூன், எவன், அதர்சன், கேசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதி ஆராதனை பருத்தித்துறை 4-ம் குறுக்குத் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் : வேலும்மயிலும் தயானந்தராஜா.
வேலும்மயிலும் பவுண்டேஷன் பருத்தித்துறை.

(சி-9205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

(கொழும்பு)

**1.1 பில்லியன் அமெரிக்க் டொலர்கள் பெறுமதியான அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் அரசாங்கம் நேற்றுக்காலை கைச்சாத்திட்டது. துறைமுக அமைச்சில் வைத்தே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.**




இது தொடர்பாக, ஊடகவியலாளர் மாநாடொன்றின் போது கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட தடுமாற்றம் காரணமாக, அரசாங்கம் 46 பில்லியன் ரூபாயை இழந்துள்ளதாக கூறியுள்ளார்.

"இந்தத் தொகையை நாம் இழந்திருக்காவிடின், நாட்டிலுள்ள 2.5 மில்லியன் மக்களுக்கு, இலவசமாக மருந்துகளையும் சிகிச்சைகளையும் அளித்திருக்க முடியும்.

"அம்பாந்தோட்டை துறைமுகத்திட்டம்தொடர்பாக, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விவாதிப்பதற்கு ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவகாசம் வழுங்கப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்பாக விவாதிக்க அவர்கள் முன்வரவில்லை. காரணம், விவாதிப்பதற்கு சரியான காரணம் அவர்களிடம் இல்லை" என்றும் இதன் போது அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திட்டத்துக்கான பாதுகாப்பு பணிகள் அனைத்தும் சிவில் மற்றும் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் நிலப்பரப்பு தொடர்பான விடயங்களை அரசாங்கமே கையாளும் என்றும் பிரதமர் கூறினார்.

இதேவேளை, மாத்தளை விமான நிலையம் தொடர்பான ஒப்பந்தம் இந்த வருட இறுதிக்குள் கைச்சாத்திடப்படும்என்றும்அவர் தெரிவித்தார்.

"எவ்வாறாயினும், சூரியவெவ கிரிக்கெட் மைதானம் தொடர்பாக மோசமான செய்திகளையே நாம் அறிந்துள்ளோம்.

மைதானத்துக்கான எந்தவொரு தேர்வாளர்களும் இல்லை. இந்தத் திட்டத்துக்காக, எம்முடைய வரியிலிருந்து நாம் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையே உள்ளது" என்றும் அவர் கூறினார்.

"நாட்டின் பொருளாதாரம் ஒரு சதுப்பு நிலமாகவே காணப்பட்டது. எனினும், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த 2 வருடங்களாக ஒவ்வொன்றாக சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. பொருளாதாரம் ஒரு நிலைக்கு வந்துள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேவையற்ற போராட்டங்களுக்கு எதிராக அரசாங்கம் மிகக் கடுமையாக செயற்படும்

## அமைச்சர் ராஜித எச்சரிக்கை

(கொழும்பு)

ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழிற்சங்க உரிமைகளுக்காக அன்றி வேறு அரசியல் காரணங்களுக்காக தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுத்தால் அதற்கு எதிராக அரசாங்கம் கடுமையாக செயற்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன எச்சரித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

தேவையற்ற போராட்டங்களை முன்னெடுத்தால் நாட்டில் அமுலில் உள்ள அனைத்து சட்டங்களையும் பயன்படுத்தி அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்காகவே மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்துள்ளதாகவும் அதற்கமைய பொது மக்களின் சொத்துக்களை பாதுக்க வேண்டியது அரசின் கடமை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அத்தியாவசிய பொதுச் சேவை சட்டமூலத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது கூட்டு எதிரணி கலகம் ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டதாகவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



எனவே, இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அமைச்சர் என்ற வகையில் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் மக்களின் உயிரை முப்படையினர் காக்கின்றனர்

## ஒமல்பே தேரர் கூறுகின்றார்

தமிழ் மக்களின் உயிரை காக்க படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்பதை வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் ஒப்புக்கொள்ள வேண்டுமென தென்னிலங்கை பிரதான சங்கநாயக்க ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முப்படையினர் தமிழர்களின் உயிரை காக்கின்றனர் என்பதனை விக்னேஸ்வரன் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறுவதன் மூலமே சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விக்னேஸ்வரன் கூறிய கருத்து முழுமை பெறும்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக கடமையாற்றுவதற்கு வழியமைத்த பெருமை முப்படையினரையே சாரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசை உடனடியாக ஏற்படுத்த என்னால் முடியும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அவசியம் ஏற்பட்டால் உடனடியாக புதிய அரசாங்கமொன்றை உருவாக்க தன்னால் முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



எனினும், தூய்மையற்ற அரசாங்கமொன்றை உருவாக்க தாம் தாயாரில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் அனைத்து இலங்கை செயற்குழுக் கூட்டம் என்பன பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போதே கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தூய்மையற்ற அரசாங்கமாக இருந்ததன் காரணமாகவே, கடந்த அரசாங்கத்திலிருந்து தாம் வெளியேறியதாக ஜனாதிபதி தெரிவித்தார். தற்போது இருக்கும் இடமும் தூய்மையற்றது எனில், தம்மால் அங்கு இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டம் கல்லூரிக்கு எதிராக 2016ல் 163 ஆர்ப்பாட்டங்கள்

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ஜூலை மாதம் வரை கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் சைட்டம் கல்லூரிக்கு எதிராக 163 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாக விசேட விசாரணைக்குழு நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விசாரணை அறிக்கைக்கு அமைய கடந்த 2016ஆம் ஆண்டில் மாத்திரம் 95 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டில் முடிவடைந்த காலப்பகுதிக்குள் 68 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனைத் தவிர கடந்த 2016ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 1,400 பொது ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 340 ஆர்ப்பாட்டங்கள் மாணவர்கள் நடத்தியவை என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 'வதந்திகள் உண்மைக்கு புறம்பானவை'

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 சதவீதமானவை, சீன நிறுவனத்துக்கு குத்தகை முறையிலேயே வழங்கப்பட்டுள்ளது எனும் வதந்தி உண்மைக்கு புறம்பானது என்று கூறியுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் கூட்டு தொழிற்சங்கங்களின் பிரதிநிதியான பிரசன்ன பத்திரன, இது, ஒரு நீண்ட கால முதலீடு மாத்திரமேயாகும் என்றும் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு, இத்தகைய அணுகுமுறையொன்று அவசியமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"அம்பாந்தோட்டை துறைமுகத்தை அரசாங்கம் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கும் ஒரு நிலையில், நாம் செயற்படவில்லை. ஆனால், குத்தகை மூலம் பயனுள்ளது என்றால், அதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல" என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 304 ஓட்டங்களால் வெற்றி பெற்றது



காலி டெஸ்டில் இலங்கையை 2-வது இன்னிங்சில் 245 ஓட்டங்களில் சுருட்டி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றியை பெற்றுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி காலி மைதானத்தில் கடந்த 26ஆம் திகதி தொடங்கியது. இந்திய அணியில் முதன்முறையாக ஹர்திக் பாண்டியா அறிமுகமானார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். தவான், அபிநவ் முகுந்த் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். அபிநவ் முகுந்த் 12 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து தவான் உடன் புஜாரா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தவான் 190 ஓட்டங்களும், புஜாரா 153 ஓட்டங்களும் குவித்தனர்.

அதன்பின் வந்த அணித் தலைவர் விராட் ஹோலி 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும், ரகானே 57 ஓட்டங்களும், அஸ்வின் 47 ஓட்டங்களும், அறிமுக வீரரான ஹர்திக் பாண்டியா 50 ஓட்டங்களும் எடுக்க இந்தியா முதல் இன்னிங்சில் 600 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் நுவன் பிரதீப், குமாரா ஆகியோர் முறையே 6, 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை 291 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணியில் அதிகபட்சமாக டில்ருவான் பெரேரா ஆட்டமிழக்காமல் 92 ஓட்டங்களும், மத்தியூஸ் 83 ஓட்டங்களும் அடித்தனர். இந்திய அணி சார்பில் ஜடேஜா 3 விக்கெட்டும், மொகமது ஷமி இரண்டு விக்கெட்டும், உமேஷ் யாதவ், அஸ்வின், ஹர்திக் பாண்டியா ஆகியோர் தலா 1 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

309 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இந்தியா பலோ-ஆன் கொடுக்காமல் 2-வது இன்னிங்சை தொடங்கியது. முதல் இன்னிங்சில் சதம் அடித்த தவான், புஜாரா முறையே 14, 15 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். முதல் இன்னிங்சில் ஏமாற்றமளித்த அபிநவ் முகுந்த், ஹோலி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

3-வது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 3 விக்கெட் இழப்பிற்கு 189 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அபிநவ் 81 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழநதார். விராட் ஹோலி 76 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. விராட் ஹோலியுடன ரகானே ஜோடி சேர்ந்தார். இருவரும் தொடக்கம் முதலே அடித்து விளையாடினார்கள். விராட் ஹோலி சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 240 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது 2-வது இன்னிங்சை இடை நிறுத்தியது.

முதல் இன்னிங்சில் 309 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்ததால் இலங்கை அணியின் வெற்றிக்கு 550 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது இந்தியா.


இமாலய இலக்கை நோக்கி இலங்கை அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரரான உப்புல் தரங்கவை 10 ஓட்டங்களில் வெளியேற்றினார் மொகமது ஷமி. அடுத்து வந்த குணதிலகவை 2 ஓட்டங்களில் பெவிலியன் அனுப்பினார் உமேஷ் யாதவ். இதனால் இலங்கை அணி 29 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது.

3-வது விக்கெட்டுக்கு கருணாரதனேவுடன் மெண்டிஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்றது. 4-வது விக்கெட்டுக்கு 79 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இந்த் ஜோடி பிரிந்தது. மெண்டிஸ் 36 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மத்தியூஸை 2 ஓட்டங்களில் ஜடேஜா வெளியேற்றினார்.

ஒரு பக்கம் விக்கெட் வீழந்தாலும் மறுமுனையில் கருணாரத்ன சதத்தை நோக்கி முன்னேறிக் கொண டிருந்தார். அவருக்குத் துணையாக டிக்வெல்ல, தில்ருவான் பெரேர விளையாடினார்கள்.

டிக்வெல்ல 67 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்தில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டம இழந்தார். டிக்வெல்ல ஆட்டமிழந்ததும் இந்தியா வெற்றியை நெருங்கியது. கருணாரத்ன 97 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்தில் க்ளீன் போல்டாகி சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

கருணாரத்ன ஆட்டமிழக்கும் போது இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை 6 விக்கெட் இழப்பிற்கு 240 ஓட்டங்களாக இருந்தது. மேலும் 5 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இலங்கை அடுத்த இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. இதனால் இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது அந்த அணியின் 2-வது இன்னிங்ஸ முடிவுக்கு வந்தது. டில்ருவான் பெரேர 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.



காயம் ஏற்பட்ட குணரத்ன, ஹேரத் ஆகியோர் துடுப்பாட்டம் செய்ய வராததால் இலங்கை 245 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதனால் இந்தியா 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-0 என முன்னிலை பெறறுள்ளது.

முதல் இன்னிங்சில் 190 ஓட்டங்கள் குவித்த தவான் ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார். 2-வது டெஸ்ட் ஆகஸ்ட் 3ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் தொடங்கவுள்ளது.

# இங்கிலாந்து அணியின் அறிமுக வீரரின் பந்து வீச்சில் திணறிய தென்னாபிரிக்கா



லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் 3-வது டெஸ்டில் இங்கிலாந்தின் புதுமுக வீரரின் பந்து வீச்சில் தென்னாபிரிக்கா நிலை குலைந்துள்ளது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த 27ஆம் திகதி தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியின் முதல்நாளில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி 353 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சகலதுறை வீரரான பென் ஸ்ரோக்ஸ் 112 ஓட்டங்களும், தொடக்க வீரர் அலஸ்டைர் குக் 88 ஓட்டங்களும் சேர்த்தனர்.

பின்னர் தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சை தொடங்கியது. இங்கிலாந்தின் அறிமுக வேகப்பந்து வீச்சாளரான ரோலண்ட்-ஜோன்ஸ் பந்தில் தென்னாபிரிக்க வீரர்கள் நிலைகுலைந்தனர்.

தொடக்க வீரர்கள் எலங்கர், குன் ஆகியோர் முறையே 8, 15 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த முன்னணி துடுப்பாட்ட வீரரான அம்லாவை 6 ஓட்டங்களிலும், அதிரடி வீரர் டி கொக்கை 17 ஓட்டங்களிலும் வெளியேற்றினார் ரோலண்ட்-ஜோன்ஸ்.

முக்கிய நான்கு விக்கெட்டுக்களை ரோலண்ட்-ஜோன்ஸ் தொடர்ந்து வீழ்த்தியதால் தென்னாபிரிக்கா 47 ஓட்டங்கள் எடுப்பதற்குள் முன்னணி துடுப்பாட்ட வீரர்களை இழந்து திணறியது.

அடுத்து வந்த டு பிளசிஸ் (1), மோரிஸ் (2) ஆகியோரை ஆண்டர்சனும், ரபாடாவை பிராட்டும் வீழ்த்த, 2-வது நாள் ஆட்ட முடிவில் தென்னாபிக்கா 8 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

# தவானின் பிடியைத் தவற விட்டதே அணியின் தோல்விக்கு காரணம்

## மனம் திறந்தார் ரங்கன ஹேரத்

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அடைந்த படுதோல்விக்கான காரணத்தை இலங்கை அணித் தலைவர் ரங்கன ஹேரத் வெளியிட்டுள்ளார்.

காலி மைதானத்தில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் தனது அணியினர் அனைத்து துறையிலும மிக மோசமாக விளையாடியதாக ஒப்புக்கொண்ட இலங்கை அணித் தலைவர் ஹேரத், தவான் விக்கெட்டை தவறவிட்டதே இலங்கை அணிக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.



இதுவே போட்டி இலங்கையிடம் இருந்து நழுவ முக்கிய காரணம. மேலும், இலங்கை நட்சத்திர வீரர் குணரத்ன இல்லாதது அணிக்கு பெரும் இழப்பாக அமைந்தது.

எஞ்சிய இரண்டு போட்டிகளில் வெல்ல வேண்டுமெனில், எப்படியாவது முன்னேற புதிய வழிகளை கண்டுபிடித்து சிறப்பாக செயற்பட வேண்டும் என கூறியுள்ளார்.

# உடல் நலக்குறைவால் மைதானத்தை விட்டு வெளியேறினார் பிலெண்டர்

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியின்போது உடல்நலக்குறைவால்தென்னாபிரிக்க வீரர் பிலெண்டர் மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்டம் நடைபெற்றது. இங்கிலாந்து துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது, தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் வெர்னன் பிலெண்டருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதனால் உடனடியாக மைதானத்தில் இருந்து வெளியேறினார். 12 ஓவரில் 17 ஓடடங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தியிருந்த நிலையில் அவர் வெளியேறியது தென்னாபிரிக்க அணிக்கு பாதகமாக அமைந்தது. இதை பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் பென் ஸ்ரோக்ஸ் சதம் அடித்து இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையை 353 ஓட்டங்களாக உயர்த்தினார்.

மைதானத்தை விட்டு வெளியேறி முதலுதவி பெற்றபோதிலும் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. முன்னெச்சரிக்கையாக அருகில் உள்ள மருத்துவமனையில சேர்க்கப்பட்டார்.

இதனால் நேற்றைய 3-வது நாள ஆட்டத்தில் பிலெண்டர் பங்கேற்பாரா? என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் அவர் உடல் நலம் பெற்று துடுபபாட்டம் செய்ய களம் இறங்கினார். பிலாண்டர் களம் இறங்கியது தென்னாபிரிக்கா அணிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் இன்று





2017ஆம் ஆண்டுக்கான கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் வடமராட்சி பிறீமியர் லீக்கின் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் ஜெ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

சிறப்பு விருந்தினர்களாகவடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சி.அகிலதாஸ் மற்றும் சே.சிவயோகன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகவடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம், வடமராட்சி உதைபந்தாட்ட லீக் செயலாளர் தி.வரதராசன் மற்றும் கிராம அலுவலர் சி.பார்த்திராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் சிறு வர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திரு மதி. விஜயலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-10-19)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

077 784 1558

(சி. 8817)



# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | I ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 03 1929 — மறைவு 18 09 2013

அமரர் சின்னவி நாகமுத்து

04.10.2017



தோற்றம் 04 04 1934 — மறைவு 11 08 2016

அமரர் நாகமுத்து இளையபிள்ளை

30.07.2017

உள்ளக் கோவிலில் குடிகொண்டு-எமக்கு
நல்லதை செய்யும் தெய்வங்களே!
எத்தனை பிறவிகள் சென்றாலும்-நெஞ்சில்
உங்கள் நினைவுகள் மறையாது!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன். பேர்த்தி:-K.பவானி



# மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சிற்றி மெடிக்கல் சென்ரர் யாழ் நொதேண் சென்றல் வைத்திய சாலையுடன் இணைந்து நடாத்தும் இலவச பொது மருத்துவ முகாம்

நாள்:-07.08.2017 திங்கட்கிழமை

நேரம்:- காலை 8 மணி முதல் மதியம் 12 மணிவரை

இடம்:-சிற்றி மெடிக்கல் சென்ரர் ஆனந்தபுரம் கிளிநொச்சி

அடிப்படை உடற்பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்

Northern Central Hospital
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
E-mail: nchjaffna@gmail.com
Website:www.nchjaffna.com

City Medical Center
AANANTHAPURAM,
KILINOCHCHI
TEL:- 077 627 4919

அனுசரணை: Indus Life Sciences Pvt. Ltd.

ஊடக அனுசரணை:-வலம்புரி



# BRITISH COLLEGE OF ENGLISH

IELTS August- September

மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

AN INNOVATIVE APPROACH TO IELTS

OUR TARGET IS BAND : 9

Special Features of this Course: 16 - Practice Tests with Explanations Daily Writing Practice Daily Speaking and Listening Practice It is an Inovative Training Programme

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 01.08.2017

COURSE SCHEDULE Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00



FCE Cambridge First Certificate in English

(C-9198)

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

The exam is designed to be fair to people of all nationalities and linguistic backgrounds, and is supported by a dedicated research programme. It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

Special Features of this Course

Exam Date: November 2017
Centre - British Council Colombo.

BRITISH COLLEGE OF ENGLISH
Palaly Road, Urumpirai, Jaffna.
Tel : 021 222 0384 , 077 880 3887


# இராசி பலன்

30.07.2017
(ஆடி 14, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சப்தமி முற்பகல் 11.39 மணிவரை
சித்திரை முற்பகல் 11.19 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி- உத்தரட்டாதி | | சூரி ராகு செவ் |
| கேது | | | புத |
| | சனி | சந் | குரு |

**மேடம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உடல்நலன் சீராகும், நண் பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வெளியூர்த் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், ரோக பயமுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, உறவினர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு

**துலாம்:** தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு, வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலன் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், இலட்சிய பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்:** ஆடம்பர பொருட்கள் மீது ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டு வீர்கள், நேற்றைய பணியொன்றை இன்றும் தொடரலாம் பயணங்கள் கைகூடும்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில்ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


குருநகர் யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த தேர்ப்பவனி அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

# மயிலிட்டியில் கடற்றொழில் செய்வதற்கு போதிய உதவிகள் வழங்கப்படவில்லை

## அரசு மீது கடற்றொழிலாளர் சங்கம் புகார்



இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி இறங்குதுறை ஊடாக கடற்றொழில் செய்வதற்கு மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் அதற்கான உதவிகளை அரசாங்கம் வழங்கவில்லை என மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் ந.ரட்ணராஜா தெரிவித்துள்ளார். குறித்த இறங்குதுறை ஊடாக 300 பேர் வரையில் கடற்றொழில் செய்து வரும் நிலையில் 5 மீன்பிடி வள்ளங்களே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி மயிலிட்டியிலிருந்து மக்கள் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட போது தமது வள்ளங்கள் அனைத்தையும் கைவிட்ட நிலையிலேயே சென்றிருந்தனர். இதன் பின்னர் கடந்த 27 வருடங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மயிலிட்டி துறையும் அதனோடு இணைந்த 54 ஏக்கர் காணியும் கடந்த 3 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டு இருந்தது. இவ்வாறு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீனவர்களுடைய வாடி வீடுகள், மீன் பதனிடும் இடங்கள் என அனைத்து தொழில் சார் கட்டடங்களும் அழிக்கபட்ட நிலையில், மீனவர்களுடைய வள்ளங்களும் காணாமல் போயிருந்தன.

குறித்த துறையூடாக மயிலிட்டி மீனவர்கள் பெருமளவு வருமானத்தைப் பெற்று வந்த நிலையில், நாட்டின் மொத்த மீன்பிடியில் மூன்றில் ஒரு பங்கினை மயிலிட்டி மீனவர்கள் ஈடு செய்து வந்திருந்தனர். இந்த நிலையில் 27 வருடங்களுக்கு பின்னர் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வம் காட்டி வரும் மீனவர்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் அரசாங்கம் பின்னடித்து வருகின்றது. இதனால் உடனடியாக தமது தொழிலை முன்னெடுக்க முடியாமல் மயிலிட்டி மீனவர்கள் அவதிப்படுகின்றனர்.

மயிலிட்டி மீன்பிடிச் சங்கத்திற்கு உட்பட்ட மயிலிட்டி துறை வடக்கு ஜே/251, மயிலிட்டி துறை தெற்கு ஜே/248, மயிலிட்டி வடக்கு ஜே/246 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது பருத்தித் துறையில் வசித்து வரும் குடும்பங்களின் எண்ணிக்கை 650 ஆகும். இதனை விட இந்தியா மற்றும் பிற இடங்கள், நலன்புரி முகாம்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை 850 ஆகும். இவற்றுள் தற்போது வரை கடற்றொழில் ஈடுபட்டு வருகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 300 (இந்த எண்ணிக்கை சிலவேளை அதிகரித்திருக்கலாம்) ஆகும்.

இவ்வாறான நிலையில் மீள்குடியேற்ற அமைச்சு மயிலிட்டில் கடற்றொழில் செய்வதற்கென 5 வள்ளங்களை மாத்திரமே வழங்கியுள்ளது. 300 பேருக்கு வள்ளங்கள் தேவைப்படும் நிலையில் 5 வள்ளங்களையும் மீனவர்களுக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமையால் அதனை மீனவர்களிடம் வழங்காது மயிலிட்டி மீன்பிடி சங்கமே பொறுப்பேற்று வைத்துள்ளது. இது தொடர்பில் மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் ந.ரட்ணராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

மீள்குடியேற்ற அமைச்சால் எமக்கு தற்போது 5 வள்ளங்களே வழங்கப்பட்டுள்ளன. எமக்கு அதிகமான வள்ளங்கள் தேவைப்படும் நிலையில் 5 பேருக்கு மாத்திரம் வள்ளங்களை வழங்கினால் மீனவர்களுக்கு இடையில் பிரச்சனை ஏற்படும் என்பதால் மீள்குடியேற்ற அமைச்சு வழங்கியுள்ள 5 வள்ளங்களையும் எமது சங்கமே பொறுப்பேற்றுள்ளது. ஆகையால் அனைவருக்கும் வள்ளங்களை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

இடப்பெயர்வுக்கு முன்னர் மயிலிட்டி துறை மற்றும் வலி.வடக்கில் உள்ள ஏனைய துறைகள் ஊடாக கடற்றொழிலில் ஈடுபட்ட அனைத்து மீனவர்களுக்கும் மீன்பிடி வள்ளங்கள் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# வீட்டு உறுதிப்பத்திரங்கள் வழங்கல்


குருநகர் தொடர்மாடி குடியிருப்பாளர்களுக்கான வீட்டு உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடர்மாடி குடியிருப்பு முகாமைத் துவகுழுச்செயலாளர்க.ஏர்ஸைட் தலைமையில் இடம்பெற்றது. (இ-10-106)

# பாரம்பரியத்தைத்தேடி விழிப்புணர்வுத் திட்டம்

யாழ்ப்பணப் பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் "பாரம்பரியத்தைத் தேடி" விழிப்புணர்வுச் செயற்றிட்டம் எனும் கருத்தமர்வு எதிர்வரும் 02ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3,107,108)

# தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு–வர்ஜிகன் கமலகாந்தன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்–க.கஜன், கெஞ்சிரா–எஸ்.சண்முகப்பிரியன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-10-19)

# அதிக டெங்கு நோயாளர்கள் வலி.வடக்கில் இனங்காணல்


## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டி, இளவாலை, தெல்லிப்பழை, கீரிமலை பிரதேசங்களில் தற்போது டெங்கு நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளதால் டெங்குநோய் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்குமாறு தெல்லிப்பழை வைத்திய அதிகாரி பி.நந்தகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் இருக்கும் பிரதேசங்களை இனங்கண்டு உரியவகையில் புனரமைப்புச் செய்யுமாறும் வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் வலி.வடக்கு பிரதேச சபையினர் ஈடுபட்டு வருவதாகவும் அதேசமயம் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் காணிகளை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10-104)

# அதிக வேகம் ஆபத்து; ஆட்டோ தடம்புரள்வு


யாழ்.பல்கலைக்கழக வளாக வீதியில் இருந்து ஆடியபாதம் வீதி நோக்கி அதி வேகமாக வந்த ஆட்டோ ஒன்று பிறிதொரு ஆட்டோவை மோதித் தள்ளி உருண்டு புரண்டது. நேற்றுக்காலை இந்த விபத்து இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில்







நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மாலை திருவிழாவின் போது அடியவர் ஒருவரால் விநாயகர் மணற்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளதையும் முருகப் பெருமான் வீதியுலா வருவதையும் அலங்காரக் கந்தனுக்கு அடியவர்கள் கர்ப்பூரம் ஏற்றியுள்ளதையும் படங்களில் காணலாம்.

# நல்லூர் கந்தர் அனுபூதி கந்தபுராணம் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள்

நல்லூர் பெருந்திருவிழாவில் இவ்வாண்டு தொடக்கம் சுவாமி வீதியுலா வரும் வேளையில் கந்தரனுபூதி பாடும் மரபு தொடக்கிவைக்கப்பட்டுள்ளது.

மாலை 6.15 மணிக்கு சுவாமி தெற்கு வாயில் சண்முகர் கோபுரத்தை அடைந்தவுடன் அங்கு அனுபூதி பாடப்படுகின்றது. சண்முகர் கோபுரத்தைக் கிளிக்கோபுரம் எனவும் அழைக்கின்றனர். இதில் கிளி வடிவில் அருணகிரியார் உறைகிறார் என்பது நம்பிக்கை. கூடவே அருணகிரியாருக்கான சந்நிதானமும் எதிரே உள்ளது.

திருப்புகழ், திருவகுப்பு, வேல் ,மயில் சேவல் விருத்தங்கள் கந்தரலங்காரம் எனப் பாடிய அருணகிரி இறுதியில் பாடிய நூலே கந்தரனுபூதி. இந்நூலைக் கிளி வடிவில் இருந்தே அவர் பாடினார் எனக் கொள்வர்.

கிளி தானாக நினைத்து எதனையும் சொல்லாது. சொல்லிக் கொடுப்பதையே சொல்லக்கூடியது. எனவே அருணகிரி முருகன் சொன்னதையே கிளியாக இருந்து கேட்டு மானுடர்களுக்குச் செப்பினார் எனக் கொள்ளலாம். இதனால் கந்தரனுபூதியை முருக மந்திரம் எனவும் அழைப்பர்.

நல்லூரில் கொடியேற்ற நாளில் மாலை "ஆடும் பரிவேல் அணி சேவல்..." எனத் தொடங்கிய கந்தரனுபூதி அர்ப்பணம் நல்லதோர் அறிகுறி.

கந்தரனுபூதி பற்றிய விழிப்புணர்வு ஏனைய இடங்களிலும் ஏற்பட இது ஒரு களமாக அமையும் .என எதிர்பார்க்கலாம்.

இதேவேளை ஈசானத்தில் (வடகிழக்கு திசை) வழமைபோலத் திருவாசகம் பாடப்படுகின்றது. (இது கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது).

இதன் மறுபுறத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஆதீனத்தில் கந்தபுராண எழுச்சி விழாவை 28.07.2017 இரவு தொடக்கியது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தொடக்கி வைத்தார்.

நாவலரின் கந்தபுராண வசன நூலை மாணவர்கள் படித்துப் பயன்கொள்ள வேண்டும் என்பதற்காக 1500 ரூபா பெறுமதியான நூலை மாணவர்களுக்கு மாத்திரம் 500 ரூபாவுக்கு வழங்குகின்றனர். அவர்கள் அந் நூலை வாசிக்க வேண்டும் என்பதற்காக கந்தபுராண நூலறிவுப் போட்டி ஒன்றையும் நடத்துகின்றனர். இதற்காகப் மிகப் பெறுமதியான பரிசில்களை வழங்கவுள்ளனர். (இ-7)

# கந்தபுராண எழுச்சி விழா 3ஆம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழா "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" 3ஆம் நாள் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும்- இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் கலந்து கொள்வார்.

இதில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவை சைவப்புலவர் க.கனக துர்க்கா ஆற்றுவார். கலாபூஷணம் க.லோகேஸ்வரன் தன் குழுவினருடன் வழங்கும் திருமுறை அரங்கு நிகழ்வும் இடம்பெறும். (இ

# 'சைவசமய தத்துவம்' சொற்பொழிவு இன்று

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத்திருச்சபை நடத்தும் தெய்வீக சிறப்பு நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும்.

சைவப்புலவர் சிவஶ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் "சைவசமய தத்துவம்" எனும் தலைப்பில் சைவநெறிச் சன்மார்க்கர் க.ஈஸ்வரன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)




## நானிலம் காத்திடையா

நல்லையம் பதிதனிலே
நானிலம் காத்தருளும் நல்லைக் கந்தா
உந்தன் ஆலயம் நாடிவரும்
அடியவர் குறைகளை தீர்த்திடையா வேலவா
வேதனைத் தீயில் வெதும்பியழும்
எம் மக்கள் வேண்டுதலைத் தீர்த்திடையா நான்முகா
காணவில்லை என்ற பேர் கொண்டு
ஆண்டுகள் பல கழிந்தும் தேடி அலையும்
தொலைக்கப்பட்ட எம்மவர் உறவுகளை
ஒரு முறையேனும் கண்முன்னே காட்டிடையா சண்முகா

கஜானி பிறேம்குமார்,
வராகி அம்மன் கோவிலடி,
கொக்குவில்.



## கோடி கண்கள் வேண்டுமய்யா நல்லூர்க் குமரன் எழிலைக் காண

அலைகடல் என பக்தர்கள் வெள்ளம் திரண்டோடும் நல்லை
வீதியிலே வள்ளி, தெய்வானை சகிதம் தங்க மயிலேறிவருவோனே,
சித்தர்கள் வாழ்ந்து தடம் பதித்த நல்லை நகர் வீதியிலே
தன்னை நம்பி நாடி, ஓடி வந்த பக்தர்களின் குறை தீர்ப்பவனே
வானவர்கள் துயர் களைய கானமயில் மீதேறி;
சேனையோடு அசுரகுடி சிதைத்தவனே
தொல்லைகள் நீக்கி துயர் தீர்ப்பாய் வேலவனே
முல்லைச் சிரிப்பாலே அன்பர் துயர் தீர்ப்பவனே
நல்லைக் குமரன் எழிலைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா
நல்லைநகர் நாதா நம் மக்களுக்கொரு தீர்வை வெகு விரைவில் தா.

திருமதி.மலர்விழி கனகசபை,
சண்டிலிப்பாய்.

## வாழ்த்தி வணங்க வினை போமே!

நல்லூர் முருகன் நாமந்தனை உரைத்தால்
நல்லருள் நமை வந்து சேரும்! -அந்த
வல்லவனைத் தினமும் வணங்கித் துதிப்பவர்கள்
வாழ்வென்றும் ஈடேறும்!

கருணை மழை பொழியும் கந்தன் திருப்பாதம்
கருதி வணங்க வினை நீங்கும்! - அவன்
பெருமைதனை நாளும் பாடித் துதிப்போர்க்குப்
பேரின்பமே வாழ்வில் சேரும்!



தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதன்
தாள் பணிவோம் தினம் நாமே! - அவன்
வந்து குடிகொண்ட நல்லை நகர் மேவி
வாழ்த்தி வணங்க வினை போமே!

கீழ்கரவை.கி.குலசேகரன்
(ஓய்வு நிலை பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி)
ஆதர் சிறிசேன மாவத்த
அப்புத்தளை.

## எம் இனத்தை காத்தருள்வாய் தங்கத் தமிழ் முருகா

நல்லூர் பதியுறை நாயகனே நம் கடம்பா
நல்லோரை வாழ வைக்கும் நற்றவமே நல்லூராக் கந்தா
உலகம் போற்றும் விக்னேஸ்வரன் உடன் பிறப்பே மால் மருகா
வாள் எடுத்து போர் முடித்து பாராண்ட நம் தமிழினம்
வால் பிடித்து அல்லலுற்று அழிவதை நீ பாராயோ
வேல் எடுத்து வீசி இந்த வீணர்களை வீழ்த்தி
எம் இனத்தை காத்தருள்வாய் தங்கத்தமிழ் முருகா

பிளவத்தை பட்டங்கட்டி.

## நல்லைக்கந்த சந்தப் "பா"



தாயு மாகினை தந்தை யாகினை
தத்து வத்திலுன் விந்தை மாட்சியே
காயு மாகினை கனியு மாகினை
காண்ப யாவுமே கந்தன் காட்சியே
வாயு நீர்நெருப் பென்ற வைந்துமாய்
வந்த பூதமு முந்த னாட்சியே
நாயு மாகியே பேயுமான வெம்
நலிவு நீக்குவாய் நல்லைக் கந்தய்யா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவபாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய சேவைகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் சட்டரீதியானது

## பிரதி சபாநாயகர் சுமதிபால தெரிவிப்பு



(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் சட்ட ரீதியானது என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் அறிவித்திருந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது என கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

எனினும் வர்த்தமானி அறிவித்தல் சட்ட ரீதியானதே என தெரிவித்துள்ள பிரதி சபாநாயகர் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 43ன் அடிப்படையில் சட்ட ரீதியாக வர்த்தமானி அறிவித்தல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் எதிர்க் கட்சியினர் பாராளுமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (இ-7)

# இலங்கையில் சீனா அதிகளவில் முதலீடு

## அமைச்சர் ரவி தகவல்

(கொழும்பு)

இலங்கையில் சீனா அதிகளவில் முதலீடு செய்ய உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சீனப் பட்டுப்பாதை திட்டம் மேலும் நலன்களை இலங்கைக்கு கொண்டு வரும் என அவர் தெரிவித்தார்.

பண்டைய காலம் முதல் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் மிக நெருக்கமான உறவுகள் நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ள அவர் சீனா இலங்கையில் முதலீடு செய்வது வரவேற்கப்பட வேண்டியது எனவும் தெரிவித்தார். மேலும் இன்னமும் அதிகளவில் முதலீடுகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆணைக்குழு ஆயுளை நீடிக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லையென பேர்பெச்சுவல்ட் ரெசரீஸ் நிறுவனத்தின் சார்பான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆணைக்குழு விசாரணைகளின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதல் ஜூலை 25ஆம் திகதி வரை ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பெறப்பட்ட வாக்கு மூலங்கள் சட்டவிரோதமானது எனவும் பேர்பெச்சுவல்ட் ரெசரீஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறியுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி வர்த்தமானியின் மூலம் அனுமதியை பெற்றுக்கொடுத் திருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், பிணைமுறி விசாரணை அறிக்கையை தயாரிப்பதற்காக காலத்தை நீடிக்கலாமே தவிர சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக ஆணைக் குழுவின் காலத்தை நீடிப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என்றும் பேர்பெச்சுவல்ட் ரெசரீஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஜனாதிபதியாக மாறிய பிரசன்ன ரணதுங்க!



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 4ஆம் திகதி வரை ஒத்தி வைப்பதாக அறிவித்த பின்னர், கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் முறையற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அங்கு கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்துள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நாடாளுமன்ற செயலாளர் ஆசனத்தில் அமர்ந்துள்ளார். (இ-7)

# 07.2017 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவது கடற்பயணத்தின் போது கொந்துராசை அடைந்தார்.
- 1629 - இத்தாலியில் நேப்பிள்சில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1733 - ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது விடுதலைக் கட்டுநர் லாட்ஜ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1756 - ரஷ்யாவின் அரசி எலிசபெத்தின் வேண்டுதலுக்கிணங்க கட்டிடக் கலைஞர் பார்த்தலோமியோ ராஸ்ட்ரெல்லி கத்தரீன் அரண்மனையைக் கட்டி முடித்தார்.
- 1825 - பசிபிக் கடலில் மால்டன் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 - கலிபோர்னியாவில் 10வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஐ-58 அமெரிக்காவின் கடற்படைக் கப்பலை மூழ்கடித்ததில் 883 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1954 - எல்விஸ் பிரீஸ்லி முதற்தடவையாக பொது மேடையில் பாட ஆரம்பித்தார்.
- 1966 - உதைபந்தாட்ட உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி மேற்கு ஜேர்மனியை 4-2 என்ற கணக்கில் வென்றது.
- 1971 - அப்பல்லோ 15இல் சென்ற டேவிட் ஸ்கொட் மற்றும் ஜேம்ஸ் ஏர்வின் இருவரும் லூனார் ரோவர் வாகனத்துடன் சந்திரனில் இறங்கினர்.
- 1971 - ஜப்பானில் இரண்டு விமானங்கள் வானில் மோதிக் கொண்டதில் 162 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - பிரான்ஸ், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிடம் இருந்து வனுவாட்டு விடுதலை பெற்றது.
- 1997 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் "திரெட்போ" என்ற இடம்பெற்ற மண்சரிவில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1818 - எமிலி புரொண்ட்டி, ஆங்கிலேய எழுத்தாளர், கவிஞர் (இ. 1848)
- 1863 - ஹென்றி ஃபோர்ட், அமெரிக்க பொறியியலாளர், தொழிலதிபர், போர்ட் தானுந்து நிறுவனம் நிறுவனர் (இ. 1947)
- 1886 - முத்துலட்சுமி ரெட்டி, இந்தியாவின் பெண் மருத்துவர், சமூகப் போராளி (இ. 1968)
- 1917 - கே. குணரத்தினம், இலங்கைத் திரைப்படத் தயாரிப்பாளர், தொழிலதிபர் (இ. 1989)
- 1924 - மா. நன்னன், தமிழறிஞர், எழுத்தாளர்
- 1945 - பத்திரிக்கு மொதியானோ, நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர்
- 1947 - பிரான்சுவாசு பாரி-சினோசி, நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு மருத்துவர்
- 1947 - ஆர்னோல்டு சுவார்செனேகர், ஆத்திரிய-அமெரிக்க நடிகர், அரசியல்வாதி
- 1962 - யாக்கூபு மேமன், இந்தியத் தீவிரவாதி (இ. 2015)
- 1963 - லிசா குட்ரோ, அமெரிக்க நடிகை
- 1969 - சைமன் பேக்கர், ஆத்திரேலிய நடிகர்
- 1970 - கிறிஸ்டோபர் நோலன், ஆங்கிலேய-அமெரிக்க இயக்குநர்
- 1973 - சோனு நிகம், இந்தியப் பின்னணிப் பாடகர், நடிகர்
- 1982 - ஜேம்ஸ் அண்டர்சன், ஆங்கிலேயத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1898 - ஓட்டோ ஃபொன் பிஸ்மார்க், செருமனியின் 1வது அரசுத்தலைவர் (பி. 1815)
- 1914 - பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், தமிழறிஞர் (பி. 1862)
- 1961 - குஞ்சிதம் குருசாமி, திராவிட இயக்கத்தில் ஈடுபட்ட பெண் செயற்பாட்டாளர் (பி. 1909)
- 1969 - இ. சி. இரகுநாதையர், இலங்கையில் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவர்
- 2003 - கே. பி. சிவானந்தம், வீணையிசைக் கலைஞர் (பி. 1917)
- 2007 - இங்மார் பேர்ஜ்மன், சுவீடிய இயக்குநர் (பி. 1918)

சிறப்பு நாள்

- பன்னாட்டு நட்பு நாள்
- விடுதலை நாள் (வனுவாட்டு 1980)
- மாவீரர் நாள் (தெற்கு சூடான்)
- ஆட்கடத்தலுக்கு எதிரான உலக நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 80 | 120 | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 250 | 300 | 400 | 200 | 300 |
| தக்காளி | 140 | 200 | 120 | 160 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 70 | 80 |
| கோவா | 120 | 200 | 80 | 140 | 120 | 140 | 160 |
| கரட் | 160 | 300 | 200 | 200 | 240 | 200 | 240 |
| பூசணி | 80 | 120 | 110 | 80 | 80 | 100 | 120 |
| புடோல் | 60 | 100 | 50 | 80 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 100 | 80 | 90 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 180 | 150 | 150 | 140 | 180 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 300 | 200 | 200 | 200 | 280 |
| வெண்டிக்காய் | 40 | 120 | 50 | 100 | 120 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 | 140 | 140 | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 150 | 80 | 80 | 160 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 50 | 100 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 120 | 150 | 60 | 80 | 80 | 60 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 160 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 120 | 120 | 200 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 40 | 160 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 | 80 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 | 80 | 160 | 70 | 80 |
| தேங்காய (ஒன்று) | 70 | 60 | 60 | 65 | 40-60 | 60 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | - | 200 | 300 | - | 150 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 160 | 200 | 200 | 150 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 150 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 30 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | - | 50 | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க.பொதுச் செயலர் பதவியிலிருந்து துமிந்தவை ஜனாதிபதி நீக்க வேண்டும்

## டிலான் பெரேரா வலியுறுத்து

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து துமிந்த திசாநாயக்கவை ஜனாதிபதி நீக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித் துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 2020 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கமொன்றை நிறுவ, இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

கட்சியின் பொதுச் செயலாளரான துமிந்த திசாநாயக்கவை அந்தப் பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்க வேண்டும்.

அது ஜனாதிபதி கட்சிக்கு செய்யும் நல்லதொரு விடயமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட வேண்டும்



என்றும் அமைச்சர் டிலான் பெரேரா பரிந்துரைத்துள்ளார். (இ-7)

# வாகனம் மீது கல் வீசியவர் 14 நாட்கள் விளக்கமறியலில்

(கரணவாய்)

விசேட அதிரடிப் படையினரின் கவச வாகனம் மீது கல் வீசி தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசுவாமி உத்தரவிட்டார்.

குடத்தனைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையை தவிர்ப்பதற்காக களம் இறக்கப்பட்ட விசேட அதிரடிப் படையினரின் கவச வாகனம் மீது துன்னாலைப் பகுதியில் கற்கள் வீசித் தாக்குதல் மேற்கொண்டமை, ரயர்களை வீதியில் எரித்து போக்குவரத்தை தடுத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட துன்னாலையைச் சேர்ந்த சந்தேக நபரை பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போதே 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# இலங்கை நாடாளுமன்றத்தின் செங்கோலுக்கு ஏற்பட்ட ஆபத்து

இலங்கை நாடாளுமன்றத்தின் செங்கோல் நேற்று முன்தினம் பல உறுப்பினர்களிடம் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விவாதம் நடைபெற்ற போது உணர்ச்சிவசப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல முறை செங்கோலை தூக்கிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான சம்பவத்தை பலமுறை நாடாளுமன்றத்தில் அவதானிக்க முடிந்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் செங்



கோலை வெளியே எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் செங்கோல் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு பெருமளவான நிதியொதுக்கீடு

யுத்தத்தின் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு பெருமளவான நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் ஆய்வு செய்து பின்னர் அதனை கையாளவேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலில் பங்கேற்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த பிரதமர் சர்வதேசத்தின் ஊடாக குறித்த பகுதிகளுக்கு அதிகளவான நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் எனவும் கூறினார். யுத்தம் முடிவடைந்ததும் வலுவிழக்காமல் பாரிய சவால்களை எதிர்கொண்டு பயணிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

# தமிழர்கள் பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தை தரவேண்டும்

## செல்வம்.எம்.பி.வலியுறுத்து

வடக்கு-கிழக்கு மக்களை எந்தக் கொம்பனாலும் பிரிக்க முடியாது என நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகள் மற்றும் பொதுமக்களின் 34 ஆவது தியாகிகள் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் தேவாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அடைக்கலநாதன் இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு தொடரந்தும் உரையாற்றிய அவர், அரசாங்கம் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி முறையிலான தீர்வை தர மறுக்குமாயிருந்தால், தமிழர்களுக்கு பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தை தரவேண்டும் என சர்வதேசத்திடம் நியாயம் கேட்க தயார் எனவும் அவர் கூறினார்.

வடக்கு,கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதோடு சமஷ்டி முறையிலான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே தமது கொள்கை எனவும், கிழக்கு மாகாணமே கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு வித்திட்டதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் இரத்தத்தை சிந்திய இளைஞர்களுடைய வீரம் இன்று கொச்சைப்படுத்தப்படுவதாகவும், ஆயுதப் போராட்டத்திலும், அகிம்சை போராட்டத்திலும் தமிழர்கள் உச்சக்கட்டத்தை அடைந்த போதிலும், தமிழினித்திற்குள் ஒரு சில எட்டப்பன்கள் இருந்ததால் அவற்றை சாத்தியமாக்க முடியவில்லை எனவும் அவர் கூறினார்.

ஆயுதப் போராட்டத்தின் பலம் இன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலையில் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வை வென்றெடுப்பதற்காக கூட்டமைப்பு பிளவுப்படக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீதியால் சென்றவர் மீது தாக்குதல்

(கரணவாய்)

வீதியால் பயணித்த நபர் ஒருவரை மறித்த இருவர் தாக்கிவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை பின் தொடர்ந்து வந்த இருவர் மாலுசந்திப் பகுதியில் திடீரென இறங்கி அந்நபரை மறித்து சரமாரியாகத்தாக்கினர்.

இதன்போது வீதியில் சிறிய சனக் கூட்டம் கூட தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடியுள்ளனர். சம்பவம் அறிந்து நெல்லியடிப் பொலிஸார் அவ் விடத்திற்கு விரைந்த போதும் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடியுள்ளனர். (இ-60)

## வாரம் ஒரு தகவல்

### காந்தியடிகளும் கலேல்கரும்

காந்தியடிகள் ஒருமுறை ஷிமோகாவுக்குச் சென்றிருந்தார். அ்வருடன் காகா கலேல்கர் போன்றவர்களும் உடன் சென்றிருந்தனர்.

கலேல்கர் காந்தியடிகளிடம் இங்கே கெரஸப்பா நீர்வீழ்ச்சியை நாம் பார்க்க வேண்டாமா? என்று கேட்டார்.

எனக்கு நிறைய வேலைகள் என்றார் அண்ணல்.

இவ்வளவு தொலை வந்தும் இந்த நீர் வீழ்ச்சியைப் பார்க்காமல் போகலாமா? மறுபடியும் இங்கே வருகிறோமோ என்னமோ? என்றார் கலேல்கர்.

என்னால் இப்படியெல்லாம் மனம் போன போக்கில் சுற்றிக் கொண்டிருக்க நேரம் இல்லை. வேண்டுமானால் நீங்கள் போய்ப்பார்த்துவிட்டு வாருங்கள். மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க உங்களுக்கு ஏதேனும் புதிய செய்திகள் கிடைக்கலாம் என்று சொல்லி மறுத்துவிட்டார் காந்தியடிகள்.

உலகச் சிறப்புற்ற நயாகரா நீர்வீழ்ச்சியை விடவும் இது மிக உயரத்திலிருந்து வீழ்கிறதாம்; இதை நீங்கள் அவசியம் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினார் கலேல்கர்.

இதிலென்ன அதிசயம்? ஆகாயத்திலிருந்து விழும் மழைத் தண்ணீரை விடவுமா இது உயரத்திலிருந்து கொட்டுகிறது? என்று பதில் மொழிந்தார் காந்தியடிகள்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# ஆளில்லாமல் இயங்கும் ஆட்டோ இளைஞனின் புதிய கண்டுபிடிப்பு



ஆளில்லாமல் தூரத்தில் இருந்து கட்டுப்படுத்தும் வகையில் ஆட்டோவை வடிவமைத்துள்ளார் நுவரெலியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

நுவரெலியா களுகெலை பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த ருவான் குமார என்ற இளைஞரே இவ்வாறு தானியிங்கி ஆட்டோவை கண்டு பிடித்துள்ளார்.

ரிமோட் கொன்ரோல் ஊடாக இயக்கக் கூடிய வகையில் 5 நாட்களில் இதனை தயாரித்துள்ளார்.

இயந்திரவியல் தொழிலில் ஈடுப்பட்டுள்ள இந்த இளைஞன் எரிபொருள் ஊடாக இயங்கும் ஆட்டோவை ரிமோட் கொனரோல் ஊடாக இயங்க வைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி பலனளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



சமூக சேவையாளர் மாணிக்கம் ஜேசு சுதாகரன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கில் வசிக்கும் மாணிக்கம் ஜேசு சுதாகரன் ஆரம்பக் கல்வியை கல்முனை சிங்கள மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர் வகுப்புக் கல்வியை அம்பாறை டீஎஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலையிலும் முகாமைத்துவம் சந்தைப்படுத்தல் உயர் பட்டத்தினை அம்பாறை ஹாடி உயர் கல்வி தொழில்நுட்ப கல்லூரியிலும் கற்றார் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளதோடு சிங்களமொழியில் மிகச்சிறந்த தேர்ச்சியுடையவர் இலங்கையில் மிகவும் பிரசித்திபெற்ற தி எக்ஸ் பிறஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட் மற்றும் தி அசோஸி யேட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் (சிலோன்) லிமிட்டெட்டில் (லேக்ஹவுஸ்) பிராந்திய விற்பனை முகாமையாளராகவும் கடமையாற்றியதோடு லேக்ஹவுஸ் யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளராகவும் நீண்டகாலம் கடமையாற்றியுள்ளார். (இ

# ஆன்மீக அருளுரைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞானயக்ஞம்) எதிர்வரும் 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை முதல் 21.08.2017 திங்கட்கிழமை வரை இரவு 7.15 மணிமுதல் 8 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறவுள்ளது. சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா இவ் அருளுரைகளை வழங்கவுள்ளார். (இ-3)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் ஏ.வி.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## கத்திக்குத்தில் மனைவி பலி! கணவனுக்கு வலைவீச்சு

நேற்று முன்தினம் இரவு பள்ளம யோதயாகெலே பிரதேசத்தில், கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகிய மனைவி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் குறித்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த கணவன், கத்தியினால் மனைவியை குத்திக் காயப் படுத்தியுள்ளார்.

கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயத்துக்குள்ளான மனைவி உடனடியாக சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய கணவன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாகவும், கணவனைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஒப்பந்தம் செய்தாலும் நடைமுறைப்படுத்த நாம் விடமாட்டோம்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது எனவும், இதற்கு எதிராக சகலரையும் ஒன்றிணைத்துப் பாரிய போராட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்க எந்தவிதத்தில் ஒப்பந்தங்கள் செய்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கப்படாதெனவும், அது வெறும் ஒப்பந்தமாக கடதாசியிலேயே இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தபோதும், சபையை அவசர அவசரமாக ஒத்திவைத்து விவாதிப்பதற்கு காணப்பட்ட சந்தர்ப்பத்தையும் அரசு இல்லாமல் செய்துள்ளது.

இவ்வாறான நிலையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்கள் சீனாவுக்கு வழங்கும் ஒப்பந்தம் கடதாசியில் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்போவதில்லை எனவும் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒவ்வொரு பெண்களும் அநீதிக்குத் துணிவுடன் நீதியைபெற வேண்டும்

# அனந்தி அறிவுரை

ஒவ்வொரு பெண்ணும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு துணிவுடன் நீதி பெற்றால் மாத்திரமே சமூகத்தில் ஏனைய பெண்களையும் காப்பாற்ற முடியும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான சூழலில் வடபகுதிப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தில் மகளிர் விவகார அமைச்சு வெறும் பெயரளவில் மாத்திரம் இருந்து வந்தது. இப்போது தான் அதை விரிவாக்குவது தொடர்பாக கொள்கை முன்னெடுப்புக்களை வகுத்து வருகிறோம்.

இந்த அமைச்சுக்கு நிதி போதியளவு கிடைக்கப்பெறவில்லை. அது தொடர்பில் மத்திய அரசுடன் பேசியுள்ளோம். வெகு விரைவில் இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

போருக்கு முன்னர் பெண்கள் சகல துறைகளிலும் ஆளுமையை வெளிப்படுத்தி பலம் பொருந்தியவர்களாக இருந்தார்கள். போருக்கு பின்னர் பெண்கள் பலவீனமான நிலையில் இருப்பதை பார்க்கிறோம். உடல், உள ரீதியான தாக்கத்தால் மிகவும் சோர்வடைந்து இலகுவில் ஏமாறக்கூடிய நிலை தற்போது காணப்படுகிறது.

இவ்வாறான நிலை தொடர்ந்து நீடித்தால் எமது பெண்கள் எவ்வாறு தமது தேவைகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக எப்போது போராடப்போகிறார்கள் என்பது கேள்விக்குறியான விடயமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை அனைத்துத் துறைகளிலும் நடைபெற்ற வண்ணமே உள்ளது. அதிலும் வீட்டு வன்முறை தொடர்சியானதாக உள்ளது. பெண்களுடைய உரிமை என்னவென்று தெரியாமல் கூட அதிகளவாக பெண்கள் கிராமப்புறங்களில் உள்ளனர்.

அண்மைக்காலமாக இளம் பருவ பெண்பிள்ளைகள் பிழையான திசைதிருப்பலுக்கு சிக்குண்டுள்ளார்கள். பெண்பிள்ளைகளின் நிலை மிகவும் பரிதாபமானதாக உள்ளது. தற்போது பிள்ளைகள் மேல் பெற்றார்களுடைய கவனிப்பு குறைந்து போகிறது. ஒரு பிள்ளைக்கு அவருடைய தாய் தான் முதலில் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளின் நடவடிக்கைகளில் உன்னிப்பாக இருக்க வேண்டும்.

மேலும் போரின் பின்னர் மறுதார திருமணம் அதிகரித்துள்ளது. இதனால் பிள்ளைகள் பலர் பாதிப்படைந்துள்ளார்கள். பிள்ளைகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் படுகிறார்கள். பிள்ளைகளை பாதுகாப்பதற்கு பெண்களுக்கான பாதுகாப்பான மையம் இருக்க வேண்டும். அதை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தற்போது தாய்மார்களும் தொடர் நாடகங்களில் மூழ்கி உள்ளதால் பிள்ளைகளுடைய விடயங்கள் குறித்து பேசுவதற்கு நேரத்தை ஒதுக்குவது குறைவாகவுள்ளது அது மிகவும் கவலைக்குரிய விடயமாகவுள்ளது. இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

அரசியலில் பெண்களின் பிரிதிநிதித்துவம் 30 வீதம் மட்டுமல்ல 50 வீதம் வந்தாலும் வரவேற்கத்தக்கது. ஏனெனில் பெண் என்பவள் தனது வீட்டில் அனைத்து அமைச்சு பதவிகளையும் வகிக்கிறார். பெண்களால் முடியும். ஆனால் வேலைப்பளுக்கள் அதிகமானால் செயற்பட முடியாது. எனவே ஒவ்வொரு பெண்ணும் முயற்சி எடுக்க வேண்டும். பக்கபலமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணும் தனக்கு நடக்கும் அநீதிகளுக்கு நீதி கேட்க வருவது குறைந்த அளவில் உள்ளது. சகித்துக்கொண்டு போகும் பெண்களாகத்தான் உள்ளார்கள். அவ்வாறு தான் எமது கலாசாரமும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் இருந்து வெளிவர வேண்டும். நீதிக்காக போராட வேண்டும். அநீதிக்கு இலக்கான பெண் நீதியைப் பெற்றுக்கொண்டால் மாத்திரம் தான் ஏனைய பெண்களையும் காப்பாற்ற முடியும்.

ஆணாதிக்கம் கூடிய சமூகம் எம் மத்தியில் உள்ளது. அவர்களுடைய செயற்பாடுகளும் ஆதிக்கம் கூடியதாக தான் சில இடங்களில் இருக்கிறது. எனவே நாம் தலை நிமிர்ந்து எமக்குரிய பாதுகாப்புடன் வாழ்வதற்கு எமக்கான கொள்கைகளை முன்னெடுத்து செல்வது அவசியம் என மேலும் தெரிவித்தார். (இ-9)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6642 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 62 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6824 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/6646 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma/ தனியார் தொழில்<br>தொ.இ: G/6832 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 9 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:QS சவுதி<br>தொ.இ: B/6649 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 59 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர்<br>தொ.இ: G/6833 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 42<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/கமம்<br>தொ.இ: B/6651 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 23 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc தாதி/அரச தொழில்<br>தொ.இ: G/6834 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்துக் கல்லூரி சமூகத்தின் கல்விக்கான நடைபயணம்









யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் உலகெங்கும் பரந்து வாழும் யாழ். இந்துக் கல்லூரியின் 1992 ஆம் ஆண்டின் உயர்தரப் பிரிவு மாணவர் குழாமும் பாடசாலை சமூகமும் இணைந்து வடக்கு மாகாணத்தின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்கான கல்விக்கான நடைபயணம் எனும் விழிப்புணர்வு ஊர்வலத்தை நேற்றுக் காலை நடத்தின. இந்த ஊர்வலத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- உ.சாளின்)

## தோல்விக் கணிப்பால் குழப்பம் கூட்டு எதிரணி மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெற்றோல் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தமாக இடம்பெற்ற வாக்கெடுப்பில், தோல்வியை முன்கூட்டியே அறிந்து கொண்டதாலேயே கூட்டு எதிரணியினர் குழப்பத்தை ஏற்படுத்தியதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

"நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் கூட்டு எதிரணியினர் போலியான பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றார்கள். கொல்லன்னாவை பிரச்சினை பற்றி பேச்சுக்களை ஆரம்பித்து வழமை போல நாடாளுமன்றத்தை குழப்புவதே கூட்டு எதிரணியின் முயற்சியாக அமைந்திருந்தது.

மகளிர் பாடசாலை மாணவிகள் சிலரும் கூட நாடாளுமன்ற அமர்வினை பார்வையிட வந்திருந்த நிலையில் கூட்டு எதிரணியினரின் பேயாட்டத்தை கண்டு அஞ்சி ஓடினார்கள். பாடசாலை மாணவியர் மக்கள் பிரதிநிதிகளை பார்த்து அஞ்சி ஓடுவதென்பது பாரதூரமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்துகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## புலமைப்பரிசில் பெற்று இந்தியாவுக்கு பயணம்

(யாழ்ப்பாணம்)



யாழ். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஜெ.சத்தியேந்திரன் நவீன தொழில்நுட்ப முறைகளில் தென்னைச் செய்கை பயிற்சியினை பெற்று பெங்களூர், கேரளாவில் அமைந்திருக்கும் தென்னை ஆராய்ச்சி நிலையங்களைப் பார்வையிட்டு வருவதற்காகப் பயணம் மேற்கொண்டுள்ளார். வட மாகாணத்தில் ஜெ.சத்தியேந்திரன் மட்டுமே இந்திய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், பெங்களூர் இலங்கை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையும் இணைந்து வழங்கிய புலமைப்பரிசில் மூலம் இந்தியாவின் கர்நாடக, கேரள மாநிலங்களுக்கு பயணமாகியுள்ளார். (இ)

## இந்தியாவுடனான பொருளாதார உறவு இலங்கைக்கு பாதகமாக இருக்காது



(கொழும்பு)

இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது இலங்கைக்குப் பாதகமாக இருக்காது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்ட அவர்,

"திருகோணமலை துறைமுக எண்ணெய்க் களஞ்சியத்தை இந்திய- இலங்கை கூட்டுக்குழு ஆய்வு செய்யும். தொழிற்சங்கங்களுட னும் கூட ஆலோசிக்கப்படும்.

இந்தியாவுடன் ஆழமான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இது இலங்கைக்குப் பாதகமாக இருக்காது

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக, 2 - 3 பில்லியன் முதலீடுகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பிரதமர் கூறினார். (இ-7)


## நீரில் மூழ்கிய கண்டி நகரம்

(கொழும்பு)

கண்டியின் பல பகுதிகளில் நேற்று திடீரென பெய்த அடைமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக் மத்திய கால்வாயில் நீர் நிரம்பியமையினால் கண்டி, சுதுஹூம்பல பிரதேசத்திலுள்ள பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் பெய்த அடைமழையை தொடர்ந்து சில பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. (இ-7)




YMCA JAFFNA

**Young Men's Christian Association, Jaffna Proudly Presents**

**The Best Performance Appreciation Award**
for students of G.C.E A/L Examination 2016, Northern Province

First Rank :35,000/= Cash Prize, Shield & Certificate
Second Rank: 25,000/= cash Prize,Shield & Certificate
Poobalsingam Debate shield to the Winner of inter school Debate
Each Participant will receive a cash voucher to Rs. 5000/=
Arumuganavalar Award and a Cash award of Rs.50,000/= to a teacher who has served long years in vanni Area

*Chief Guest*
**Professor R.Vigneswaran**
Vice Chancellor
University of Jaffna
Thirunnelvely

*Guest of Honor*
**Mr.M.C.Francis**
DFFS- Canada

*Special Guest*
**Mr.Nirmal De Fonseka**
The President
The National Council of the YMCAs of Sri Lanka

**Dr. T.Sathiyamoorthy**
The Director,
Teaching Hospital
Jaffna.

**Mr.S.Amirthalingam**
The President
National College of Education
Jaffna.

We have great pleasure in inviting the Members and well - wishers to participate at the Award Ceremony to be held on Monday the 31st July 2017 at 4.00pm, at the main Hall, YMCA.

President, Board of Directors,
General Secretary & Staff, YMCA Jaffna
(C-9191)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமூகத்தினரை நெறிப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை- முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இயற்கையிலேயே சிறப்பான எமது இளையோரின் நடவடிக்கைகளை குழப்புவதற்கும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் ஈடுபடவைப்பதற்கும் திட்டமிட்ட ஒன்றிற்கு மேற்பட்ட குழுவினர் முனைவது வெளிப்படையாக தெரிகின்ற போதும் இளையசமூகத்தினரை ஆற்றுப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இனியதொரு உலகத்தைப் படைக்கும் பாரிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தையொட்டிய கந்தபுராண எழுச்சி விழா நிகழ்வு நேற்று முன் தினம் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இப் புதிய உலகில் இளைய சமூகமானது தான் செல்லுகின்ற பாதை சரியானதா தவறானதா என்று சிந்திக்கக் கூட நேரம் அற்ற நிலையில் ஓடிக் கொண்டிருக்கின்றது.

இவ் இளைய சமூகத்தினருக்கு இயற்கையில் இருந்து தாம் விடுபட்டு வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிவதில்லை. கையில் இருக்கும் கருவிகளே காத்திரமானது என்ற கருத்தில் உலாவருகின்றனர். ஆகவே வாழ்வியல் தத்துவங்களையும் வாழ்வியல் முறைமைகளையும் சமயத்தின்பால் கூடிய ஈடுபாடுகளையும் அவர்கள் மத்தியில் ஏற்படச் செய்ய வேண்டியதற்கான அவசியம் எழுந்துள்ளது.

சமயங்கள் வெறுஞ் சடங்குகளாக மாறியதால்தான் இளம் சமூகத்தினர் அவற்றை வெறுக்கின்றார்கள். சமயம், மதம் ஆகியன எமக்கு என்ன நன்மையைத் தரமுடியும்? என்று கேட்கின்றார்கள்.

சமயமானது உங் களை அமைதி உடையவர்களாக மாற்றும்,அன்பு செலுத்துபவர்களாக மாற்றும், ஆன்ம சிந்தனையுடைய வராக மாற்றும், உண்மைக்குக் கட்டுப்பட்டவராக மாற்றும்,நீதி வழி செல்பவராக மாற்றும் என்று அவர்களுக்கு நாம் எடுத்துக் கூற முன்வரவேண்டும். அதற்கு எமது வாழ்க்கை முறை உதாரணங்களாக அமைய வேண்டும்.

எனவே இனியதொரு உலகத்தைப் படைக்கும் பாரிய பொறுப்பு சமய ஆர்வலர்களிடமும் அறிவுசார் பெருந்தகைகளிடமும் அனுபவ முதிர்ச்சி பெற்ற பெரியோர்களிடமும் எங்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது.

இன்று இளைஞர் யுவதிகளின் நடவடிக்கைகளை உற்று நோக்கும் போது பய உணர்வு எமக்கு ஏற்படுகின்றது. காரணம் அவர்கள் நாம் இளமைக் காலங்களில் இருந்தது போல் இல்லாமல் பல புறச்சூழல் பாதிப்புக்களால் நலிவடைந்துள்ளார்கள். அவர்களின் இந்தநிலையைத் தொடரவிட்டால் அவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்றகேள்வி இயற்கையாகவே எழும்.

பலசிறப்புப் பட்டங்களை தம்மகத்தே கொண்டிருந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இன்று மிகக் கேவலம் நிறைந்தவர்களாக, கல்வி அறிவுகளில் பின்தங்கியவர்களாக, காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக மாறிவருவது எம்மைத் திகைக்க வைக்கின்றது.

இவ்வாறான பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத நிலையில் ஏங்கித் தவிக்கின்றனர். அவர்களை திருத்தி நல்லவர்களாக மாற்றி கல்வியில் கூடிய கரிசனையுடையவர்களாக மாற்றியமைப்பதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வி முதியவர்கள் யாவரையும் இன்று பீடித்திருக்கின்றது.

ஒரு சில விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்றிருந்த நிலை இனி என்றென்றும் வரப்போவதில்லை. நாம் வன்முறைகளைக் கண்டு அதன் சூழலில் வளர்ந்து வந்துவிட்டோம். எனவே வன்மம் எமது மனதிலே தேங்கியிருப்பதை நாம் உணரவேண்டும்.

பயமும் பீதியும் எம்மைப் பீடித்திருப்பதை நாம் உணரவேண்டும். பயம்எமது நடவடிக்கைகளை ஆற்றுப்படுத்தி வருவதையும் நாம் உணரவேண்டும். காமத்துடன் இயைந்த பாலுணர்வும் போதைப்பொருள் மற்றும் சாராயநாட்டமும் எமக்குப் பாதிப்பைத் தந்து வந்துள்ளன என்பதையும் உணர வேண்டும். இவ்வாறு எமது நிலையை நாம் உணரத் தலைப்பட்டால் பாதிக்கும் அந்தநிலைகளில் இருந்து விடுபடலாம்.

இங்குதான் எமது முன்னோர்கள் எமக்கு உவந்தளித்த காவியங்களும், புராணங்களும் உதவி அளிக்கின்றன என்று கூறலாம்.

எமது ஆலயங்களில் சில காலங்களுக்கு முன்பு கந்தபுராணப் படிப்பு. பிள்ளையார் கதை, பெருங்கதைப் படிப்புக்கள் என பலபுராண படிப்புக்களை ஓதுவார்களும் சட்டம்பிமாரும் எமக்குத் தந்துதவினர்.

ஒருவர் புராணபடலங்களை சுருதியுடன் படிக்க மற்றையவர் அதற்குபயன் கூறுவதும் அதனை அடியவர்கள் சூழவிருந்து கேட்டு இன்புற்று மீள்வதும் அன்றாட காட்சிகளாக அமைந்திருந்தன. நல்லூர் ஆலய முன்றலில் இப்போதும் கூட அவ்வாறான சில புராணப் படிப்புக்கள் அதற்குரிய பயன் சொல்லுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதையும் அதனை செவிமடுப்பதற்கு இரண்டு அல்லது மூன்று முதியவர்கள் மட்டும் அமர்ந்திருப்பதையும் அவதானித்திருக்கின்றேன்.

அந்த நிலைமாற வேண்டும்: கதாகாலட்சேபங்கள் மீண்டும் எமது இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கை பற்றி எடுத்துக் கூற முன்வரவேண்டும்.

இன்றைய இளம்சமுதாயத்தினர் கந்தபுராணத்தைப் புதிய கோணத்தில் இருந்து பார்க்கப், படிக்க நாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். புராணத்தின் கதாப்பாத்திரங்கள் எவ்வெவற்றை எமக்குப்பாடங்களாக மறைமுகமாகக் கூறப்பார்க்கின்றன என்பதை நாம் இளைஞர்களுக்கு எடுத்துக்கூற வேணடும்.

எமது இளைய சமூகம் சமூக ஒருமைப்பாட்டுடனான ஒரு பண்பட்ட தலைமுறையாக மாற முயல வேண்டும். எமது இளைஞர் யுவதிகள் இயற்கையிலேயே சிறப்பானவர்கள். அவர்களின் நடவடிக்கைகளை குழப்புவதற்கும் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதற்கும் திட்டமிட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கோஷ்டிகள் முனைவது வெளிப்படையாக தெரிகின்ற போதும் இளைய சமூகத்தினரை ஆற்றுப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை.

தத்துவங்களையும் பணபாடுகளையும் போற்றிப் பாதுகாக்கவேண்டிய சினி மாத்துறை வன்முறையையும் பலாத்காரத்தையும் ஏனையவர்களை மதிக்காத தன்மையையும் போற்றிப் பாராட்டுவதற்கு உகந்ததாக அமைகின்றன.

பாதிப்புக்கள் தரும் எமது சூழலில்இருந்துஎமது இளைய தலைமுறையை காப்பாற்ற வேண்டுமாயின் ஆலய சூழல்களும் அங்கு நடைபெறும் ஆன்மீக உரைகளும் கருத்தரங்கங்களுமே அவர்களுக்கு நல்வழியை காட்ட வல்லன என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது என மேலும் தெரிவித்தார். (8-9)

## மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.



வவுனியாவில்தெரிவுசெய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கான மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

20 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த திட்டம் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் வவுனியாவில் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வைத்தார். (8)

## வவுனியாவில் அரசியல் கலந்தாய்வு

தமிழ் மக்களை பொறுப்பேற்பது யார்? எனும் தலைப்பில் வவுனியாவில் அரசியல் கலந்தாய்வு கூட்டமொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த அரசியல் கலந்தாய்வு கூட்டம் வவுனியா நகரசபை வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகியுள் ளது.

வவுனியா சமூக ஆர்வலர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கலந்தாய்வு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர்களான ஜீ.ரி. லிங்கநாதன், ம.தியாகராஜா, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஆய்வாளர் சி.அ.சோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்களுடன், மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



கனகராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் நெற் களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. கமநல சேவை நிலைய வளாகத்தில் அதன் குழுத் தலைவர் ம.புவனேந்திரன் தலைமையில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்ற இவ் அடிக்கல் நாட்டு விழாவில் கமநல சேவை திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் ம.சிவாஜி, விவசாய போதனாசிரியர்களான பா.சுரேஸ்குமார், சி.சிவரூபன் மற்றும் கமநல சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர். (7-8-60)



வவுனியா பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வட மாகாணத்தில் ஆற்றுகை கலைஞர் ஒன்றியத்தின் வவுனியா ஆடல் அணியினர் ஆற்றுகை செய்யும் "கரையேற மறுக்கும் ஓடங்கள்" எனும் கீழத் தேய ஆடற்கலை நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராசா, [illegible] பிள்ளை. முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா ஆகியோர் கலந்துகொண்ட போது.

## மழையில் நனைந்தது வவுனியா

நாட்டில் நிலவி வந்த தொடர் வரட்சிக்குப் பின்னர் வவுனியாவில் நேற்று பிற்பகல் முதல் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் தொடர் வரட்சி நிலவி வந்த நிலையில் வவுனியாவும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக விவசாயிகள் பாரிய நட்டத்தினை எதிர்கொண்டிருந்ததோடு, குடிநீருக்காக மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

தொடர் வரட்சி நிலைக்கு பின்னர் வவுனியாவில் பல பகுதிகளில் மழை பெய்து வருகின்றதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சிங்கக்கூட்டத்துக்கு ஆடு தலைமை வகிக்க முடியாது.
>
> - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எதிர்க்கட்சித் தலைமையை எடுத்து பாராளுமன்றையும் பழுதாக்கினோம்

ஜனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சி என்பது ஒரு பலமான சக்தி.

ஜனநாயகம் நிலைக்கவும் ஆளுந்தரப்பு ஏதேச்சதிகாரமாக நடக்காமல் இருக்கவும் எதிர்க்கட்சி மிகவும் நிதானமாகவும் விழிப்புடனும் செயற்பட வேண்டும்.

ஜனநாயகம் எங்கெல்லாம் உயர்வுபெற்றிருக்கிறதோ அங்கெல்லாம் எதிர்க்கட்சிகள் தமது காத்திரமான பங்களிப்பை வழங்குவதைக் காணலாம்.

அதேநேரம் எதிர்க்கட்சி என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்பது பொருளல்ல.

சரியானதை, நியாயமானதை நிலைநாட்டுவதுதான் எதிர்க்கட்சியின் கடமைப்பாடு.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இலங்கை பாராளுமன்றத்தில் இருந்தபோது, அவர் ஆற்றிய உரைகள் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களை அதிர வைத்தது. சிங்கள ஊடகங்கள் அவரின் உரைக்கு முக்கியத்துவம் கொடுத்தன.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பேசுகிறார் என்றவுடன் பாராளுமன்ற ஆசனம் அலைக்டலென நிறைந்து கொள்ளும். உறுப்பினர்கள் உரையைச் செவிமடுக்க தங்களைத் தயார்படுத்திக் கொள்வர்.

இதனால்தான் தமிழர்களுக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைக்கக்கூடாது என்று சிங்கள அரசியல்வாதிகள் கருதினர். அதற்கான திட்டங்களையும் தீட்டி அதனை அமுலாக்கினர்.

எதிர்க்கட்சித் தலைமை தமிழ்த் தரப்புக்கானதாக இருந்தால், ஆட்சியாளர்கள் பலவற்றுக்கு பதிலளிக்க வேண்டும்.

வேலைவாய்ப்பு, நிதி ஒதுக்கீடு, பிரதேச அபிவிருத்தி, கட்டுமானப் பணிகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அவர்கள் கேள்வி கேட்பர்.

இதனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கும் சரியான ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும்.

வேலைவாய்ப்பில் பெரும்பான்மையை முன்னிலைப்படுத்த முடியாமல் போகும் என்ற பயம் சிங்கள ஆட்சியாளர்களை தொட்டுக் கொண்டது.

இதனால் தமிழர்களுக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைக்காமல் பாராளுமன்றத் தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

விகிதாசாரத் தேர்தல் முறையோடு தமிழர்களுக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைப்பது தடுக்கப்பட்டது.

இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர் தரப்பே எதிர்க்கட்சித் தலைமையில் இருக்கிறது என்று யாரேனும் கூறினால் அது தவறு.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் முடிவின்படி உண்மையான எதிர்க்கட்சித் தலைமை தமிழர்களுக்கு உரியதல்ல. அது சிங்களத் தரப்புக்கே கிடைக்க வேண்டும்.

தேசிய அரசு உருவாகியதால் தேசிய அரசை எதிர்க்காமல் அவர்களோடு ஒத்துப்போகக் கூடியதான எதிர்க்கட்சி தேவைப்பட்டபோது,

அதற்கு நாங்களே பொருத்தம் என்று அவர்கள் ஆதரித்தனர். அந்தக் கணிப்பு இம்மியும் பிசகாமல் நடக்கிறது.

ஆனால் ஜனநாயகத்துக்கான எதிர்க்கட்சியின் வகிபங்கு என்பது இப்போது அங்கு இல்லை.

ஆக, தமிழர் தரப்பு எதிர்க்கட்சித் தலைமையை எடுத்ததால் எல்லாம் தொலைந்தது என்பதாகவே நிலைமை முடியப் போகிறது.

## 1095 கோடி ரூபாயை கொள்ளையிட்ட தேரர்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு சீட்டுக்களை விற்பனை செய்தன் மூலம் கிடைத்த ஆயிரத்து 95 கோடி ரூபாயை தம்புள்ளை ரன்கிரி விகாரையின் முன்னாள் பொறுப்பாளர் இனாமலுவே சுமங்கள தேரர் கொள்ளையிட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ள ரன்கிரி விகாரையினதற்போதைய பொறுபபாளர் கொடகம மங்கள தேரர் இது குறித்து அமைச்சர் அகில விராஜ் காரியவசத்திற்கு அறிவித்துள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை விகாரைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ஆயிரத்து 95 கோடி ரூபாயை முன்னாள் பொறுப்பாளர்,

மத்திய கலாசார நிதியம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் தம்புள்ளை விகாரையின் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றில் வைப்புச் செயயாது அந்த பணத்தை கொள்ளையிட்டுள்ளதாக மங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நிதி கொள்ளை சம்பந்தமாக துரிதமாக கவனம் செலுத்தி விசாரணைகளை நடத்துமாறும் மங்கள தேரர், அமைச்சரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார். (மு-11)

## விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 77 பேர் இன்று இந்தியா திரும்பல்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சிறையில் இருந்த 66 மீனவர்களையும் வவுனியா சிறையில் இருந்த 11 மீனவர்களையும் அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

77 மீனவர்களும் இன்று காரைக்கால் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இந்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

எல்லை தாண்டியதாக தமிழக மீனவர்கள் 92 பேர் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

160க்கும் மேற்பட்ட படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிரதமர் மோடி ராமேஸ்வரத்தில் நடந்த அப்துல் கலாம் மணிமண்டபம் திறப்பு விழாவில் பங்கேற்றார்.

அப்போது, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் இலங்கை அரசு 77 மீனவர்களையும் விடுதலை செய்துளளது. (மு-11)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**செவ்வாய் தோஷம் பார்ப்பது எப்படி?**

ஆண் ஜாதகத்தில் 2,7ஆம் இடம் தோஷம்

பெண் ஜாதகத்தில் 4,12 ஆம் இடம் தோஷம்

ஆண், பெண் ஜாதகத்தில் 8,2 ஆம் இடம் தோஷம்

**விதிவிலக்கு**

மிதுனம், கன்னி இரண்டாம் இடமாகி செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை

ரிஷபம், துலாம் பன்னிரெண்டாம் இடமாகி செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை

மேஷம், விருச்சிகம் நான்காம் இடமாகி செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை

மகரம், கடகம் ஏழாம் இடமாகி செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.

தனுசு, மீனம் எட்டாம் இடமாகி செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை. (தொடரும்)

## சிறுநீரக நோய் தடுத்திட

வளர்ந்தோர் தினசரி 3 லீற்றர் வரை சுத்தமான நீர் அருந்துவோம்.

அலுவலகத்திற்கு, பாடசாலைக்கு செல்லும்போது குடிநீரை வீட்டிலிருந்து கொண்டு செல்வோம்.

விவசாய இரசாயனப் பாவனையைக் குறைப்போம்.

சேதன விவசாய செய்கையில் ஈடுபடுவோம்.

வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவோம்.

**3 வருடங்களுக்கு ஒரு தடவையாவது சிறுநீர், இரத்தப் பரிசோதனை செய்திடுவோம்.**

யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரா.சம்பந்தன் மட்டு.விஜயம்

(மட்டக்களப்பு)

சுவாமி விபுலானந்தரின் 125ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு, மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தின் நடராஜானந்தா நினைவு மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30க்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

அகில இலங்கை இந்துமாமன்றமும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இந் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (மு-11)

## அரச நிறுவனங்களுக்கு 3 ஆயிரம் மொழி அதிகாரிகள்

மும்மொழி அமுலாக்கல் கொள்கையை நடைமுறைபடுத்த அரச நிறுவனங்களுக்கு சுமார் 3000 அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று தேசிய நல்லிணக்கத்துறை அமைச்சர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கோரிக்கையை அரசாங்கத்திடம் தாம் முன்வைத்துள்ளதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரிகளை நியமிக்காது மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது கடினமான பணியாகவே இருக்கும் என்று அவர் ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தர சித்திகளுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமைபெற்றவர்கள் இந்த பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, நியமனங்களின் பின்னர் இவர்களுக்கு சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மனோ கணேசன குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## பொலிஸ் வேடத்தில் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே பொலிஸ் சீருடை தரித்து திரைப்படத்தில் நடித்துள்ளார்.

யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று காலை திரைப்படம் ஒன்றுக்கான படப்பிடிப்பு நடைபெற்றது.

குறித்த திரைப்படத்தில் பொலிஸ் கதாபாத்திரம் ஏற்று வட மாகாண ஆளுநர் நடிக்கும் காட்சி படமாக்கப்பட்டது. (மு-11)

## மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (மு)

## சாஸ்திரங்கள்

✦ பிரம்மாவின் புத்திரரான வசிஷ்ட மகரிஷியே கருடன் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. கருடனை சேவிப்பது வசிஷ்டரை சேவிப்பது போலாகும்.

-விஷ்ணு புராணம்





## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

நீலமேகன் நெஞ்சம் நெகிழ்ந்தான். அன்னையின் கரங்களைக் கனிவுடன் பற்றி ஆறுதல் சொன்னான். அவ்வளவுதானே அம்மா? உன் மனக்குறையை மாற்றுவதற்கு நானாயிற்று. அடுத்து வரும் கலியுகத்தின் வகுளாதேவியாக உதித்து வராஹமூர்த்தியின் சேவையில் சில காலம் இருந்து வா. திருமலையில் இருக்கும் அந்த ஆசிரமத்தை நாடி நான் வருவேன். உன் மைந்தனால் உன்னிடம் உண்டு வளர்வேன். காலம் கனியும்போது எனக்கு நீயே கல்யாணம் பண்ணி வைத்து அந்தக் காட்சியைக் கண்டுகளிக்கலாம் என்றான்.

அன்னை யசோதை அகமகிழ்ந்து அமைதி பெற்றான். அவள் காலம் முடிந்ததும் உடலைத் துறந்தான்.

கலியுகம் பிறந்தது.யசோதாதேவி வகுளாதேவியாக வந்து பிறந்தாள். விதி அவளை வராஹமூர்த்தியின் ஆசிரமத்தில் கொண்டு சேர்த்தது. மகன் வரப்போவதை அறியாமல் வராஹமூர்த்தியின் சேவையில் வாழ்க்கையை நடத்தி வந்தாள். (தொடரும்)

# பரபரப்பான ஆட்டத்தில் போட்டியை சமநிலை செய்தது வட மாகாணம்



இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் 23 வயதுக்கு உட்பட்ட மாகாணங்களுக்கு இடையிலான இரண்டு நாட்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் முடிவடைந்த குழு நிலை போட்டிகள் மூன்றும் சமநிலை கண்டன.

இதில் வடமாகாண அணி வட மத்திய மாகாணத்துடனான போட்டியில் மயிரிழையில் தோல்வியை தவிர்த்துக் கொண்டது. இதன்மூலம் மாகாணங்களுக்கு இடையிலான போட்டியில் வட மாகாணம் முதல் முறை ஆட்டம் ஒன்றை சமநிலையில் முடித்துக்கொண்டது. இதற்கு முந்தைய மூன்று குழு நிலை போட்டிகளிலும் வட மாகாணம் தோல்வியையே சந்தித்தது.

வட மாகாணம் எதிர் வட மத்திய மாகாணம் கொழும்பு பிளும்பீல்ட் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வட மாகாண அணி துடுப்பாட்டத்தில் சோபித்த போதும் வட மத்திய மாகாணம் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சிறப்பாக ஆடியதால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

வட மாகாணம் தனது முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்களை பெற்ற நிலையில்ஆட்டத்தின் கடைசி நாளான்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த வட மத்திய மாகாணம் 55.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 235 ஓட்டங்களை பெற்று முன்னிலையை அடைந்தது. சன்தீப நிசன்சல ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களை பெற்றதோடு யொஹான் மெண்டிஸ் 63 ஓட்டங்களை பெற்றார்.

வட மாகாணத்திற்கு துடுப்பாட்டத்தில் அரைச்சதம் பெற்ற முஹமது அல்பர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு வி. ஜதூஷனும் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் முதல் இன்னிங்ஸில் 45 ஓட்டங்களால் பின்தங்கிய வட மாகாண அணி இரண்டாவது இன்னிங்ஸில் அபாரமாக துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 45.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை பெற்ற நிலையில் வட மத்திய மாகாண அணிக்கு 231 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இதன்போது வடமாகாண அணிக்காக துலாஜ் ரணதுங்க 74 ஓட்டங்களை பெற்றார். சதுரங்க அபேசிங்க 36 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் வெற்றி இலக்கை நோக்கி கடைசி நாள் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த வட மத்திய மாகாணம் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதும் வெற்றி இலக்கை எட்ட இன்னும் 31 ஓட்டங்களே தேவைப்படும் நிலையில் ஆட்டநேரம் முடிவுக்கு வந்தது.

ஆட்ட நேர முடிவின்போது வட மத்திய மாகாண அணி 38.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 200 ஓட்டங்களை எடுத்திருந்தது. அபாரமாக ஆடிய தினெத் ஹேவதன்திரி ஆட்டமிழக்காது 121 ஓட்டங்களை பெற்றார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சமநிலை தவிர்ப்பு உதையில் வதிரி டயமன்ஸ் வெற்றி



உரும்பிராய் சென்.மைக்கேல் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (28.07.2017) அன்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸை எதிர்த்து ஞானமுருகன் மோதிய போட்டி 1-1 என சமநிலையில் முடிவுற்றதால் சமநிலை தவிர்ப்பு உதையில் 5-4 என்ற கோல்கணக்கில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது ஞானமுருகன் அணி. (க)

# நாவாந்துறை சென் நீக்கிலஸ் வி.க. அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி



உரும்பிராய் சென்.மைக்கேல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் நாவற்குழி அன்னை விளையாட்டு கழகத்தினை எதிர்த்து நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டு கழகம் மோதியது.

இப் போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# பொன்னையா சிவபாதசிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் கலைச்சுடர் சம்பியன்





அரியாலை சனசமூக நிலையம் தனது 68 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அமரர் பொன்னையா சிவபாதசிங்கம்(குணம்) ஞாபகார்த்தமாக அவரது மருமகன் க.துஷ்யந்தனின் ஆதரவில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் அண்மையில் இடம்பெற்ற போட்டியில் கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் வி.க்ழகம் முதலாம் இடத்தினையும் கலைமகள் வி.கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. (க)

# மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டம்

## தெல்லிப்பழை யூனியன்- வின்ஸ்ரார் இன்று களத்தில் மோதல்

யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் வின்ஸ்ரார் அணியும் இறுதியாட்டத்தில் இன்று மோதவுள்ளன.

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வலைப்பந்தாட்டத் திடலில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் திருமதி சுபாசினி மதியழகனும், சிவன் அறக் கட்டளை நிறுவுநர் கணேஸ்வ ரன் வேலாயுதமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் வேணுகா சண்முகரெத்தினமும், பவுண்டேஷன் ஒவ்குடநஸின் வடக்கு மாகா ணத்தின் இணைப்பாளர் எட்வேட் எடினும் கலந்துகொள்ளவுள்ளனர். (க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்

## -வரதராஜப் பெருமாள் வேண்டுகோள்

(திருகோணமலை)

மாகாணசபைகள் தங்களுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்துவதுடன், அவற்றில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல தீர்மானங்களைக் கொண்டு வரவேண்டும் என முன்னாள் ஒன்றிணைந்த வட.கிழக்கின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.



திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகள் தமக்கான அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானங்களைக் கொண்டு வரவேண்டும். இதன்மூலமே மாகாண சபைகள் தமக்கான பல அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் மக்களுக்கான சிறந்த ஆட்சியினை வழங்க முடியும்.

மூன்று இனங்களும் உள்ள இந்த கிழக்கு மாகாணத்திலே மக்கள் ஒற்றுமையாக வாழ முடியுமென்ற தோற்றப்பாட்டினை ஆட்சியாளர்கள் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் ஆட்சியாளர்களால் பாரபட்சமற்ற முறையில் மக்கள் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இங்கு நிலைமை அப்படியல்ல என்பது தெரிகின்றது என வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.(மு-11)

### அமைச்சின்...

இதேவேளை வெளிவிவகார செயலராக கடமையாற்றிய எசல வீரகோன் சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் புதிய செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (மு)

### கறுப்பு ஜூலை...

சுமந்த வலிகளை எம் இளைய தலைமுறை அறிவதோடு தளர்ந்திடாத உரிமைக்கான உணர்வுடன் பயணித்திட உதவும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்த்தேசியத்தின்பால் பற்றுள்ள அனைத்து உறவுகளையும் கட்சி பேதங்களையும் தாண்டி இம் மாபெரும் நினைவேந்தலில் பங்குபற்றிடுமாறு உரிமையுடன் அழைத்து நிற்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-9)

### பிரியங்கர...

மன்றத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

நாடாளுமன்றத்தில் இவ்வாறு நடந்து கொள்வது நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறும் செயலாகும். அதுமட்டுமல்ல, நாடாளுமன்ற செயலாளர் கதிரையில் அமர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே அழைப்பு மணி அடித்தார். இவ்வாறான நடவடிக்கைகளுக்காக இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் திலங்க சுமதிபால. (மு)

### தமிழ் மக்கள்...

பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் பேரவைக் கூட்டம் இடம்பெறும். தமிழ் மக்கள் பேரவையின் இதற்கு முந்திய கூட்டம் திருகோணமலையில் நடந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

### 2ஆம் திகதி...

மக்கள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

அரச வளங்களை தனியார்மயப்படுத்துவது, சைட்டம் நிறுவனத்தை மூட நடவடிக்கை எடுக்காமை, எட்கா உடன்படிக்கை, காணாமல்போனவர்கள் தொடர்பான சட்டம், தேர்தல் ஒத்திவைக்கப்படுவது ஆகிய காரணங்களை அடிப்படையாக கொண்டு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்த இந்த அமைப்பு தீர்மானித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், மக்கள் விடுதலை முன்னணி, தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், மாணவர் அமைப்புகள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

### அம்பாந்தோட்டை...

அதிகாரமுமில்லை. இந்த நடவடிக்கையானது வியாபார நடவடிக்கையல்ல, இது அரசியல் நடவடிக்கை.

சீன அரசால் இந்த துறைமுகத்தை உரிமம் பெற்றவுடன் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பா எங்களுடன் முறுகல் நிலைக்கு வருவார்கள். 99வருட குத்தகைக்கு கொடுத்த பின் நான்கு பரம்பரை வரும்வரை எம்மால எதுவும் செய்ய முடியாது. இந்த ஒப்பந்தம் நிறைவு பெற்றவுடன் 99 வீதம் கப்பல் அம்பாந்தோட்டைக்குச் செல்லும். கொழும்புத் துறைமுகம் நீச்சல் தடாகமாகவே இருக்கும். அம்பாந்தோட்டை சீனாவின் காலனியாகும். ஆகவே நான் இதை வன்மையாக எதிர்க்கின்றேன் என்றார். (மு)

### புகையிரதம்...

வில் சாவகச்சேரி சங்கத்தானையில் குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதிப் புகையிரதம் சங்கத்தானைப் பகு தியை அண்மிக்கும் பொழுது பிரதான வீதிக்கு செல்வதற்காக புகையிரதத்தை கவனிக் காது புகையிரதக் கடவையை கடந்து செல்ல முற்பட்ட போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பண்டத் தரிப்பைச் சேர்ந்த சிங்காரம் சிவச்செல்வன் (வயது-58) என்பவரே பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-85,89,60)

### பிரதான கட்சி...

கடும் நிலைப்பாட்டில் இருந்து செயற்படுவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுப்பது எனவும் இரு தலைவர்களும் தீர்மானித்துள்ளனர்.

இதனை தவிர கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி புதிய அரசாங்கத்தை அமைத்த போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதான வாக்குறுதியான ஊழல், மோசடி, குற்றச் செயல்கள் சம்பந்தமான விசாரணைகளை துரிதப்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்தவும் இரண்டு தலைவர்களும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா வீட்டில் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பிறிதொரு கூட்டம் நடை பெற்றது. இதில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் அரசாங்கத்திலிருந்து விலகுவதென அதில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி குறித்த உறுப்பினர்கள் விலகினால் அரசாங்கத்தில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 25ஆக குறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

# வடக்கு கிழக்கில் தொடரும் பெண்கள் மீதான பாலியல் சுரண்டல்

## சர்வதேச அனர்த்த நிறுவனம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின் பின்னரும் தொடர்ந்தும் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்க அதிகாரிகள், தன்னார்வ தொண்டு நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் போன்றோர் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு பெண்களை துஷ்பிரயோகம் செய்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதிலும் வீட்டு வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், வடக்கு கிழக்கில் இவ்வாறான சம்பவங்களின் எண்ணிக்கை அதிகளவில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச அனர்த்த நிறுவனம் இது பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆயுத போராட்டம், இராணுவமயமாக்கல், கலாசார காரணிகள் போன்றவற்றினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் பாலியல் வன்கொடுமைகள் பதிவாகின்றன என சுட்டிக்காட்டியுள்ளது.

அரச அதிகாரிகள், தன்னார்வ தொண்டு நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், இராணுவப் படையினர் உள்ளிட்டவர்கள் தம்மை துஷபிரயோகம் செய்வதாக பல பெணகள் குற்றம் சுமத்தியுள்ளனர். காணாமல் போனவர்களை கண்டுபிடித்துக் கொடுப்பதற்கு, பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்வதற்கு, வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இவ்வாறு ஆண்கள் பாலியல் லஞ்சம் கோருவதாகத் தெரிவித்துள்ளனர். பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் குறுகிய கால அடிப்படையில் ஆண்களுடன் பாலியல் தொடர்புகளைப் பேணி பொருளாதார நலன்களை அடைந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த இரண்டு மாகாணங்களிலும் பால் நிலை சமத்துவமின்மை அதிகளவில் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களுக்காக நீதி நிலைநாட்டப்படும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.(மு)

# வரலாற்றில் நேற்றையநாள் துரதிர்ஷ்டவசமான நாள்

## -மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வரலாற்றில் நேற்றையதினம் துரதிர்ஷ்டவசமான ஒரு நாள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் பொழுதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர்,

ஜே.ஆர்.ஜயவர்தன அபகீர்த்தியான இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திட்டார். இன்று அவரது மருமகன் ரணில் விக்கிரமசிங்கவும் அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் பல தலைமுறைகள் கனவு கண்டன. அதிர்ஷ்டவசமாக எமக்கு அந்தக் கனவை மெய்ப்படச் செய்ய முடிந்தது.

உரிய முகாமைத்துவத்தின் அடிப்படையில் லாபமீட்டக்கூடிய அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

அரசாங்கம், நாட்டின் முக்கிய சொத்துக்களை நட்டமடையச் செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் வழிமுறை ஒன்றை பின்பற்றி வருகின்றதென குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார். (மு-11)

# வட மாகாண சபையின் செயற்பாடுகளில் குறைபாடு

## -ஜேர்மன் அதிருப்தி



போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது குறித்து வட மாகாண சபை காட்டிவரும் அக்கறையின்மை தொடர்பில் ஜேர்மன் அரசு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்துள்ள கொழும்புக்கான ஜேர்மன் தூதுவர் தலைமையிலான பிரதிநிதிகள் வட மாகாண முதலமைச்சருடன் நடத்திய சந்திப்பின் போதே இந்த அதிருப்தியை தெரியப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்த கொழும்புக்கான ஜேர்மன் தூதுவர் தலைமையிலான பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் வைத்து மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடல்களை நடத்தினர்.

இதன்போது போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் அதிக முதலீடுகளை மேற்கொண்டு புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் பொருளாதார விவகாரங்கள் குறித்துமே ஆராயப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வட மாகாண முதலமைச்சரும் இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தினார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் முன்னிலையில்...

டுத் தற்கொலை செய்துள்ளார்.

நிரஞ்சன் - சாலினி ஆகிய இருவரும் காதலித்துத் திருமணம் முடித்துள்ளதுடன், சில வருடங்களில் தொழில் நிமிர்த்தம் நிரஞ்சன் வெளிநாடு சென்றிருந்தார்.

வெளிநாடு சென்ற கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் கடந்த பல நாட்களாகத் தொலைபேசியில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சம்பவ தினம் இருவரும் தொலை பேசியில் உரையாடிய போது, இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றியுள்ளதாகவும் இதனால் மனமுடைந்த மனைவி வீட்டில் யாருமில்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தூக்கிட்டு தற்கொலை செய்வதை கணவர் நேரடியாகக்காணொளியூடாக பார்க்கும்படி செய்து விட்டு தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத கணவர் மாதகலில் தனது வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் பலசரக்குக் கடையொன்றை நடத்தி வரும் தனது மாமனாருக்கு (மனைவியின் தந்தையாருக்கு) தொலைபேசி மூலம் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பெண்ணின் தந்தை வீட்டுக்குச் சென்று பார்த்த போது மகள் தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், அங்கு சென்ற பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-11)

# கறுப்பு ஜூலை நினைவேந்தல்...

பத்து நான்கு வருடங்கள் கழிந்து விட்டன. ஆனாலும் அதன் தாக்கம் தமிழர் மனங்களிலிருந்து இன்னமும் அகலவில்லை. இலங்கையின் வரலாற்றில் கறைபடிந்த தினங்களாகவே 1983 ஆடி 23, 24, 25 ஆகிய தினங்களில் இடம்பெற்ற திட்டமிட்ட படுகொலை அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத காயமாக - துயராக உள்ள அந்த நாட்களின் வலிகளை எண்ணிப்பார்க்கவும் முடியாதுள்ளது.

எம் இனம் எதிர்நோக்கியதோர் கறுப்பு தினமாக உலகமெங்கும் பரந்துவாழும் எம் உறவுகளால் நினைவேந்தல்கள் செய்யப்பட்டு வருவது நாம் அறிந்ததே.

அந்த வகையில் எமது வரலாற்றையும் எம் வலிகளையும் மறக்காது அடுத்த சந்ததியினருக்கும் கடத்தும் வகையில் ஆடிக்கலவரதினத்தை தமிழ் இளையோராகிய நாமும் கட்சி பேதங்களை தாண்டிய தமிழ்தேசியத்தின்பால் பற்றுள்ளவர்களாய் வடகிழக்கு மாகாணங்களின் குறித்த சில மாவட்டங்களில் நினைவு கூர எண்ணியுள்ளோம்.

உண்மையில் 23ஆம் திகதி இவ் நினைவேந்தலினை செய்திருக்க வேண்டினும் அத்தருணத்தில் யாழ்குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக இன்று யாழிலும் இவ் நினைவேந்தலை உணர்வுடன் நினைவு கூர ஏற்பாடு செய்துள்ளோம். இதனூடாக எம் இனம் 15

☛

# சமையல்...

லிட்ரோ நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று வருகின்றன.

சர்வதேச சந்தையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு அமைய கடந்த வருடம் டிசம்பர் மாதம் சமையல் எரிவாயுவின்விலை 25 ரூபாயினால் குறைக்கப்பட்டது. (மு-11)


## பணியாளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் மருத்துவ உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிற்கு பணியாளர் தேவை (பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு : 077 125 8025 (9977)

## ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

அனுபவம் மிக்க ஆசிரியரால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும் (9972)

தொடர்பு : 077 658 9443

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-9189)



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் முன்னணி நிறுவனமான US International Company தனது புதிய கிளையை திறக்கவுள்ளதால் அதற்கான பதவி வெற்றிடங்களுக்காக பின்வரும் இடங்களில் இருந்து கோரப்படுகின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா

**வரவேற்பாளர் - Trainee, விநியோகஸ்தர் - Trainee, முகாமையாளர்- Trainee, கிளை முகாமையாளர்- Trainee இவற்றுக்கு**

- முன்அனுபவம் அவசியமற்றது.
- வயதெல்லை 18 - 30.
- O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- 03 தொடக்கம் 06 மாதகால பயிற்சி நெறி.
- பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 12000/-
- பயிற்சியின் பின் நிரந்தர வருமானம் 65000 +
- மருத்துவ காப்பீடு, ETF, EPF உட்பட
- வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு முன்னுரிமை.
- தங்குமிட வசதி இலவசம்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் இவ் இடங்களில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. (9978)

**யாழ்ப்பாணம்: 0777009820, கிளிநொச்சி, முல்லைத்தீவு: 0765727243, மன்னார்: 023 225 1886**

## வேலையாள் தேவை

நல்லூரில் சமையல் வேலை தவிர்ந்த ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு அனுபவமான ஆள் தேவை.

தங்குமிடம், உணவு வசதிகள் செய்து தரப்படும் (9979)

தொடர்புகளுக்கு : 077 284 9705

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
♦ யாழ்ப்பாணம் ♦ கிளிநொச்சி ♦ நெல்லியடி ♦ பருத்தித்துறை ♦ வல்வெட்டித்துறை ♦ சாவகச்சேரி

## காணி விற்பனைக்கு

தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து 1 km தூரத்தில் உள்ள முச்சந்திக்கு (புத்தூர், நிலாவரை தெற்கு, புன்னாலைக் கட்டுவன்) அருகில் 21 பரப்பு விவசாயக் காணி விற்பனைக்கு உண்டு. (9974)

தொடர்பு : 077 844 9361

## வீடு வாடகைக்கு

சிவன் பண்ணை வீதியில் (Northern Hospital) அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (05.08.2017க்கு முன் தொடர்பு கொள்ளவும்.) (9966)

தொடர்பு: 0778699382

## உடனடி வேலைவாய்ப்பு

20 பேர் மட்டும் தேவை

முழுநேர வேலைவாய்ப்புக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமை இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

01. Administrative 02. As. Manager 03. Supervisors (9980)

- வயதெல்லை 18-30 வரை
- அனுபவம் அவசியம் இல்லை
- உணவு தங்குமிட வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு: 077 455 1997, 077 574 1700

## கார் வாடகைக்கு

கார் தினசரி வாடகைக்கு உண்டு - (சுஸ் கார்)
Per day - 100 km - 3000/=
தொடர்பு : 077 152 3899, 077 185 3748 (9955)

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகர மத்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் வெற்றுக் காணியும் விற்பனைக்குண்டு (9975)

தொடர்பு : 077 990 68 67

## விற்பனைக்கு

மொறிஸ் மைனர் கார் 1-XXXX விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 071 031 9219 (9955)

## தொழிற்சாலை கட்டிடம், மாடிவீடு விற்பனைக்கு

பிரதான வீதியை முகப்பாக கொண்ட தொழிற்சாலை அல்லது வைத்திய சாலை அல்லது கல்யாண மண்டபம் நடாத்தக்கூடிய பெரிய கட்டிடங்கள், சகல வசதியுடன் கூடிய பெரியமாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 600 1701 (9976)

## விற்பனைக்கு

இத்தாலி மரப்பட்டறை
● ஒரு கியூப் ரிப்பர் ● வடி
ஏனைய உபகரணங்கள் 35 KW ஜெனரேட்டர் வெல்டிங் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. (9976)

தொடர்பு : 077 600 1701

## CALL TAXI சேவை

புத்தம் புதிய யப்பான் கார்.
உள்ளூர், வெளியூர் சேவை கள் மிகக் குறைந்த கட்டணங் கள்.

விபரங்களுக்கு: 076 793 4206 (9678)

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com (C-9175)

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி |
| முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை |


## 1 ஆம் ஆண்டும் 65 ஆம் நாள் நினைவஞ்சலியும்



பிறப்பு : 12.05.1939 இறப்பு : 10.08.2016

அமரர் வைரமுத்து சிவலிங்கம்

திதி : 30.07.2017



பிறப்பு : 23.11.1950 இறப்பு : 24.05.2017

அமரர் சிவலிங்கம் கனகமணி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில் ஈடுபட்டு
கல்விச்சுடர் ஏற்றி. குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டு
பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த எங்கள்
உயிர்த் தெய்வங்களே!

உங்கள் பிரிவுத்துயர் எங்கள்
நெஞ்சை விட்டகலவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் நீங்காத நினைவுகளுடன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (9973)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 128

வள்ளுவர் ஆண்டு 2048 30.07.2017 தொலைபேசி : 021 222 3378




# டுமீல்... டுமீல்...

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** வித்தியாவின்ர கொலை வழக்கு பற்றி கடந்த ஆலடி மாநாட்டில கதைத்தம். ஆனால் கடந்த சனிக்கிழமை எங்கட நீதிபதி இளஞ்செழியன் ஐயா மீது துப்பாக்கிச்சூடு நடந்திருக்குது பார்த்தியளே.

**விதானையார்:** எங்க சுடு பார்ப்பம் எண்டு தன்ர மச்சான் விட்ட சவாலுக்காகத் தான் பொலிஸைச் சுட்டதாக பொலிஸாரிட்ட சரண் அடைந்தவர் சொல்லியிருக்கிறார் பார்த்தியளோ.

**கங்காணி:** கடவுளே! சுடு எண்டவுடன சுட்டுத் தள்ளுற அளவில நிலைமை இருக்குது.

**வாத்தியார்:** என்னவா இருந்தாலும் நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச்சூடு தொடர்பில நீதியான விசாரணை நடத்தப்பட்டால் அன்றி மற்றும்படி உண்மையைக் கண்டறிவது கஷ்டம்தான்.

**பண்டிதர்:** தமிழகத்துச் சினிமாப்படங்களில வாற மாதிரியான காட்சியள எங்கட மண்ணில நேரில பார்க்கிறம்.

**சாத்திரியார்:** நீதிபதி மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்ற செய்தியைக் கேட்டவுடனேயே எங்கட மக்கள் பதறிப் போயிட்டினம். போதாக்குறைக்கு நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி அம்மன் கோவில் வேட்டைத்திருவிழாவில இரவு நேரம் வெடியள் கொளுத்த பழைய படியும் துவங்கிற்றுது போல எண்டு நினைத்து அக்கம் பக்கத்துச் சனங்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்ட ஆரம்பித்தவியலாம்.

**கங்காணி:** கோயில் திருவிழாக்களில இப்ப வெடி கொளுத்திற ஒரு கலாசாரம் வந்திருக்குது. இலட்சக்கணக்கான ரூபா செலவில வெடி கொளுத்துகினம்.

**மூப்பர்:** வெடி கொளுத்துகிற காசை ஏழைச் சனங்களுக்கு- ஏழைப் பிள்ளைகளின் கல்விக்கு எண்டு கொடுத்தால் அதால மனிதம் வாழும். என்ன செய்யிறது எல்லாம் பகட்டு வாழ்க்கை என்றாயிற்று.

**வாத்தியார்:** வடக்கு மாகாண சபையில முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுகின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் ஊடாக தங்கட சதித்திட்டத்தை அரங்கேற்றுகினம் பார்த்தியளோ.

**பண்டிதர்:** ஓமோம் அமைச்சர்கள் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கை தொடர்பில முதலமைச்சர் உரையாற்றும்போது தானும் சில கருத்துக்களை சொல்லவேண்டுமெண்டு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டவர். அதற்கு அவைத் தலைவர் மறுக்க ஏதோ தான் அவைத்தலைவரின் மறுப்பை எதிர்ப்பது போல எதிர்க்கட்சித் தலைவர் வெளிநடப்பு செய்தவர்.

**கங்காணி:** அப்படி வெளி நடப்புச் செய்தவர் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக ஆளுநரின் அலுவலகத்திற்குப் போனவரல்லோ.

**விதானையார்:** பெரும்பான்மை இருக்கிற இடத்தை ஆதரிக்கிறது தன்ர கடமை எண்டு பெரும் கதையளும் விட்டவர்.

**பண்டிதர்:** நீங்கள் ஏன் அவரைக் குறை சொல்லுறியள். அவர் நீட்டோலை வாசிக்கிறதுக்கு நேரம் ஒதுக்கி விசேட சபைக் கூட்டம் வைத்து வசதி செய்து கொடுக்கிறவியளின்ர சதித்திட்டத்தையல்லோ நீங்கள் சாடவேண்டும்.

**மூப்பர்:** பண்டிதர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. தமிழரசுக் கட்சியில இடம் தரலாம் என்பது போல காட்டாப்புக்காட்டி அந்தாளுக்கு ஆசை ஏற்படுத்துகினம். அவரும் அடுத்த தேர்தலில தமிழரசுக் கட்சியில போட்டியிடலாம் எண்டு நம்பியிருக்கிறார்.

இருந்து பார்த்தால் தெரியும் கடைசி நேரத்தில தமிழரசுக்கட்சி என்ன செய்யுமெண்டு.

**வாத்தியார்:** மகிந்த ராஜபக்ஷவின்ர அரசாங்கத்தோட சேர்ந்து எங்கள் தமிழ்ச் சனத்தின்ர உயிரை எடுக்கிறதுக்கு கொழும்பில இருந்து திட்டம் தீட்டிக் கொடுத்தவர் இப்ப நல்லாத் துள்ளிக் குதிக்கிறாராம். காலம் கனியட்டும் அவற்ற நாச வேலையள நாங்கள் அம்பலப்படுத்துவம்.

**கங்காணி:** அது சரி வாத்தியார் எங்கட சித்தார்த்தன் எம்.பிக்கும் சம்பந்தர் ஐயாவுக்கும் அவ்வளவு நல்லதில்ல போல.

**வாத்தியார்:** ரெலோ செல்வம் அடைக்கலநாதன் சம்பந்தரோட நிண்டவரல்லோ. பிறகு மாகாண சபை உறுப்பினர் அமைச்சர் டெனீஸ்வரனை தமிழரசுக் கட்சி தங்கட பக்கம் இழுத்தபோது தான் செல்வத்தார் அதிர்ந்து போனார்.

அடநாசமறுப்பு, பாராளுமன்ற பிரதித் தலைவர் பதவியை எனக்குத் தந்து என்னை ஆசுவாசப்படுத்திப்போட்டு என்ர கட்சியை உடைக்கும் வேலை செய்யினம் எண்டு தெரிந்து கொண்டார். அதுமாதிரித்தான் இப்ப சித்தருக்கும் நடக்குது.

**கங்காணி:** என்ன வாத்தியார் சொல்லுறியள் கொஞ்சம் விளங்கக்கூடியதாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:** வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் வெற்றிடத்திற்கு தங்கட பிரதிநிதியைத் தான் நியமிப்பினம் எண்டு சித்தர் நினைத்திருக்கிறார்.

ஆனால் தமிழரசுக் கட்சி இன்னொருவரை உறுப்பினராக நியமிக்கத் திட்டம் போட்டிட்டுது. இதன் போதுதான் சித்தருக்குத் தெரிந்தது ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இப்ப மனிசனைக் கடிக்கிற சம்பவம் நடக்குது எண்டு. அதால தான் சித்தர் கடுமையாக ஒரு கடிதத்தை எழுதி சம்பந்தருக்கு அனுப் பியிருக்கிறார். இனி என்ன நடக்குதெண்டு பார்ப்பம்.

இப்படி வாத்தியார் சொல்ல அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## சம்பந்தருக்கும் சித்தருக்கும் அவ்வளவு நல்லதில்லையாம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீதிக்கு ஆபத்து



# விரிவான விசாரணை மூலம் உண்மையை கண்டறியுங்கள்

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலக்கு வைத்து கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30' மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வீதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நாடு பூராகவும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சரத் ஹேமச்சந்திர உயிரிழந்தார். அதேவேளை மற்றுமொரு மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது என்பதை அனைவரும் அறிந்து கொண்டனர்.

அதற்கு அவர் முன்னிலையில் நடந்துவரும் பல முக்கிய வழக்குகள் காரணமாகயிருந்தன என்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால், நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் இலக்கு நீதிபதி இளஞ்செழியன் அல்ல என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் விஜயவர்த்தன உடனடியாக மறுத்திருந்தார்.

அதேவேளை இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக நேரடியாக விசாரணை மேற்கொண்ட பொலிஸ் உயர் அதிகாரிகளும் நீதிபதியை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்று கூறினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (25.07.2017) யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பிரதான சந்தேக நபர் வழங்கிய வாக்கு மூலத்தில் "சுடச் சொன்னார் நான் சுட்டேன்" என்றும் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தனது மச்சானுடன் தான் போட்ட சவால் காரணமாக நடந்தது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்து மூன்று தினங்கள் கழிந்து சரணடைந்த சந்தேக நபர் வழங்கிய வாக்குமூலத்தில் கூட நீதிபதியை இலக்கு வைத்து தான் சுடவில்லை என்று கூறவில்லை.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டின் இலக்கு நானே என்று நீதிபதி இளஞ்செழியன் கூறிய பின்பும் பொலிஸார் தமது முடிவை மாற்றி விசாரணைகளை முன்னெடுக்க முயற்சித்ததாக தெரியவில்லை.

நீதிபதியை இலக்கு வைத்து நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்பே அதுவும் சந்தேக நபர் கைது செய்யப்படுவதற்குள் பொலிஸார் எவ்வாறு உறுதிப்பாட்டுடன் கூற முடியும்.

சம்பவத்தை நேரில் கண்டு, துன்பத்தை அனுபவித்த நீதிபதியின் குற்றச்சாட்டை பொலிஸார் எதற்காக உடனடியாக நிராகரிக்க வேண்டும்.

நீதிபதி இளஞ்செழியன் மீது இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்று குற்றவாளியைக் கைது செய்வதற்கு முன்னரே அவசரப்பட்டது ஏன்? எனப் பல கேள்விகளை பொலிஸாரிடம் - பல தரப்பட்டவர்களும் முன்வைத்துள்ளனர்.

நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை உறுதிப்படுத்தினால் நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் என்ற அச்சத்தால் பொலிஸார் இவ்வாறு அவசரப்பட்டனரா? என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது.

எனவே, ஆயுதக் கலாசாரமற்ற அமைதியான வாழ்க்கையை இனியாவது வாழ்வோம் என்று நினைக்கும் தமிழ் மக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விரிவான பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூடு நீதிபதியை இலக்கு வைத்து நடந்ததா? இல்லையா? என்பதை விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

பொலிஸார் மீதும் நீதித்துறை மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும்.

இது போன்ற சட்டவிரோத- சமூக விரோதச் சம்பவங்கள் இனியும் தொடர அனுமதிக்கக் கூடாது.

புங்குடுதீவில் மாணவி வித்தியா கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் தப்பிக்க உதவியதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளதைப் போன்று எதிர்காலத்திலும் நடக்கக்கூடாது. அவ்வாறு நடந்தால் பொலிஸார் மீது பொது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை சிதைந்து போவதோடு சட்டவிரோத நடவடிக்கைகளும் அதிகரிக்கும்.

எனவே, சட்டத்தின் காவலர்களாக பொலிஸார் செயற்பட வேண்டும். நல்லூரில் நடந்த துப்பாக்கிச் சூடு தற்செயலானதா? திட்டமிட்ட குற்றச்செயலா? என்பதை விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரும் முன்வைக்கும் முக்கிய கோரிக்கையாகும்.



எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில் உங்கள்
ஆக்கங்கள் இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை
அனுப்பி வையுங்கள்.

## அப்டேட் அபீட்!



தினமும் ஒரு விலங்கைத் தின்றுவந்த சிங்கத்தை வீழ்த்தினால்தான் நிம்மதியாக வாழ முடியும் என்றெண்ணியது முயல்.

"எங்க தாத்தா காலத்து டெக்னிக்கையே யூஸ் பண்றேன்" என நண்பர்களிடம் சொல்லிவிட்டு, சிங்கத்தைக் கிணறு இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றது. "உள்ளே பாருங்க ராஜா... உங்களை மாதிரியே ஒருத்தன். அவனோடு சண்டை போட்டு ஜெயிச்சுக் காட்டுங்க" என்றவாறு கிணற்றுக்குள் பார்த்த முயல் அதிர்ந்தது. 'ஆத்தீ... தண்ணியே இல்லே..! அப்டேட் பண்ணிக்காமல் கூட்டி வந்துட்டோமே' என நினைத்தவாறு ஓட்டம் பிடித்தது.

## விடுகதைகள்

1. அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?
   **வெங்காயம்**
2. கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர். அது என்ன?
   **கண்ணீர்**
3. நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?
   **சிலந்தி வலை**
4. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?
   **எறும்பு**
5. ஓயாது இரையும் இயந்திரம் அல்ல. உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன?
   **கடல் அலை**
6. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
   **கரும்பு**

## பழமொழிகள்

- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- ஆழமறியாமல் காலை இடாதே.
- இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
- ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
- உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலை வானேன்
- ஊரோடு ஒத்து வாழ்.
- எதார்த்தவாதி வெகுசன விரோதி.
- ஏழைபேச்சு அம்பலம் ஏறாது
- ஐயமான காரியத்தைச் செய்தல் ஆகாது.
- ஒருமுறை சேமித்த பணம், இருமுறை சம்பாதித்த பணத்திற்குச் சமம்.
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
- காற்றில்லாமல் தூசி பறக்குமா?
- கிட்டாதாயின் வெட்டென மற.
- கீர்த்தியால் பசி தீருமா?
- குரைக்கிற நாய் கடிக்காது.
- கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.
- கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது
- கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே.
- கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
- கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான்.
- கோயில் இல்லாத ஊரில் குடி இருக்காதே

## ஆலமரம்



ஆல மரமாம் ஆலமரம்
அருமையான ஆலமரம்
காலம் காலமாய் நிழல்தந்து
காத்து வந்திடும் ஆலமரம்!
கூடு கட்ட பறவைகள் கூடி
அங்கே சென்றிடுமாம்
நாடி நாமும் செல்லலாம்
நல்ல காற்று பெற்றிடலாம்!
சிறிய விதையிலிருந்து
சிறப்பாய் பெரிதாய் வளர்ந்துமே
பெரிய படையும் தங்கிட
படர்ந்த நிழலைத் தந்திடுமே!
தளர்ச்சி மரத்தில் தோன்றினால்
தாமாய் விழுதுகள் இறங்கியே
வளர்ச்சி காக்கும் ஆலமரம்
வீழ்ச்சி காணா ஆலமரம்!
ஆல விழுதைப் போலவே
அன்னை தந்தை தளர்ச்சி கண்டு
நாளும் நாமும் காத்திடுவோம்
நல்ல பாடம் கற்றிடுவோம்!

## பொது அறிவு

1. பரிணாமக் கோட்பாட்டின் தந்தை யார்?
   **சார்லஸ் டார்வின்**
2. மின்னல் தெரியும்போது ஏன் முழக்கம் கேட்பதில்லை?
   **ஒலியை விட ஒளி வேகமாகச் செல்வதால்**
3. நண்டின் தலை எங்குள்ளது?
   **மார்பின் கீழ் அமைந்துள்ளது**
4. பூமி எதனை சுற்றி வருகிறது?
   **சூரியன்**
5. தோடம்பழத்தில் நிறைந்திருக்கும் விட்டமின்?
   **விட்டமின் சி**
6. உடலின் எந்த உறுப்பு இரத்தத்தை சுத்திகரிக்கிறது?
   **சிறுநீரகம்**
7. இலங்கையின் பெரிய நகரம் எது?
   **கொழும்பு**
8. இலங்கையின் பரப்பளவு என்ன?
   **65,610 கி.மீ, 25,332 சதுரமைல்**
9. இலங்கை எப்போது சுதந்திரம் பெற்றது?
   **04.02.1948 இல்**
10. இலங்கையில் நீளமான ஆறு எது?
    **மகாவலி கங்கை 335 கி.மீ**



## வர்ணம் தீட்டுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**விராட் கோலியா ஏ.பி.டி வில்லியர்ஸா திறமையான வீரர்?**

**சம்பந்தன் ஐயா இனிவரும் காலங்களில் இறுக்கமாக நிற்பாரா?**

**நீதியை காப்பாற்ற தன் உயிரை தியாகம் செய்த வீரனைப்பற்றி?**

**யுபா — கரவெட்டி**

**எதிர்க்கட்சித் தலைவரின் கடமைகள்?**

எதிர்க்கட்சி என்ற பதத்துக்காக அரசை எதிர்த்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் இல்லை. அரசுடன் ஒத்துப் போகலாம். ஆனால் அந்த ஒத்துப் போதலால் மக்களுக்கு ஏதும் பயன் உண்டோ, விமோசனம் கிடைக்குமா என்ற கேள்விகளுக்கு ஆம் என்ற பதில் வரவேண்டும். அப்படி வரவில்லை என்றால் ஒத்துப் போதலிலும் அர்த்தமில்லை, அந்த பதவியில் இருந்தும் பயனில்லை. இது எமது தனிப்பட்ட கருத்து.

**டெனிஸ் — வளலாய்**

**நீதியை காப்பாற்ற தன் உயிரை தியாகம் செய்த வீரனைப்பற்றி?**

தியாகம் என்பது இன, மத, பேதம் கடந்தது என்பதை உணர்த்தியிருக்கிறார் ஹேமச்சந்திர. நீதியின் காவலனாக தன் உயிரை துச்சமென எண்ணி வேலியாய் நின்று சன்னங்களை தான் வாங்கிக் கொண்ட வீரனுக்கு நாம் தலைவணங்குகின்றோம்.

**தயாளன் — மயிலங்காடு**

**அரச சொத்துக்களை விற்பதும் தனியார் சொத்துக்களை சுவீகரிப்பதும் எப்படிப் பட்டது?**

மனைவிக்காக தாய் தந்தையை கைவிடுவது அரச சொத்துக்களை விற்பதற்குச் சமன். மனைவியின் தாய் தந்தையை தம்முடனே வைத்திருப்பது தனியார் சொத்துக்களை சுவீகரிப்பதற்குச் சமன்.

**கஜன் — மிருசுவில்**

**ஓடி ஓடி உழைப்பவர்கள் பற்றி?**

இளமையில் பசி, தூக்கம் மறந்து ஓடிஓடி உழைக்கின்றோம். பிற்காலத்தில் அது மருத்துவத்துக்குக் கொடுக்க உதவியாய் இருக்கும் என்பதற்காக.

**சுதா — மயிலங்காடு**

**விராட் கோலியா ஏ.பி.டி வில்லியர்ஸா திறமையான வீரர்?**

கிரிக்கெட் என்று பார்க்கும் போது இருவரும் சம பலத்துடன் இருந்தாலும் வில்லியர்ஸ் தென்னாபிரிக்காவின் உதைபந்தாட்டம், ஹொக்கி, கரப்பந்தாட்டம், நீச்சல் என அனைத்து விளையாட்டுக்களிலும் தேசிய அணியில் இடம்பிடித்தவர். அவற்றுள் கிரிக்கெட்டை தேர்ந்தெடுத்தாரெனில் அவருக்கு கிரிக்கெட்டில் எவ்வளவு காதல் இருக்க வேண்டும்.

**விமல் — மானிப்பாய்**

**தற்போது நாட்டு நிலைமை எப்படி இருக்கிறது?**

வட்டிக்குப் பயந்து ஓடிய காலம் போய் வரிக்கு பயந்து ஓடும் காலம் வந்து விட்டது.

**ரங்கன் — நெல்லியடி**

**தேர்தல் நேரங்களில் மட்டும் உரிமை பற்றிப் பேசுபவர்கள் பற்றி?**

அது அரசியல்வாதிகளுக்கே உரிய பண்பு. அதிலும் எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் நேரங்களில் உரிமை பற்றிப் பேசுவது அல்வா சாப்பிடுவது போன்றது.

அல்வா சாப்பிடுவதும் கொடுப்பதும் ஒரு அளவுக்குத்தானே. அதனால் தேர்தல் முடிந்த பின்பு அதைப்பற்றி யோசிக்கவே மாட்டார்கள்.

தாம் உண்டு தமது வாகனப் போமிட் உண்டு என்று இருந்துவிட்டு மீண்டும் அடுத்த தேர்தல் வரும் போது வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு வந்து நிற்பார்கள் உரிமை என்று உரக்கக் கூறிக்கொண்டு. அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா.




**சயாலன் — மட்டுவில்**

**பரீட்சை தேவையா?**

நான் படிக்கும் போது வந்த அதே சந்தேகம் உனக்கும் வந்திருக்கிறது. என் இனமடா நீ... தம்பி சோதனை இல்லாத வாழ்க்கையில் சாதனை இருக்காது என்பதை நான் இப்போது புரிந்து கொண்டேன்.

சோதனைகள் வேதனைகள் அல்ல சாதனைக்கான போதனைகள்.



**சௌமி — அச்சுவேலி**

**சந்தேகம் எப்படிப்பட்டது?**

சந்தேகம் என்பது சரியாகப் புரிந்து கொள்ளாத அதீத அன்பினால் உருவாகுவது. புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிந்தால் மாற்றிக் கொள்வது சுலபம். அதே முற்றிவிட்டால் உயிரைக் குடித்தே தீரும்.

சந்தேகம் புற்றுநோய் போலதான் ஆரம்பத்தில் சரி செய்தால் சரி, இல்லை உயிரை குடிக்கும் வரை அடங்காது.

**சுதன் — குப்பிளான்**

**சம்பந்தன் ஐயா இனிவரும் காலங்களில் இறுக்கமாக நிற்பாரா?**

அப்படியென்றால் இவ்வளவு காலமும் இறுக்கமாய் பேசவில்லையா?

சர்வதேச போர்க்குற்ற விசாரணை இல்லை, உள்ளக விசாரணை நடைபெறும். ஆனால் அதிலும் சர்வதேச நீதிபதிகள் இல்லை. போர் வீரர்களை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றி விட்டோம். 2017 தீர்வு அது கிடைக்கவில்லை. அரசியல் அமைப்பு சீர்திருத்தம் அதற்கும் ஆப்பு.

இப்படி முடிய வேண்டியது எல்லாம் முடிந்துவிட்டபிறகு இறுக்கமாகக் கதைத்தென்ன கதைக்காமல் விட்டென்னபயன் வந்து விடப்போகிறது.

**கலையரசன் — யாழ்ப்பாணம்**

**நல்லூர் திருவிழா தொடங்கி விட்டதே?**

யாழ். மக்களின் பொன்னாள். பச்சை மயில் வாகனன் வீதிவலம் வரும் போது கோடி கண்கள் வேண்டும் அவன் அழகைக்காண.

வினை என்று வந்தவர்க்கு வினைதீர்த்து அருள் அள்ளி அளிக்கும் கந்தனவன் திருத்தோட்டம் வந்து அடி பயில்வோம்.

சித்தர்களும் ஞானிகளும் வாழ்ந்த மண்ணில் நித்தம் அமர்ந்திருந்தால் எம் சித்தம் தெளிவு பெறும். எல்லாம் அவன் திருவிளையாடலப்பா.

**பபி — பிளவத்தை**

**பெற்றோரை முதியோர் இல்லத்தில் விட்டு விட்டு பிள்ளைகள் வீட்டில் சந்தோசமாக இருக்க முடியுமா?**

இளமையில் பேச நேரமில்லாமல் தன் பிள்ளைகளுக்காக உழைத்தவர்கள் முதுமையில் பேச ஆள் இல்லாமல் தவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### நான் தேடுவது

மயில் தோகை போல
விரல் உன்னை வருடும்
மனப்பாடமாய் அங்கு
உரையாடல் நிகழும்
விடைதேடும் தொடுகை
வினாவாகும் பார்வை
இடைவேளை அறியா
இமையிரண்டும் கெஞ்சும்
கடலளவு மொழியை கண்கள்
கணங்களிலே சொல்லும்
உடைகளினது நளினம்
உடலினுள்ளே நெருடும்
மடை திறந்தது போலவே
கவி மனதினுள்ளே துள்ளும்
மனம் திறந்து சொல்ல– சிறு
வார்த்தைகளின்றி துஞ்சும்
பட்டுக்கள்ளம் தொட்டு
இதழ் பாவெழுத
பாட்டில் உள்ள வழுவை
பாலாய் நீ தெரிய வேண்டும்
திட்டு விழிகளில் நான்
சிறையாகி சிரிக்கும்
இதழ்வழி நான்
வெளியாக வேண்டும்
ஒற்றை இருக்கையில்– நீ
ஒய்யாரமாய் பற்றிய
ஒரு பாதம்– என்னிடமே
பதறாதே எண்ணம்
இல்லை தருவதற்கே
நான் நானாக நீ– நீயாக
நமக்காக இடைவெளிக்குள்
நாம் நுழையாமல் திணித்தல்கள்
சகித்தல்கள் இல்லாவிட்டால்
நான் என்பதும் நீ என்பதும்
வாழ்வுத்தீயில் ஆகுதியாகும்
நாமாகி வீடாகி நாளாகி நமதென்ற
நாடாகும் நாளை

**துளசிதன்**

### நல்லதையே நினையுங்கள்

அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காணாதே
அறியாமையிலேயே வாழ்ந்துவிடாதே
உன் பலத்தின் மீது ஆணவம் கொள்ளாதே
உலுத்தர் எவரிடமும் உறவு வையாதே
ஹறாம் ஆனவற்றை தேடி அலையாதே
ஹலால் ஹபாயா பண்பாட்டை மறவாதே
குடித்தவனிடம் நியாயம் பேசாதே
குணம் கெட்டவரிடம் தொடர்பு வையாதே
எல்லாம் தெரிந்தவர் போல் ஏமாற்றி வாழாதே
எனக்கே எல்லாம் என்று சுயம் கொள்ளாதே
அறியாத அந்நியரிடம் நம்பிக்கை வையாதே
ஐ வேளையும் தொழ மறந்து விடாதே
ஏழ்மையைப் பழிக்காதே எவரையும் சபிக்காதே
சுடுமொழி பேசாதே சொன்ன சொல் தவறாதே
பாவம் மறந்தவர்களே பரிசுத்தவான்களே
நல்லதை நினையுங்கள் நல்லதே செய்யுங்கள்

**கந்தபேரின்பம்**
**தீவான்**

### வாழ்வோடு போராடு

நீ வசந்தகால தென்றல்
மலர்களை மலரச் செய்யும்
பூங்காற்று
தென்றலே உன் வருகை மரங்களுக்கு
மட்டுமா சந்தோசம்?
பலர் இதயங்களை வருடிச் செல்லும்
இனிய கீதமல்லவா நீ
உன் வாழ்வில் வசந்தம் பொங்கி வரும்
விழி பூத்திரு
தென்றல் வந்தால் இருக்கை கொடு
புயல் வந்தால் எதிர்த்துப் போராடு
வாழ்க்கையொரு போராட்டம்
வாழ்ந்து காட்டவேண்டும் பிறருக்கு
வாழவழி காட்ட வேண்டும் பலருக்கு
மலர்கள் தினம் உதிர்ந்து போவதற்காய்
மொட்டாக இருப்பதில்லை
அலைகள் தினம்கரை மீது அடித்து
ஓய்ந்து போவதில்லை
அமாவாசை வரும் என்பதற்காய்
வானம் முகாரி பாடுவதில்லை
வாழ்வின் எல்லை வரை ஓட்டம்
ஓட்டம்தான்...
நிற்பதற்கு தரிப்பிடம் ஏதுமில்லை
மணிக்கூட்டின் முட்கள்
இனி ஒருபோதும் ஓயப்போவதுமில்லை
தென்றலே
நீ துவண்டு போகாதே
துயர் களைந்து
உறுதியாய் நில் கோபுரம் போல்
உன்னை நிமிர்ந்து பார்க்கட்டும்
நீ அசைந்திடா தஞ்சை பெருங்கோவில்!

**க.கார்த்திகா**
**புலோலி**

### பிறப்பொரு பிறப்போ?

இது வெறும் வார்த்தைகள் அல்ல
அடி மனதின் குமுறல்கள்
அடுத்தவர் மனதை
அடிக்கொரு முறை
சங்கடப்படுத்தும்
சாத்தான்களே!
சரித்திரத்தில் உங்கள்
பெயர் என்ன தெரியுமா?

அறவழி
ஆயுதவழி
இன்னும் என்னென்ன வழிகளோ
அத்தனையும் பிழைத்தது

மாரி மழை இல்லை
மண்ணில் பயனில்லை
ஏழைக்கு உணவு பிழைத்தது

போதை நெருங்கிட
பேதைகள் பொய்த்திட
நாடு பிரண்டது
எதனால்....?
எண்ணியதுண்டா?

உறவு பொய்த்தது
உரிமை கெட்டது
காணும் பொருளெலாம்
ஆசை கொண்டது
உணர்வு முழுதிலும்
பிணிகள் தொற்றிட
பிறப்பு இந்தப்
பிறப்பொரு பிறப்போ?
உலகே!
வெட்கித் தலைகுனி
விலைகளிலல்ல உறவுகள் பற்றி
உனக்கென்ன தெரியும்
அது மனிதர்க்கு மட்டுமே புரியும்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 362



### என்ன செய்வேன்

தோளிலே சுமந்த தங்கை
தேகமே தவிக்குதம்மா
நானினி என்ன செய்வேன்
எனக்கினி ஏது வாழ்க்கை
ஊரது தொலைந்து போச்சே
உறவெலாம் உதிர்ந்து போச்சே
பேரின கொடுங்கோல் எரிக்க
நீ போனது தவறேயில்லை
பேரணித் திரளில் நின்று
நீ பொழிந்த போர் வெற்றியெல்லாம்
வேரது சாயத்தானா?
உன் வெற்றுடல் காவத்தானா?
காலனும் என்னை விட்டான்– ஐயோ!
கதறுது உள்ளமம்மா

**யாழ் வாகீஷ்**
**ஓட்டுசுட்டான்**

### நெஞ்சைக் காயப்படுத்துகின்றது

இன்றைய செய்தி
நாளைய வரலாறென்ற
நிலைமாறி – இன்றைய
செய்திகளைப் பார்த்து
கண்ணீர் வடிக்கின்ற நிலைமை
மேலோங்கி...
நெஞ்சைக் காயப்படுத்துகின்றது
காயப்பட்டவரைக்
காப்பாற்ற
யாருமின்றி அவலத்தோடு
ஓடுபவர்க்கு ஆதரவுக்கரம்
நீட்பாத நிலை கண்டு
நீதித் தேவதையே....
கண்ணீர் வடிக்கின்ற நிலை
என்றுதான் எம் நாட்டில் மாறுமோ!

**வ.ச.செல்வராசா**
**திருநாவலூர்**

### காலம் மாறும்

களைத்து வீழ்ந்த காதலியை
கைத்தாங்கலாக இரு
கைகளாலும் தூக்கி கவலையோடு
கொண்டு செல்லும் காளையே நீ
கவலைப்படாதே
காலம் மாறும் கவலை தீரும்
நீ கண்ட கனவு
கண்ணெதிரே நிறைவேறும்
காயான உன் வாழ்வு கனியாகும்
கண்பட்டோர் நெஞ்சமெல்லாம்
கனல் தெறிக்க
களிப்புறுவாய் காலம் மலரும்

**சி.திவ்வியா,**
**யா.ப.மெ.ம.வி**

### காவல் சுமந்த சீருடை

குடாதேசமே குலுங்கியது
நீதித் துலாம் நிர்மூலமாக்க
தெற்கு தேரோடும் வீதியில்
உருண்ட சன்னங்களால்
காவல் சுமந்த
சீருடையும் சிதையானது
எல்லோர் மனதிலும்
புதையலானது

**அராலியூர்**
**சோ.சிவகுமாரன்**

### உண்மையின் சாட்சிகள்

கவனயீர்ப்பு பேரணி
போராட்டங்களில்
உறவுகளின் பிரிவு வேதனை
உண்மை வெளிவராத சாட்சியாக!
தன்னுயிருக்கு உயிரானவளின்
உயிர் பிரிந்த
உயிரற்ற உடலை
சுமந்து சுமக்க முடியாத
பிரிவின் சுடும் வேதனை
உண்மை வெளிவந்த காட்சியாக!

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

### துயரம் வதைக்கிறது

துயரம் கொண்ட நாட்டில்
துன்பத்தின் வேகம் சூழ்ந்து வர
அந்தரத்தில் நோயால் துடிக்கும்
அருமைத் தங்கையை
கொண்டு செல்ல
கிட்ட ஒரு
வைத்தியசாலை இல்லை
கொண்டு செல்ல ஒரு
வாகன வசதி இல்லை
என்னடா உலகு இது
உதவிக்கும் ஒருவரில்லை


**பா.கலாதேவி**
**சண்டிலிப்பாய் மேற்கு**

### இதுதான் காதலா

கோர விபத்தில்
தன்னிலை
தடுமாறாமல்
தன் காதலியின்
உயிரைக் காக்க
விரைந்து
பயணிக்கின்றானே
இந்தக் காதலன்
இதுதான் காதலா?

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

# மௌனத்தின் தேடல் –363



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 02.08.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ் பூதங்கள்' என்னும் புது வகையான பூதங்களின் வருகை, யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பியது என்னவோ உண்மை தான்.

ஒற்றைக் கையில் இரும்புக் கம்பியும் மற்றைய கையில் 'ரோச்' லைட்டுமாக 'நவீன விளக்கேந்திய பெருமாட்டிகளாக' பெண்கள் வெளியே செல்கிறார்கள்.

கோதுமை மாவைத் தடை செய்த பொழுது, அம்மாப்பச்சை அரிசியை




# புளிய மரத்துப் பேய்கள்

இடித்து மாவாக்கிப் பிட்டவித்தும், மண்ணெண்ணெய்யைத் தடை செய்த பொழுது, 'பஞ்சு' விளக்குகளில் படித்தும் வாழ்ந்தவர்களல்லவா? 'கிறீஸ் பூதங்கள்' ஒரு பொருட்டா என்ன?

முறத்தால் புலியை அடித்து விரட்டிய பெண்களைப் ப்றறிக் கதை கதையாய்க் கேட்ட எமக்கு, யாழ்ப்பாணப் பெண்களின் வீரம் ஏனோ தெரிவதில்லை.

"அப்பா உங்களுக்கு கிறீஸ் பூதங்களுக்கு பயமில்லையோ?"

என் செல்ல மகன் கேட்கிறான்.

"இல்லை... ஒரு கையால அதின்ர கழுத்தை நரிச்சு, கால மடக்கி முழங்காலால ஒண்டு குடுத்தனென்டா... பாஞ்சோடிவிடும்"

"இல்லை. பின்னால பறக்கிற பறப்பில, நாத்தம் தாங்கேலாமல் பூதம் ஓடி விடும்"

என் மனைவி என்னைச் சீண்டுகின்றாள்.

"பிள்ளயளுக்கு நம்பிக்கை வாற மாதிரிக் கதைக்க வேணும். நீங்கள் பேசாமல் இருங்கோ"

நான் அவளை மடக்குகிறேன்.

"அப்பா உங்களுக்குப் பேய்,பிசாசு, பூதங்களுக்குப் பயமில்லையோ?"

"இல்லைப் பயமில்லை"

"சின்னனா இருக்கேக்கயும் உங்களுக்குப் பயமில்லையோ?"

"சின்னனில பயம்தான். பிறகு பயமில்லாமல் போட்டுது"

"என்னெண்டு பயமில்லாமல் போனது?"

"அது பெரிய கதை. பிறகு சொல்லுறன். இப்ப நேரம் போச்சு. நித்திரை கொள்ளு. வெள்ளணப் பள்ளிக்கூடம் போக எழும்ப வெல்லே வேணும்"

மகனுக்குச் சொல்லியவாறு, மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டுகின்றேன்.

"நானும் வெள்ளண எழும்ப வேணும். சமைச்சுப் போட்டுப் பள்ளிக்கூடம் போக வேணும்"

மகனுக்குச் சொல்வது போலவே என்னையும் எச்சரிக்கிறாள்.

நான் புரிந்து கொண்டு - உறங்க முயன்ற போது- பேய், பிசாசு, பூதங்களின் பயம் இல்லாமல் போன அந்தச் சம்பவம் என் மனக் கண்ணில் விரிந்தது.

மாமா, தைரியத்தின் மறு உருவம். பயம் அவரை நெருங்கப் பயப்படும். பயம் என்பதையே அவர் கண்களில் நான் பார்த்ததும் இல்லை.

மாமா நடந்து வருகின்ற அந்தக் கம்பீரத்தை சிவாஜி கணேசனிடமும், ராஜ்கிரணிடமும்தான் நான் பார்த்திருக்கிறேன்.

என் பாட்டனார் -மாமாவின் தகப்பன்- அந்தக் காலத்தில் இருபது, இருபத்தைந்து பேரை வைத்து 'வேலை வாங்கியவர்' என்று சொன்னால் அவரிடம் வேலை செய்தவர்கள் கோபித்துக் கொள்வார்கள்! இருபது இருபத்தைந்து பேருக்கு வேலை கொடுத்து அவர்களின் குடும்பத்திற்கெல்லாம் குலதெய்வமாக இருந்தவர்!!

SSC வரையே படித்திருந்தாலும் கூட கல்கியும் அகிலனும் மு.வரதராசனும் தமிழ்வாணனும் அவருக்குப் பரந்த அளவிலான அறிவையும் அனுபவத்தையும் கொடுத்திருந்தனர்.

மாமாவின் புத்தக அலுமாரி, இன்றும் கூட என் மனக்கண்களில் இருக்கிறது.

ஊர்க்காவலன்களாக சித்தரிக்கப்படுகின்ற சினிமாப்பட கதாநாயகர்கள் போன்ற ஒரு சிலராவது, இயல்பு வாழ்க்கையிலும் இருக்கக் கூடும் என்பதற்கு மாமா ஒரு சிறந்த உதாரணம்.

போக்கிரித்தனமான வேலிச் சண்டைக்காரர்கள், கட்டியவளைக் கொடுமைப் படுத்தும் கணவன்மார்கள், தாய் சொல்லைக் கேட்காத புத்திரர்கள், திருட்டுப் பயல்கள், பொம்பிளைப் பிள்ளைகளின் பின்னால் சுற்றித் திரிகின்ற 'மன்மதன்கள்' எல்லாம் மாமாவின் பிரசன்னத்தால் பின்வாங்கி சுமுகமாகத் தம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வார்கள்.

பக்கத்து ஊர்களில் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளை தீர்ப்பதற்கும் மாமாவின் உதவியை நாடி வருபவர்களும் உண்டு.

இந்திய அமைதிப்படை, வெறியாட்டம் ஆடிய காலங்களில், அதனைச் சாட்டாக வைத்து ஒரு திருட்டுக் கும்பல், களவு வேலைகளில் ஈடுபட்டிருந்தது. அவர்களைப் பிடிக்கச் சென்ற இளைஞர்கள் அவர்களால் தாக்கிக் காயப்படுத்தப்பட்ட சம்பவங்களும் நடந்தது.

எமது கிராமத்தில் மட்டுமன்றி, அயற் கிராமங்களிலும் இந்தத் திருட்டை ஒளித்த பெருமை மாமாவுக்கு இருக்கிறது.

கிராமத்தின் இளவட்டப் பெடியன்களை ஒன்று திரட்டி, நிலவொளியில் கம்பு சுற்றக் கற்றுக் கொடுத்து, இளைஞர்கள், தம் மூக்கு நுனி வரையான உயரக் கம்புகளுடன், சோடி சோடியாக கிராமங்களைச் சுற்றி வந்தபோது, திருடர் தொல்லை இல்லாமற் போனது.

நான்கைந்து கிராமங்களிலிருந்து திருட்டை ஒழித்த மாமாவினால், அயல் வீட்டாருடன் ஏற்பட்ட சண்டையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

சின்னதாய்த் தொடங்கிய வாய்த் தர்க்கம், சிறிய சிறிய சண்டைகளாய் மாறி, பத்துப் பதினைந்து பேர் ஒன்றாகச் சேர்ந்து, திட்டம் போட்டு, மாமாவை அடித்துக் கோடரியால் கொத்திய சம்பவமும் நடந்தது.

மாமா அன்று அவர்களுடன் போட்ட சண்டையைப் பார்த்தவர்கள், சினிமாப் படங்களில் ராஜ்கிரண் போடுகின்ற சண்டைகளை நம்பாமல் இருக்க மாட்டார்கள்.

அந்தத் தைரியத்தின் மறுவுருவம், பதினாறு தையல்கள் போடப்பட்ட போதும், கண் கலங்காமல், மயக்கமடையாமல் இருந்த சம்பவம் எங்களுக்கெல்லாம்... வார்த்தைகள் கிடைக்கவில்லை.

மாமா 'தேசத்துரோகி' என அபாண்டமாகப் பழி சுமத்தப்பட்டு - உரிய விசாரணைகளின்றி கைகள் கட்டப்பட்டு, நெஞ்சிலும் வயிற்றிலும் சுடப்பட்டு, அந்த மாமலை தெருவோரத்தில் பிணமாகக் கிடந்தது. ஒரு வீர சரித்திரத்திற்கு அன்றுடன் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அவர் சாகும் போதும் ஒரு வீரனாக செத்ததைக் கேள்விப்பட்டபோது எம் நெஞ்சு பெருமையால் விம்மியது.

மாமா 'அது'வாகி எல்லாக் காரியங்களும் முடிந்துபோன அன்று, எனக்கு வந்தது சோதனை.

"தம்பி ஒருக்கா வீட்ட போய்த் தேங்காய் உடைக்கிற கத்தியை எடுத்தாறியோடா?"

அம்மா கேட்கிறா.

என்னை விடப் பதினொரு மாதங்கள் மூத்த ஒரு பதினைந்து வயது மச்சாள் - கறுப்பென்றாலும் கஸ்தூரிபோல அருகே நிற்கிறாள்.

என் வீரத்தைக் காட்டக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட நான் விரும்பவில்லை.

"ஓம் எடுத்துக் கொண்டு வாறன்"

"இருண்டு போச்சு. உனக்குப் பயமில்லையோடா?"

"என்ன பயம்? இப்ப போட்டு வாறன்"

வீட்டுத் திறப்பையும் வாங்கிக்கொண்டு, மாமா வீட்டுப் பின் வளவுக்கால் நடக்கத் தொடங்குகின்றேன்.

பின் வளவு தாண்டியதும், புளிய மர வளவு.

மாலைக்கருக்கலில்புளிய மரம்கரிய, பெரிய பூதமாக என்னைப் பயமுறுத்துகிறது.

'திரும்பி ஓடி விடு' மனது என்னை உந்தித் தள்ளுகிறது.

"நீயெல்லாம் ஒரு ஆம்பிளைப் பிள்ளையோடா?" மச்சாள் என் மனக் கண் முன்னால் தோன்றிச் சிரிக்கிறாள்.

தைரியத்தை வரவழைத்து, புளிய மர வளவை நெருங்குகிறேன்.

ஆந்தையின் அலறல், செவியிலே நுழைந்து இதயத்தை அறுக்கிறது..

புளியமரத்தின் காய்ந்த கிளையொன்று, சடாரென்று முறிகிறது.

"ஐயோ அம்மா"

ஓடத் தொடங்குகிறேன். எல்லாப் பேய்களும் ஒன்றாகச் சேர்ந்து துரத்து கிறது. என் சக்தி முழுவதையும் என் கால்களுக்கு வழங்கி ஓடுகிறேன்.

பேய்களின் காலடிச் சத்தம் நெருங்கி வருகிறது. எப்படியும் மாமாப் பேய்தான் முன்னுக்கு வரும். பேய்களுக்கு சக்தி அதிகமாம்! மாமா வாழும் போதே தைரியசாலி. மாமாப் பேய்க்கு எவ்வளவு சக்தி இருக்கும்?

அதற்கு மேல் என்னால் ஓட முடியவில்லை. மூச்சு வாங்குகிறது. இனி ஓடினால் நிச்சயம் இதயம் வெடித்து விடும். அதன் பிறகு 'முனியடித்து' செத்தவன் ஆகிவிடுவேன்! அதைவிட மாமாப் பேயின் கைகளினால் சாவது மேல்!!

குந்தியிருந்து, தலையைக் கால்களுக்கிடையில் புதைத்து, கண்களை மூடிக் கொள்கிறேன்.

முன்னால் வருவது மாமாப் பேய்!

வீட்டு வாசலில் யாராவது சத்தம் போட்டால்

"தம்பி பின் பக்கத்தால ஓடிப் போய் மாமாவைக் கூட்டியாடா!"

துப்பாக்கிச் சத்தம் கேட்டால்

"தம்பி போய் மாமாவைக் கூட்டியாடா!"

பஸ்ஸில் பின்னால் நிற்பவன் உரசினால்

"ஆற்ற தங்கச்சியெண்டு தெரியுமோ! இந்த றோட்டால போய் வரமாட்டாய்!"

சங்கக்கடை மனேஜர், அப்பாவை மரியாதை இல்லாமல் கதைத்தால்

"தம்பி மாமாற்றை சொல்லிப் போட்டு வா"

முன் வீட்டுக்காரன் அப்பா இல்லாத நேரம் பார்த்து வம்புச்சண்டை இழுத்தால்

"தம்பி மாமாவை..."

கடன் வாங்கியவன் முறைப்பாகப் பதில் சொன்னால்

"தம்பி..."

இப்படி எல்லாச் சந்தர்ப்பத்திலும், எங்களைக் காத்து நின்றவர் மாமாதான். அப்படிப்பட்ட மாமா, இன்று பேயாகி விட்டால், மற்றப் பேய்களிடமிருந்து என்னைப் பாதுகாக்க மாட்டாரா என்ன?

எழுந்து, நிமிர்ந்து, கைவீசி நடக்கிறேன். பேய்கள் மீதான பயம் மனதிலிருந்து முற்றாக அகன்றிருந்தது.

நிரந்தரமாக...


நி.நிரேஷ்குமார்
யாழ்.தேசிய
கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அவர் முகத்தில் மரணபயம் தெரிந்தது"

# பின்லேடன் துடிதுடித்த கடைசி நிமிடங்கள்

## மனம் திறந்தார் மனைவி



அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த போது, 2011 ஆம் ஆண்டு மேமாதம் முதல் நாள், அமெ ரிக்க இராணுவம் சுட்டுக் கொன்றது பற்றிய விடயம் மீண்டும்-மீண்டும் பேசப்பட்டாலும், ஒசாமாவின் இறுதி நிமிடங்களில் அவருடன் இருந்தவர் சொல்வது என்ன? அந்த இருட்டான இரவு நேரத்தில் என்ன நடந்தது என்று மனம் திறந்து முதன்முறையாக சொல்கிறார் ஒசாமா பின்லேடனின் நான்காவது மனைவி அமால்.

ஸ்காட் கிளார்க் மற்றும் அட்ரியன் லெவி இணைந்து எழுதிய, "த எக்ஸைல்: த ப்ளைட் ஆஃப் ஒசாமா பின் லேடன் அபவுட் த லாஸ்ட் ஃப்யூ மினிட்ஸ் ஆஃப் 9/ 11 மாஸ்டர்மைண்ட்ஸ் லைஃப் புத்தகத்திற்காக, அமால் அவர்களிடம் மனம் திறந்து பேசியிருக்கிறார். "சண்டே டைம்ஸ் யூ.கே" -இல் இந்த புத்தகத்தின் ஒரு பகுதி வெளியாகியுள்ளது.

2011, மே முதல் திகதியன்று இரவு உணவு முடிந்து, பாத்திரங்களும் சுத்தம் செய்யப்பட்டன. வழக்கமான இரவு நேர தொழுகைக்கு பின் ஒசாமா பின்லேடனும், அமாலும் மேல் மாடியில் இருந்த படுக்கையறைக்கு சென்றுவிட்டனர். இரவு 11 மணி இருக்கும், ஒசாமா ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

பாகிஸ்தானின் அபோட்டாபாதில் ஒசாமா பின்லேடன் ரகசியமாக மறைந்து வாழ்ந்த வீட்டில் திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு, வீடு முழுவதும் இருளில் மூழ்கியது. பாகிஸ்தானில் மின்சாரத் தடை ஏற்படுவது வழக்கமானது என்பதால், யாரும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

நள்ளிரவு நேரம், அமாலின் மனதில் காரணமே இல்லாமல் ஏதோ கலக்கம் ஏற்பட்டு தூக்கம் கலைந்தது.

ஏதோ சப்தம் கேட்டதாக தோன்றினாலும், அது பிரம்மையாக இருக்கும் என்று நினைத்தார், ஆனால் சிறிது நேரத்திலேயே மாடியில் யாரோ ஏறுவது போல தோன்றியதால் அமாலுக்கு கவலை ஏற்பட்டது. உன்னிப்பாக கவனித்தார்.

மின்சாரம் இல்லாமல், இருள் சூழ்ந்த நள்ளிரவாக இருந்தாலும், யாரோ கடந்து போனது நிழல் போல தெரிந்தது. சப்தங்கள் அதிகமானது, ஜன்னல் வழியாக காற்று உள்ளே வந்தபோது, அந்நியர்கள் நுழைந்துவிட்டார்களோ என்ற அமாலின் சந்தேகம் உறுதியானது. இதற்கிடையில் படுக்கையில் படுத்திருந்த ஒசாமா பின்லேடனும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் அச்சம் நிலவியது அப்பட்டமாக தெரிந்தது.

கணவர் தன்னை பிடித்துக் கொண்டதாக கூறும் அமால், "எங்களை யாரோ உற்றுப்பார்ப்பது போலவும், மேலே ஆட்கள் ஓடுவது போலும் உணர்ந்தேன். சட்டென்று நாங்கள் இருவரும் அங்கிருந்து எகிறி குதித்து ஓடினோம். எங்கள் வீட்டின் சுவர்கள் அதிர்ந்தன.

யாரோ தங்களை ஏமாற்றிவிட்டதை அவர்கள் உணர்ந்ததாக தோன்றியதாக, ஒசாமாவின் கடைசி நிமிடங்கள் பற்றிய புத்தகத்திற்காக கொடுத்த பேட்டியில் அமால் சொல்கிறார்.

பல ஆண்டுகளாக ரகசியமாகவும், பாதுகாப்பாகவும் இருந்த அந்த வீடே தங்களுக்கு மரணப்பொறியாக மாறிவிட்டது என்கிறார் அமால்.

ஒசாமா பின்லேடனின் நான்கு மனைவிகளில் மூன்று பேரும், குழந்தைகளும் இரண்டாவது மாடியில் இருந்த படுக்கையறைக்குள் வந்துவிட்டார்கள், என்ன செய்வது என்று யாருக்கும் புரிய வில்லை, அனைவரும் தொழுகை செய்தார்கள். வழக்கமான தொழுகைக்கும், அன்றைய கனத்த இரவின் தொழுகைக்கும் இருந்த ஒரே வித்தியாசம், அது ஒசாமாவின் கடைசித் தொழுகையாக இருந்தது என்பதுதான்.

பிறகு குடும்பத்தினரிடம் பேசிய ஒசாமா, "அவர்கள் கொல்ல விரும்புவது என்னைத்தான் உங்களை அல்ல என்று சொன்னதுடன், மனைவிகளையும், குழந்தைகளையும் வீட்டின் கீழ்தளத்திற்கு செல்லுமாறு கூறினார். இருந்தபோதிலும், தனது மகன் ஹம்சையுடன் ஒசாமாவின் அருகிலேயே இருக்க அமால் முடிவு செய்தார்.

"ஹெலிகொப்டரின் ஓசையால் அவருடைய உறக்கம் கலைந்துவிட்டது. அமெரிக்கா தன்னை சுற்றிவளைத்துவிட்ட்து என்பதை அவர் உணர்ந்து விட்டார். வீட்டைச் சுற்றி வளைத்தவர்கள் பால்கனிக்குள் வந்துவிட்டார்கள். சப்தங்கள் அதிகமாயின், ஒரு கட்டத்தில் வீடே அதிர தொடங்கியது, அதோடு எங்களது மன அதிர்வும் அதற்கு குறைந்ததாக இல்லை என்கிறார் அமால்.

வானில் நிலவில்லாத அந்த இரவில், மின்சாரமும் இல்லை. எதுவும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், தவறாக நடக்கிறது என்பதை உணர்ந்து விட்டோம். ஹெலிகொப்டர்கள் வருகை, ஆட்கள் நடக்கும் சப்தம், வீடு அதிர்வது, எல்லாம் நிலைமையின் விபரீதத்தை உணர்த்தியது.

அமெரிக்க இராணுவத்தினர் எங்கள் வீட்டிற்குள் வந்துவிட்டார்கள். செஹம் மற்றும் காலித் இருவரும் அமெரிக்கர்களை நெருக்கத்தில் பார்த்துவிட்டார்கள்". தங்கள் இருப்பிடத்தைப்பற்றிய முழுத்தகவல்களையும் யாரோ அமெரிக்காவிற்கு தெரிவித்துவிட்டார்கள், இல்லையென்றால் இது என்றுமே சாத்தியமா கியிருக்காது என்று கூறுகிறார் அமால்.

"யாரோ எங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார்கள் என்பது' உறுதியாக தெரிந்துவிட்டது. இப்படி சுற்றிவளைக்கப்படுவோம் என்று எங்களில் யாருமே எதிர்பார்க்கவில்லை"




ஒசாமா பின்லேடன் காலிதை அழைத்தார். அவன் ஏ.கே-47 துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டான். 13 வயதே நிரம்பிய காலிதுக்கு துப்பாக்கியை இயக்கத் தெரியாது என்பது அமாலுக்கு தெரியும். குழந்தைகள் அழுதன. அமால் அவர்களை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார். அமெரிக்கா இராணுவத்தினர் மேல் மாடிக்கு வந்துவிட்டனர். அதன்பிறகு அனைத்தும் சில நிமிடங்களில் முடிந்துவிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போனால் வரமுடியாது

# அதிர வைக்கும் பேய்க் கிராமம்

நாம் நிறைய பேய்களின் கதைகளை கேட்டிருக்கிறோம். ஒரு சிலர் பேய்கள் இல்லை என்றும், ஒரு சிலர் பேய்கள் பொய் என்றும் நம்புகிறார்கள். நாம் சில பேய்க் கதைகளில் இந்த ஊருக்குள் சென்றால் யாரும் உயிருடன் திரும்பமாட்டார்கள் என கேள்விப்பட்டிருப்போம்.



அந்த பேய்க் கதைகளை உண்மையாக்குவது போல இருக்கிறது இந்த செய்தி... ஆம்..! ரஷ்யாவில் இருக்கும் இந்த கிராமத்திற்குள் யார் சென்றாலும் உயிருடன் திரும்புவதில்லையாம்! இதை பற்றி பல அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ச்சிகளை செய்து முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

**ஆராய்ச்சி முடிவுகள்**

அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் இந்த விடயம் பற்றி ஆராய்ச்சிகள் செய்து பார்த்ததில் உண்மையிலேயே இந்த கிராமத்திற்குள் சென்றவர்கள் யாரும் உயிருடன் திரும்பி வருவதில்லை என்பது கண்டறியப்பட்டது. இது ஒரு அமானுஷ்ய சக்தியாக கூட இருக்கலாம்.

**இந்த கிராமம் எங்கு உள்ளது?**

இந்த கிராமம் ரஷ்யாவின் வடக்கு ஒசட்டியாவின் ஒதுக்குப் புறமான இடத்தில் உள்ளது. இந்த கிராமத்தின் பெயர் டர்காவ்ஸ். இது இறந்த மக்கள் மட்டுமே வாழ்கின்ற இடமாகும். இந்தக் கிராமம் 5 மலைகள் அமைந்துள்ள இடத்தில் உள்ளது. ஏராளமான குன்றுகள் இங்கே உள்ளன. மேலும் இந்த கிராமம் ஏராளமான பாறைகளின் மத்தியில் அழகாக அமைந்துள்ளது.

**சென்றால் இறப்பு நிச்சயம்!**

இந்த கிராமம் அழகாக இருந்தாலும்கூட, இந்த கிராமத்திற்கு செல்ல யாருக்கும் தைரியமில்லை. இந்த கிராமத்திற்கு இன்னொரு பெயர் "டெட் நகரம்" ஆகும். இங்கு ஏராளமான இறந்த உடல்கள் மட்டும்தான் உள்ளன. உள்ளூர் குடிமக்கள் தங்கள் உறவினர்களின் இறந்த உடல்களை இங்கு உள்ள குடிசைகளில் வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.

**நிலத்தடிக்குள் மறைந்திருக்கும் கிராமம்**

இந்த கிராமம் 5 உயரமான மலைகளுக்கு இடையில் அமைந்திருப்பதால், இந்த கிராமத்திற்கு செல்வது மிகவும் கடினமாக இருக்கிறது. இந்த உயிரை பலி வாங்கும் கிராமத்தில் நிலத்தடிக்குள் எண்ணிலடங்கா கிராமங்கள் உள்ளன. மேலும் சில வீடுகளுக்கு நான்கு மாடிகள் கூட உள்ளன.

**இறந்த உடல்கள்**

இந்த கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் பல மாடிகளை கொண்டுள்ளன. இவற்றின் ஒவ்வொரு தளத்திலும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. இந்த கிராமத்தில் சுமார் 99 கட்டடங்கள் உள்ளன. இங்கு இறந்த உடல்களை புதைக்கும் பழக்கம் 16 ஆம் நூற்றாண்டு முதல் இருக்கிறது.

**உயிருடன் திரும்புவதில்லை**

இந்த குறிப்பிட்ட கிராமத்தின் மீது மக்களுக்கு பல நம்பிக்கைகள் உள்ளன. அந்த கட்டடங்களுக்குச் செல்லும் மக்கள் உயிருடன் திரும்புவதில்லை என்று அவர்கள் நம்புகிறார்கள். எனவே, இந்த நம்பிக்கை காரணமாக, இந்த கிராமத்தில் ஒரு சுற்றுலாத்தலமும் இல்லை. இங்கு செல்லாததற்கு மற்றுமொரு முக்கிய காரணம், இங்கு நிலவும் கடுமையான வானிலையாகும்.



**கடுமையான நோய்**

18 ஆம் நூற்றாண்டில் வசித்த இவர்களது குடும்ப உறவினர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இதனால் அவர்கள் பிற இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இறக்கும் வரை அவர்கள் வேறு எங்கும் செல்லவில்லை. அவர்கள் வீட்டிலேயே புதைக்கப்பட்டனர். இவ்வாறு அங்குள்ள பெரும்பான்மையானோர் நம்புகிறார்கள்.

**எப்படி வாழ்கிறார்கள்?**


இந்த இடம் மர்மங்கள் நிறைந்தது. இங்கு செல்வதே திகிலான அனுபவமாக இருக்கும். இந்த கிராம வாசிகளை பற்றி பல ஆய்வுகள் நடத்தப்பட்டன. இப்போதும் பல ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**படகுகளுக்குள் இறந்த உடல்கள்**

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த கல்லறைக்கு அருகே படகுகளை கண்டுபிடித்ததாக கூறப்படுகிறது. இறந்த உடல்கள் ஒரு படகு வடிவத்தில் இருந்த ஒரு மரப்பெட்டியில், புதைக்கப்பட்டிருந்தது என்று கூறுகிறார்கள். இந்த படகுகள் கடந்த காலத்தின் நம்பிக்கையாக இருந்தன. ஆன்மா சொர்க்கத்தை அடைவதற்கு இது உதவியதால், அவர்கள் ஒரு படகு வடிவ பெட்டியில் புதைக்கப்பட்டனர்.

**கிணற்றில் எறியப்படும் காசு**

ஆய்வாளர்கள் ஒரு கிணற்றையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இறந்தவர்கள் புதைக்கப்பட்ட பிறகு, உறவினர்கள் இந்த கிணற்றில் நாணயங்களை தூக்கிப்போடுவார்கள் என்று கூறப்படுகிறது. ஒரு நாணயத்தின் அடிப்பகுதி மற்றொன்றில் மோதிக் கொண்டால், இறந்தவரின் ஆத்மா பரலோகத்தை அடைந்துவிடும் என்று கிராமவாசிகள் நம்புகிறார்கள்.



# அந்த 7 திரவங்கள் ஏன்? எதற்கு? எப்படி

(சென்றவாரத் தொடர்ச்சி)


கூலன்ட் அளவு குறையும் பட்சத்தில், இன்ஜின் விரைவில் வெப்பமாகி, கார் ஓடமுடியாத நிலைக்குத் தள்ளப்படும். கார் ஓட்டும்போது, இன்ஸ்ட்ருமென்ட் பனலில் இருக்கும் டெம்பரேச்சர் மீற்றரில் ஒரு கண் இருக்கட்டும். இதில் ஏ.சி கூலன்ட் தனி வகை.

**பவர் ஸ்டீயரிங் ப்ளுயிட்**

இன்ஜினைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் ஒரு சின்ன ஹைட்ராலிக் பம்ப் மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டு, ஸ்டீயரிங்கின் வேலையை எளிதாக்குவதுதான் ஸ்டீயரிங் ஒயில். பெரும்பான்மையானவை, மினரல் ஒயில்தான். இப்போது ATF எனும் ஓட்டோமட்டிக் ட்ரான்ஸ்மிஷன் ஒயிலும் வந்துவிட்டது. இந்த ப்ளுயிட், ஸ்டீயரிங் சேம்பருக்குள்ளே செலுத்தப்பட்டு, க்ராங்க் ஷாஃப்ட் மெக்கானிஸம் மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டு ஸ்டீயரிங்குக்கு பவர் கூட்டுவதால், இதற்கு பவர் ஸ்டீயரிங் என்று பெயர். 'சட் சட்' என எளிமையாக காரைத் திருப்ப, ஸ்டீயரிங் ஒயில் சரியான அளவில் இருக்க வேண்டும்.

எலெக்ட்ரோனிக் பவர் ஸ்டீயரிங் கொண்ட கோஸ்ட்லி கார்களுக்கு இந்த ப்ளுயிட் அவசியமில்லை. இதில் ஹோஸ், பம்ப், லீக்கேஜ் என்று எதுவும் இருக்காது. ஆனால், கரடுமுரடான கட்டுறுதியான சவாரிகளுக்கு ஹைட்ராலிக் பவர் ஸ்டீயரிங்தான் சுப்பர். ஃபார்ச்சூனர், பொலேரோ போன்ற கார்கள் ஹைட்ராலிக் ஸ்டீயரிங் கொண்டவை.

## மோட்டார் மன்னன் பக்கம்



**டிரான்ஸ்மிஷன் ப்ளுயிட்**

டிரான்ஸ்மிஷன் ப்ளுயிட் 'கியர்பொக்ஸ் ஒயில்' என்றும் சொல்வர். இன்ஜின் ஒயில் எப்படி இன்ஜினுக்குள் நடக்கும் விடயங்களை லூப்ரிகேட் செய்கிறதோ, அதேபோல், டிரான்ஸ்மிஷன் ப்ளுயிட் கியர்பொக்ஸுக்கு உள்ளே இருக்கும் பாகங்களைத் தேயாமல் காக்கிறது. கியர் போடும்போது, 'தடால் புடால்' எனச் சத்தம் வந்து, ஒழுங்கற்ற முறையில் கியர் விழுந்தால்... ப்ளீஸ் செக் டிரான்ஸ்மிஷன் ஒயில்!

**கிளட்ச் ப்ளுயிட்**

பிரேக் ஒயிலுக்கும் கிளட்ச் ஒயிலுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. இரண்டுக்கும் ஒரே ரிசர்வாயர்தான். அதாவது, ஒரே பம்ப்தான். ஆனால், இரண்டுக்கும் வெவ்வேறு ஹைட்ராலிக் சிலிண்டர்கள் உண்டு. நீங்கள் பிரேக் பிடிக்கும்போது, பிரேக் ஒயில் கம்ப்ரஸ் ஆகி எப்படி ஆற்றல் தருகிறதோ, அதே டெக்னிக்தான் கிளட்ச் ஒயிலுக்கும். கிளட்ச் பெடலில் நாம் எவ்வளவுக்கெவ்வளவு காலால் அழுத்தம் தருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ஆற்றல் வெளிப்படும். கியர் மாற்றும்போது, கிளட்ச்சை நன்றாக அழுத்துவது கியர்பாக்ஸுக்கும் கிளட்ச் பிளேட்டுக்கும் நல்லது.

**விண்ட்ஷீல்டு வைப்பர் ப்ளுயிட்**

விண்ட்ஷீல்டு புத்தம் புதுசாக ஜொலிக்க, வைப்பர் ப்ளுயிட் அவசியம். மழை நேரங்களில் வைப்பர் வேகமாக வேலை செய்ய... மற்ற நேரங்களில் விண்ட்ஷீல்டில் படிந்திருக்கும் அழுக்குகள், தூசுகள் போன்றவற்றைச் சுத்தம் செய்ய... வைப்பர் ப்ளுயிட் தேவை. ஒவ்வொரு பயணத்திலும் வைப்பர் ப்ளுயிடும் தண்ணீரும் இருக்கிறதா என்பதைச் சோதனை செய்வது விண்ட்ஷீல்டுக்கு ஆரோக்கியம்.


(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிக்பாஸை மிஞ்சிய உண்மை நிகழ்ச்சிகள்

'பாட்டுப் பாடுவது, பாடலுக்கு ஆடுவது' எனப் பல ஆண்டுகளாக ஒரு வட்டத்துக்குள் சிக்கியிருந்த தமிழ்த் தொலைக்காட்சிகள் பிக்பாஸ் வழியே அடுத்த லெவலுக்குச் சென்றிருக்கிறார்கள். 'ஏன் இந்தப் பொண்ணு இப்படி நடிக்குது?' 'ஐயோ அந்தப் பொண்ணை எல்லோரும் ஒதுங்குறாங்க' என உள்துறை விவகாரங்களை புட்டுப் புட்டு வைக்கிறார்கள். இப்படியான விவகாரங்கள் நமக்குத்தான் புதுசு. வெளிநாடுகளில் எல்லாம் 'அதுக்கும் மேல' ரகத்தில் ரியாலிட்டி ஷோக்கள் சக்கைப்போடு போடுகின்றன. அப்படி டி.ஆர்.பி-யை டி.ஆர் கணக்காக ஆட்டம் போட வைத்த சில உலக ரியாலிட்டி ஷோக்கள் பற்றிய எஸ்.டி.டி இங்கே!

## ஒரு கன்னிப்பையனும் 30 களவாணிகளும்



`The bachelor' அடல்ட்ஸ் ஒன்லி டைப் ரியாலிட்டி ஷோ இது. டைட்டிலைப்போலவே ஒரு எலிஜிபிள் பேச்சுலர் இருப்பார். அவரை இம்ப்ரஸ் செய்ய 30 பெண்கள் போட்டி போடுவார்கள். கிட்டத்தட்ட இதிகாசங்களில் வரும் சுயம்வரம் கான்செப்ட்தான். நிறைய போட்டிகள், தன்னுடனான கெமிஸ்ட்ரி, சக போட்டியாளர்களுடன் நடந்து கொள்ளும் முறை போன்றவற்றை வைத்து சிறந்த பெண்ணைத் தேர்ந்தெடுப்பார் அந்த பேச்சுலர். டேட்டிங்கில் ஏகப்பட்ட வழி முறைகளை இளசுகளுக்கு அறிமுகப் படுத்தியிருந்தாலும் ஏகப்பட்ட விமர்சனங்களுக்கும் உள்ளானது இந்த ஷோ!

## நான் தனியாள் இல்ல...



"ALONE"- மேன் வெர்சஸ் வைல்டின் அப்டேட்டட் வெர்ஷன் இந்த ரியாலிட்டி ஷோ! உடல் வலு, மன உறுதி கொண்ட போட்டியாளர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஒரு காட்டுக்குள் இறக்கிவிடுவார்கள். ஒருவர் இன்னொருவரைச் சந்திக்க முடியாதபடி திட்டம் வகுக்கப்பட்டிருக்கும். சீதோஷ்ண நிலைகள், வன விலங்குகளின் இடையூறு ஆகியவற்றைத் தாண்டி உணவு, உறைவிடம் கண்டு பிடித்துப் பிழைத்திருக்க வேண்டும். தாங்கள் படும் பாட்டை அவர்களே கமராவில் ரெக்கார்டும் செய்ய வேண்டும். அதிக நாட்கள் அப்படி அந்த அத்துவானக் காட்டுக்குள் வாழ்பவரே வெற்றியாளர். சில சமயங்களில் ஓர் ஆண்டு வரைகூட அவர்கள் அப்படி வாழ வேண்டியிருக்கும்!

## கு.த. நம்பர்-1



"THE REAL HOUSEWIVES" - சின்னத்திரையில் ஹிட்டடிக்க இல்லத்தரசிகளைத்தானே குறிவைக்க வேண்டும். நம் ஊரில் சீரியல்கள் அதைச் செய்ய, அமெரிக்காவில் இந்த ரியாலிட்டி ஷோ அதை வேறு மாதிரி செய்கிறது. அப்பர் க்ளாஸ், அப்பர் மிடில் க்ளாஸ் குடும்பத்தலைவிகள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் வாழ்க்கை முறையை நெருக்கமாகப் பதிவு செய்வதுதான் இந்த ஷோ. அமெரிக்காவில் சக்கைப்போடு போடுகிறது. இதுதவிர அவுஸ்திரேலியா, கிரீஸ் போன்ற நாடுகளிலும் இதன் ரீமேக் வெர்ஷன் ஒளிபரப்பாகிறது.

## திறமைக்கு மரியாதை



உலக அளவில் கொண்டாடப்பட்ட டேலன்ட் ஹன்ட் நிகழ்ச்சி `GOT TALENT'. இங்கிலாந்தைச் சேர்ந்த சைமன் கொவலின் மூளையில் உதித்த ஐடியா. இசை, நடனம், மஜிக், மிமிக்ரி, ஸ்டாண்ட் அப் என எந்தத் துறையில் வேண்டுமானாலும் நீங்கள் கில்லியாக இருக்கலாம். குறிப்பிட்ட நேரத்துக்குள் ஷோ, நடுவர்களை இம்ப்ரஸ் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் அடுத்த ரவுண்டுக்குத் தேர்வாவீர்கள். அங்கிருந்து உங்களைக் காப்பாற்ற வேண்டியது மக்களின் பொறுப்பு. யாருக்கு அதிக வாக்குகள் விழுகிறதோ, அவரே மில்லியன் டொலர் வின்னர்.

## பாஸுக்கெல்லாம் பாஸு




1999இல் இருந்து ஒளிபரப்பாகும் இந்த நிகழ்ச்சி இதுவரை உலகம் முழுக்க 387 சீசன்களைக் கடந்துள்ளது. இணையம் பிரபலமாகாத அந்தக் காலகட்டத்தில் போன் செய்து தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு வாக்குப் போட்டுக் காப்பாற்ற வேண்டும். என்னதான் சோஷியல் எக்ஸ்பரிமென்ட், சைக்காலஜிகல் ட்ரீட்மென்ட் என கலர் வளையங்கள் மாட்டப்பட்டாலும், உலகம் முழுக்க அதிகம் சர்ச்சைக்குள்ளாகும் ரியாலிட்டி ஷோ இதுதான்!

## உலகம் சுற்றும் வாலிபர்கள்



மொழி, நாடு பாரபட்சமில்லாமல் அனைவரும் பங்கேற்க ஏங்கும் ஷோ "The Amazing race". இதில் உங்கள் பார்ட்னரோடு கலந்துகொள்ள வேண்டும். அவர் உங்கள் குடும்ப உறுப்பினராக, நண்பராக, லவ்வராக, யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அளவுகடந்த நம்பிக்கை இருவருக்குள்ளும் முக்கியம். உலகம் முழுக்கச் சுற்றி ஏகப்பட்ட டாஸ்க்குகளைச் செய்ய வேண்டும். சராசரியாக 12 அணிகள் கலந்துகொள்ளும். ஒவ்வொன்றாக எலிமினேட் ஆகி இறுதியில் பட்டம் வெல்லும் அணிக்கு 10 இலட்சம் டொலர் பரிசு. உலகம் முழுக்கச் சுற்றலாம், எக்கச்சக்கப் பரிசுகள் என்பதால் வரவேற்பும் அபாரம்.

## நெவர்... எவர்... கிவ்அப்



பிக்பாஸுக்கெல்லாம் முன்னால் வந்த சூப்பர் சீரிஸ் "The Survivor". முன்பின் அறிமுகமில்லாத சிலரை ஒரு தனித்தீவில் இறக்கிவிட்டுவிடுவார்கள். மழை, புயல், எல்லாவற்றையும் அவர்களே சமாளித்துக் கொள்ள வேண்டும். சுற்றிலும் கடல், தொடர்புகொள்ள யாரும் கிடையாது. அந்தக் குழுவில் இருப்பவர்களை இரண்டாகப் பிரித்து நிறையப் போட்டிகள் வைப்பார்கள். தோற்கும் குழுவில் இருப்பவர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து வெளியேற்ற வேண்டும். துரோ[illegible], சோகம், அதிர்ச்சி என மனிதனுக்குள் இருக்கும் மிருகத்தை அப்படியே கமரா கண்கள் நோட் செய்வதால், ஷோவிற்கு ரெட் கார்ப்பெட் வரவேற்பு. 34 சீசன்கள், 512 எபிஸோடுகள் என விரட்டி விரட்டி அடிக்கிறது இந்த சர்வைவர்!

## சமைக்க விடலாமா?



"Master chef" ரியாலிட்டி ஷோக்களின் சூப்பர் சீனியர் இந்தச் சமையல் போட்டி. 1991இல் இருந்து ஒளிபரப்பாகிறது. சமையலுக்காகவே பிரத்தியேக ரியாலிட்டி ஷோ என்ற கான்செப்டே எல்லாரையும் டி.வி முன்னால் அமர்த்தியது. உலகின் முன்னணி சமையல் கலைஞர்கள் தங்களுக்குள் 'யார் பெஸ்ட்?' எனப் போட்டி போடுவார்கள்.

குறித்த நேரத்துக்குள் கொடுத்த மூலப்பொருட்களை வைத்து யார் சுப்பராக சமைக்கிறார்கள் என்பதைக் கண்களில் சமையல் எண்ணெய் ஊற்றியதுபோல் கவனிப்பார்கள் நடுவர்கள். இதேபோல 'செலிபிரிட்டிகளுக்குள் சிறந்த குக் யார்?', 'சாமானியர்களுக்குள் சிறந்த குக் யார்?' என ஏகப்பட்ட வெர்ஷன்கள் வெளியாகின.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி ஏன்? உலகக் கோப்பை மிஸ் குறித்து மிதாலி ராஜ் விளக்கம்!




தோற்றாலும் ஜெயித்தாலும், மீசைய முறுக்கு என்ற கூற்றுக்கு ஏற்ப, லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்து முடிந்த மகளிர் உலகக் கோப்பை இறுதிப்போட்டி அமைந்திருக்கிறது. ஏனெனில் மிதாலி ராஜ் தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்திடம் 9 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து, கோப்பை வெல்லும் வாய்ப்பை இரண்டாவது முறையாக நழுவ விட்டது.

என்றாலும், அவர்கள் கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்துவிட்டனர்! மேலும் அரசியல் தலைவர்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் உட்பட பலர், ட்விட்டரில் தங்களது வாழ்த்துகளைப் பதிவு செய்திருந்தனர்.

### இறுதிப் போட்டியில் நடந்தது என்ன?

வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெறுவதற்கு, 229 ரன்கள் எனும் சுலபமான இலக்கை எதிர்கொண்டு விளையாடிய இந்திய அணி, தொடக்க ஓவர்களிலேயே 2 விக்கெட்களை விரைவாக இழந்துவிட்டது! ஆனால் பின்பு ஜோடி சேர்ந்த பூனம் ராவத் (86 ரன்கள்) மற்றும் ஹர்மான் பிரித் கவுர் (51 ரன்கள்) என இருவரும் சேர்த்து, சேஸிங்கிற்கான அடித்தளத்தைச் சிறப்பாக அமைத்துக் கொடுத்தனர்.

ஆனால் இவர்கள் இருவரும் ஆட்டமிழந்த பிறகு, இந்திய அணியின் சரிவைத் தவிர்க்க முடியவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஏனென்றால் அதன் பின்னர் களமிறங்கிய மிடில்-ஆர்டர் பட்ஸ்மேன்கள் மற்றும் டெயிலெண்டர்கள் அனைவரும், ஒருவித நெருக்கடியுடனும், இறுதிப்போட்டிக்கே உரிய பதற்றத்துடனே விளையாடினர்.

இதனால் எளிதாக எட்டிவிடக் கூடிய இலக்காக இருந்தாலும், ஆட்டத்தின் முக்கியமான நேரத்தில் தவறான ஷொட்களை அடித்து, அவரவர் விக்கெட்களைத் தாரை வார்த்ததால், இந்திய அணியால் வெற்றி பெற முடியாமல் போனது.

எனவே 3 விக்கெட் இழப்பிற்கு 191 ரன்கள் என்ற பலமான நிலையிலிருந்து சறுக்கி, இறுதியில் 48.4 ஓவர்களில் 219 ரன்களுக்கு ஓல் அவுட்டான இந்திய அணி, தனது கடைசி 7 விக்கெட்களை, வெறும் 28 ரன்களுக்கு இழந்ததே இதற்கான சிறந்த உதாரணம்! இந்திய அணியின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தவர், இங்கிலாந்து அணியின் Medium Pace பொளலரான அன்யா ஷ்ரப் சோல்.

இவர் இந்திய இன்னிங்ஸின் கடைசி கட்டத்தில் வீசிய 3.1 ஓவர்களில், வெறும் 11 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்து, 5 விக்கெட்களைக் கபளீகரம் செய்து விட்டார்! இந்நிலையில், போதுமான அனுபவம் இல்லாததாலும், பயம் கலந்த நெருக்கடியுடன் விளையாடியதனாலேயே, உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து விட்டோம் எனக் கூறியுள்ளார், இந்திய மகளிர் அணியின் கப்டன் மிதாலி ராஜ்.

### என்ன சொல்கிறார் மிதாலி ராஜ்?

நாங்கள் முன்பே சொன்னது போல, இங்கிலாந்து அணிக்கு இந்த போட்டி எளிதான ஒன்றாக அமைந்துவிடவில்லை.

ஆனால் நெருக்கடிமிக்க சூழ்நிலையை அவர்கள் கையாண்ட விதம், நிச்சயம் பாராட்டுக்குரியதுதான்.

ஏனெனில் ஒரு நேரத்தில், இரு அணிக்குமே போட்டி சாதகமான ஒன்றாக இருந்தது.

எனவே யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம் என்ற சூழ்நிலையில் விக்கெட்களை இழந்ததால், நாங்கள் பதற்றம் அடைந்தோம்.

ஆனால் அவர்கள் நெருக்கடியிலிருந்து மீண்டு வந்து வெற்றியை வசப்படுத்தினர். ஆதலால் பரபரப்பான தருணத்திலும், இங்கிலாந்து அணி சிறப்பாகச் செயற்பட்டதால், ஆட்டத்தின் போக்கு தலைகீழாக மாறிவிட்டது.

இறுதிப்போட்டி ஏற்படுத்திய பதற்றம், எங்களைத் தோல்வியடைய வைத்துவிட்டது. தற்போதைய இந்திய அணியின் இளம் வீராங்கனைகள் பலரும் அனுபவமற்றவர்கள் என்றாலும், அவர்கள் ஒரு அணியாகச் சிறப்பாகவே செயல்பட்டுள்ளார்கள்.

இந்த அனுபவம், அவர்களுக்கு நிச்சயமாக எதிர்காலத்தில் உதவிகரமாக இருக்கும். என்னால் இன்னும் 2 வருடங்கள் விளையாட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆனால் 2021ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கோப்பைப்போட்டிகளில், என்னை நீங்கள் அணியில் உறுதியாகப் பார்க்க முடியாது எனப் பேசியுள்ளார், இந்த 34 வயது ரன் மெஷின்! (க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: உலகம் சுற்றும் வாலிபன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடல் வரிகள்: வாலி
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்




நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ
நீரலைகள் இடம் மாறி நீந்ததுகின்ற குழலோ
மாதுளையின் பூ போலே மலருகின்ற இதழோ
மான் இனமும் மீன் இனமும் மயங்குகின்ற விழியோ

புருவம் ஒரு வில்லாக பார்வை ஒரு கணையாக
பருவம் ஒரு தளமாக போர் தொடுக்க பிறந்தவளோ
குறுநகையின் வண்ணத்தில் குழி விழுந்த கன்னத்தில்
தேன் சுவையை தான் குழைத்து
கொடுத்ததெல்லாம் இவள் தானோ

பவளமென விரல் நகமும்
பசும் தளிர் போல் வளைகரமும்
தேன் கனிகள் இரு புறமும்
தாங்கி வரும் பூங்கொடியோ
ஆழ்கடலின் சங்காக நீழ்ககழுதது அமைந்தவளோ
யாழிசையின் ஒலியாக வாய்மொழி தான் மலர்ந்தவளோ

செந்தழலின் ஒளி எடுத்து சந்தனத்தின் குளிர் கொடுத்து
பொன்பதத்தில் வார்த்துவைத்த
பெண்ணுடலை என்னவென்பேன்
மடல்வாழை தொடை இருக்க
மச்சம் ஒன்று அதில் இருக்க
படைத்தவனின் திறமை எல்லாம்
முழுமை பெற்ற அழகி என்பேன்

நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ..........

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வார தொடர்ச்சி)

மற்றப்படி ஒரு வேலையில் இறங்கினால் இவர்கள் எப்போதும் வெற்றியுடனே செய்து முடிப்பார்கள். இதன் முடிவில் இவர்களுக்குப் பெயரும் புகழும் கிடைக்கும். இவர்கள் வரப்போகும் எதையும் எண்ணிப் பார்க்கும் திறமை பெற்றிருப்பதுடன் கற்பனையும் புதியவற்றைக் கண்டு பிடிக்கும் ஆற்றலும் கொண்டவர்களாகவே விளங்குவார்கள்.

பொதுக்கூட்டங்களிலும் பெரிய மனிதர்களுடன் ஒன்று சேர்ந்திருப்பதிலும் பொதுச் செயல்களிலும் இவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. விழாக்களிலும் கலை நிகழ்ச்சிகளிலும் இவர்களுக்கு மிகுந்த பற்று உண்டு.

ஒரு குறிப்பிட்ட சுற்றுப்புறத்தில் மற்றவர்கள் எண்ணாத, மற்றவர்களுக்குப் பிடிக்காத செயல்களைச் செய்வார்கள்.

ஆத்திரமுள்ளவர்களாக இருந்தாலும் மிக எளிதில் சினமும் கொள்பவர்களாக இருந்தாலும் கொதிப் படைந்துள்ள மற்றவர்களையும் வெறி பிடித்தவர்களையும்கூட தமது சக்தியால் உடனே கட்டுப்படுத்தி விடுவார்கள். இப்படிப் பட்டவர்களுடன் அடிக்கடி இவர்கள் வாழ்க்கையில் தொடர்புகொள்ளும் நிலை தன்னால் ஏற்படும். இவர்களுள் சிலர் தமது கண்களாலேயே மற்றவர்களைக் கட்டுப்படுத்தி விடும் தன்மை பெற்று விடுவார்கள்.

பணக்காரர் தம் வீட்டில் இவர்கள் பிறந்திருந்தால் மனத்தில் எதுவும் இன்பமில்லை என்று எண்ணும்படி

பெப்ரவரியில் பிறந்த இவர்களுக்கு வயிற்றின் நரம்புகள் பாதிக்கப்பட்டு வயிற்று நோயால் துன்பப் படுவார்கள். எளிய மருந்துகளால் இவர்களைக் குணப் படுத்தவே முடியாது. மிகக் கவனத்துடன் இல்லா விட்டால் கால்களிலும் வீக்கம் காணலாம். உடல் குளிர்ச்சியுடன் இருக்கும். மஞ்சள் காமாலை போன்ற

## ஜனவரி 21-பெப்ரவரி 19ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

நடந்து கொள்வார்கள். எளிய நிலையில் வரும் வாய்ப்புக்களை நழுவ விட்டுவிடுவார்கள். அல்லது வாய்ப்புகள் நழுவியபின் துன்பம் கொள்வார்கள்.

மிக எளிய குடும்பங்களில் பிறந்தவர்கள் தமது கௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட்டாலும் பாதகமில்லை என்று எண்ணும்படி நடந்து கொள்வார்கள். பல விடயங்களில் இவர்கள் மிகுந்த நம்பிக்கையானவர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. தமக்குத் தேவையானவை ஏதாவது ஒரு வழியில் கிடைத்தால் சரி என்றும் இவர்கள் சிலசமயம் எண்ணுவது உண்டு.

உடல் நிலை

நோய் வர வாய்ப்பு உண்டு.

ஏதாவது ஒரு விபத்தில் பற்களை இழந்து விடுவார்கள். கணுக்கால்களிலோ கால்களின் முட்டிகளிலோ அடிக்கடி வலி ஏற்படு அடிக்கடி கால்களில் சுளுக்குப் பிடித்துக்கொள்ளும். கண்நோய்கள் இவர்களைப் பாதிக்கும்.

வர்ணங்கள்-நீலம், பழுப்பு போன்ற நிறங்கள் இவர்களுக்குப் பிடிக்கும்.

பெப்ரவரியில் பிறந்தவர்களில் சிலர்-ரூஸ்வெல்ட், சார்லஸ் டிக்கன்ஸ், ஆபிரஹாம் லிங்கன், தத்துவ ஞானி டார்வின், ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார், ராமகிருஷ்ண பரமஹம்சர், சத்ரபதி, சிவாஜி.

(தொடரும்

# அன்புள்ள அப்பா



தந்தை என்றால் பெண் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.

அதேபோல தான் ஒரு தந்தை தனது ஆண் குழந்தைகளை கவனித்துக் கொள்வதை காட்டிலும், பெண் குழந்தையை அதிக அக்கறை எடுத்து கவனித்துக் கொள்ள வேண்டும். அது ஏன் என்று தெரியுமா?

தனது தந்தையின் மீது தான் பெண் குழந்தை அதிக ஆர்வம் காட்டுவதாகவும், மனம்விட்டு பேச வேண்டும், தன்து உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும், சோகங்களை பகிர வேண்டும் என்ற எண்ணம் தாயை விட தந்தையிடம்தான் அதிகமாக இருக்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே ஆண்கள் தனது குழந்தையின் மன நிலையை புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு தந்தையால் ஆண் குழந்தைகளின் உள் உணர்வுகளை புரிந்து கொள்வதை விட பெண் குழந்தைகளின் உள் உணர்வுகளை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது. எனவே தனது குழந்தைக்கு வேண்டியதை செய்ய இவர்களால் முடியும்.

என்ன தான் பெண் குழந்தைகள் தன் தாயுடன் நாள் முழுவதையும் கழித்தாலும் கூட, தன் தந்தையை கண்டவுடன் தந்தையிடம் ஒட்டிக் கொள்ளும்.


பெண் குழந்தை களுக்கு தன் தந்தையுடன் நேரத்தை செலவழிப்பது மற்றும் விளையாடுவது என்றால் மிகவும் பிடிக்குமாம்.

பெண் குழந்தைகளால் மற்றவர்களை காட்டிலும், தனது முகபாவனைகள் மற்றும் பேச்சு ஆகியவற்றை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

தாயைக் காட்டிலும் தந்தையால் தனது பெண் குழந்தைக்கு அதிக வெளியுலக அறிவை கொடுக்க முடியும். தந்தையுடன் செலவிடும் நேரங்களில் பெண் குழந்தைகள் அதிகமாக கற்றுக் கொள்ள முடிகிறது.

பெரும்பான்மையான குழந்தைகள் தங்களது தந்தையின் செல்லப் பிள்ளைகளாக இருப்பார்கள். தாயுடனான தந்தையின் அன்பு ஒரு குழந்தையின் மனநலம் மற்றும் உடல் நலத்தை பேணிக் காக்கிறது.

# அறுவகைச் சுவை என்ன என்ன?



காரம்: உடலுக்கு உஷ்ணத்தைக் கூட்டுவதுடன் உணர்ச்சிகளை கூட்டவும் குறைக்கவும் செய்யும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு போன்றவற்றில் அதிகப் படியான காரச்சுவை அடங்கியுள்ளது.

கசப்பு: உடம்பிலுள்ள உதவாத கிருமிகளை அழித்து உடம்பிற்கு சக்தி கூட்டும். சளியைக் கட்டுப்படுத்தும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

பாகற்காய், சுண்டக்காய், கத்தரிக்காய், வெந்தயம், பூண்டு, எள், வேப்பம்பூ, ஓமம் போன்றவற்றில் இந்த சுவை மிகுதியாய் உள்ளது.

இனிப்பு: உடம்புதசையை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. வாதத்தைக் கூட்டும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

பழவகைகள், உருளை, கரட் போன்ற கிழங்கு வகைகள், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் மற்றும் கரும்பு போன்ற தண்டு வகைத் தாவரங்களிலும் இனிப்புச்சுவை அதிக அளவில் அடங்கியுள்ளது.

புளிப்பு: இரத்தக் குழாயின் அழுக்கை நீக்க வல்லது. வாதத்தைக்கூட்டும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

எலுமிச்சை, புளிச்ச கீரை, இட்லி, தோசை, அரிசி, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நாரத்தங்காய் போன்றவற்றில் அதிகம் உள்ளது.

துவர்ப்பு: இரத்தம் வெளியேறாது தடுக்க வல்லது. இரத்தம் உறைவதை கூட்டும் தன்மையுள்ளது.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

வாழைக்காய், மாதுளை, மாவடு, மஞ்சள், அவரை, அத்திக்காய் போன்ற காய் வகைகளில் அடங்கியுள்ளது.

உப்பு: ஞாபகசக்தியை கூட்டும். கூடினால் உடம்பில் வீக்கத்தை ஏற்படுத்தும்

கிடைக்கும் உணவுப் பொருட்கள்:

கீரைத் தண்டு, வாழைத் தண்டு, முள்ளங்கி, பூசணிக் காய், சுரைக்காய், பீர்க்கங் காய் போன்றவற்றில் அதிக மாய் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணன்



பெரும் நடிகரின் படங்களுக்கு எப்போதும் ஒரு வரவேற்பு இருக்கும். அந்த வரிசையில் இருக்கும் முக்கிய நட்சத்திரமான அர்ஜுன் அவர்களின் நிபுணன் வந்துள்ளது. நினைத்த படி வந்துள்ளதா இந்த நிபுணன், அர்ஜுன் மீண்டும் ஆக்ஷன் கிங் என நிரூபித்தாரா என பார்ப்போம்.

அர்ஜுன் ஒரு உயர் பொலிஸ் அதிகாரி. இவருக்கு ஒரு குடும்பம் இருப்பது போல, பொலிஸிலும் இவருக்கு ஒரு குடும்பமாக வரலட்சுமியும், பிரசன்னாவும் இருக்கிறார்கள்.

அர்ஜுனுக்கு ஒரு டாஸ்க் மேலிடத்தில் இருந்து வருகிறது. அதில் மக்களுக்கு பெரும் தொந்தரவாக இருக்கும் ஐவரை பிடிக்க வேண்டும் என்ற கட்டளை.

அதற்குள் பல விடயங்களுக்காக போராடும் சமூக ஆர்வலர் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்படுகிறார். இங்கு தான் கதை சூடுபிடிக்க தொடங்குகிறது.

வித்தியாசமான பிளான், மறைமுக எச்சரிக்கை, சீக்ரட் கோட் வேர்ட்ஸ் என பல நுணுக்கங்களை தடயமாக விட்டு செல்கிறான் அந்த கிரிமினல்.

நடந்ததை விசாரிக்க தொடங்கியதுமே அடுத்தடுத்து டாக்டர், வக்கீல் என இரண்டு கொலைகள். விசாரணை வலுக்க அடுத்தது யார் என்ற துப்பு கிடைக்கிறது.

முக்கிய கட்டத்தில் ஒரு பெரும் டிவிஸ்ட். அர்ஜுனுக்கு பெரும் ஆபத்து. பலியாகப்போகும் அந்த கடைசி நபர் யார். அர்ஜுன் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டாரா? சீரியல் கொலையாளி யார்? பிடிபட்டானா? அந்த நால்வரை கொல்வதன் பின்னணி உண்மை என்ன என்பது தான் முழுக் கதை.

ஆக்ஷன் கிங் அர்ஜுனை ஏற்கனவே பொலிஸ் அதிகாரியாக பார்த்திருப்போம். அவருக்கு இது ஒன்றும் புதிதல்ல. ஆனாலும் அதே வேகத்தை இந்த ரோலில் காட்டியுள்ளார். குறிப்பாக அவருக்கு இது 150 வது படம்.

வரலட்சுமி சொல்லவே வேண்டாம். தன் திறமையை நிரூபித்து ஜாம்பவான்களிடம் பாராட்டை வாங்கியவர். தற்போது இந்த படத்தில் ஒரு துப்பறியும் பொலிஸாக அவர் களமிறங்கியுள்ளார். சீஃப் சீஃப் என அர்ஜுனை சுற்றும் இவருக்கும் ஒரு எதிர்பாராத ஆபத்து.



அடுத்தது பிரசன்னா. இவரை ஹீரோ, வில்லன் என பார்த்திருப்போம்.

ஆனால் இப்படத்தில் சற்று வித்தியாசமான ஒரு ரோல். தன் திறமையை நிரூபிக்க ஒரு சான்ஸ். இவரும் தன் நடிப்பில் ஸ்கோர் செய்கிறார்.

வைபவ் அர்ஜுனுக்கு தம்பியாக வந்தாலும் சிறு சிறு ரோல்கள் மட்டுமே. தனக்கே உரிய இயல்பான ஸ்டைலை வைபவ் விடவில்லை.

சுமன், சுஹாசினி என ஜோடியாக இருவரும் ஒரு முக்கிய காட்சியில் வருகிறார்கள். எதிர்பாராத ஒரு இடத்தில் நடிகர் கிருஷ்ணாவும் வந்துபோகிறார் இல்லை இல்லை, இறங்கி விளையாடியுள்ளார் என்றே சொல்லலாம்.

ஒரு கிரைம் ஆக்ஷன் ஸ்டோரிக்கு உரிய தீம் மியூசிக் ஆக்ஷன் கிங் தான் அனைத்து இடங்களிலும் முழு ஸ்கோர் அள்ளுகிறார். அவருக்கே உரிய ஸ்டைல் சற்றும் குறையவில்லை.

தீம் மியூசிச், பேக்ரவுண்ட் பிளே, ஹைப் சீக்குவன்ஸ் என அனைத்திலும் பொருந்துமாறு இசையமைத்துள்ளார் நவீன்.

இயக்குநர் அருண் வைத்யநாதனின் இரண்டு வருட முயற்சியை பாராட்டலாம். கதையாக்கம், காட்சிகள் நகர்த்தும் விதம் என படம் முழுக்க எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளார்.


எல்லா விடயங்களும் சரியாக அமைந்து விட்டால் போதாது. ஏதாவது ஒரு குறை இருக்க வேண்டும் தானே. ஒரு சில இடத்தில் சிறியதாய் கண்ணிற்கு தென்படும் வரலட்சுமி டப்பிங் பேசுவதில் கொஞ்சம் நிறுத்தி பேசலாம் என தோன்றுகிறது.

பிரசன்னா, வரலட்சுமி இரு திறமைசாலிகளுக்கு இன்னும் சவால் வைத்திருக்கலாம்.

சுப்பர் ஸ்டாரே படத்தை பார்த்துவிட்டு கண்டிப்பாக ஹிட் என கூறியிருக்கிறார்.


பொறுத்திருந்து பார்ப்போம். மொத்தத்தில் நிபுணன் நின்று விளையாடுகிறார்.

அனைவரும் பார்க்கலாம்.



## திரைவிமர்சனங்கள்

# கூட்டத்தில் ஒருத்தன்



ஜோக்கர் என்ற தரமான படத்தை தைரியமாக தயாரித்தவர் S.R.பிரபு. இவரின் தயாரிப்பில் மீண்டும் ஒரு தரமான கதையை நம்பி இன்று உலகம் முழுவதும் திரைக்கு வந்துள்ள படம் கூட்டத்தில் ஒருத்தன். அசோக் செல்வன், ப்ரியா ஆனந்த் என பலர் நடிக்க, கூட்டத்தில் ஒருத்தனாக அசோக் செல்வன் ஜொலித்தாரா? பார்ப்போம்.

எப்போதும் ஒரு கல்லூரியின் பர்ஸ்ட் பென்ச் ஸ்டூண்ட், லாஸ்ட் பென்ச் ஸ்டூண்ட் என்று இரண்டு வகை இருப்பார்கள். இவர்களை பற்றி தான் எப்போதும் படங்கள் பேசும், ஆனால், மிடில் பென்ச் என்பதை யாருமே இதுவரை பேசியது இல்லை.

அப்படி ஒரு மிடில் பென்ச் மாணவனின் கதை தான் இந்த கூட்டத்தில் ஒருத்தன், அசோக் செல்வன், எதிலும் நம்பர் 1-ஆக இருக்கும் ப்ரியா ஆனந்தின் மீது காதல் கொள்கின்றார்.

உன்னை நான் காதலிக்க வேண்டுமென்றால் நீ ஏதாவது பெரிய விடயம் செய்ய வேண்டும், என்னை போல் நம்பர் 1 ஆக இருக்கவேண்டும் என்று ப்ரியா ஆனந்த் கூறுகின்றார்.

ப்ரியா ஆனந்த் மனதில் இடம் பிடிக்க அசோக் செல்வன் செய்யும் வேலைகள், அதன்விளைவு, அதை தொடர்ந்து அவர் கூட்டத்தில் ஒருத்தனாக திகழ்ந்தாரா? என்பதே மீதிக்கதை.

அசோக் செல்வனின் திரைப் படங்களிலேயே இது தான் பெஸ்ட் என்று கூறிவிடலாம், அத்தனை பொருத்தம் மிடில் பென்ச் மாணவனாக இவர் தோன்றும் போது, ப்ரியா ஆனந்தை இம்ப்ரஸ் செய்ய அவர் சமுத்திரக்கனியின் உதவியை நாட, அதை தொடர்ந்து அவருக்கே அது ஆபத்தாக, பின் இரண்டாம் பாதியில் மீதமாகும் உணவை வைத்து அவர் செய்யும் விடயமெல்லாம் பலருக்கும் ஊக்கம் கொடுக்கும்.

இப்படி ஒரு கதைக்களத்தை தேர்ந்தெடுத்து தயாரித்த பிரபு, இதை இயக்கிய ஞானவேல் இருவரையும் மனம் திறந்து பாராட்டலாம், ஏனெனில் 80வீத மாணவர்கள் இப்படத்தில் அசோக் செல்வனின் கதாபாத்திரத்தில் பொருந்துவார்கள்.

இரண்டாம் பாதியில் வரும் அந்த மீதமாகும் உணவை வைத்து செய்யும் விடயங்கள், இதை நிஜ வாழ்க்கையிலேயே ஒருத்தர் செய்து வருகின்றார் என அவருக்கு கிரிடிட்ஸ் கொடுத்த விதம் சுப்பர்.

நிவாஸ் கே.பிரசன்னாவின் இசையில் பாடல்கள் இனிமை, அதைவிட பின்னணியில் கலக்கியுள்ளார், வர்மாவின் ஒளிப்பதிவும் கவனம் ஈர்க்கின்றது.

அசோக்செல்வனின் நடிப்பு ரசிக்க வைக்கின்றது. கதைக்களம், அதை திரைக்கதையாக எல்லோருக்கும் பிடிக்கும் படி கொண்டு சென்றவிதம்.

படத்தின் முதல் பாதியில் பால சரவணனின் காமெடி பல இடங்களில் சிரிக்க வைக்கின்றது.

சமுத்திரக்கனி என்ன தான் ரவுடியாக இருந்தாலும், அசோக் செல்வனுக்காக இவர் செய்யும் வேலைகள் கொஞ்சம் யதார்த்தம் விலகியுள்ளது.

மொத்தத்தில் இன்றைய இளைஞர்களுக்கு ஓர் ஊக்கம் தரும் படமாக இந்த கூட்டத்தில் ஒருத்தன் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.விசேட நிபுணர் அறிக்கை அதிர்ந்தது இலங்கை அரசு

புதிய அரசியலமைப்பா அல்லது திருத்தமா என்பதற்கு அப்பால் இது வருமா என்பதே ஐயமாகவுள்ளது. இந்த குழப்ப நிலைகளும், மாறுபட்ட கருத்துக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில் பல்வேறு இராஜதந்திரிகளின் வருகையும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதில் கடந்த வாரம் மனிதவுரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பென் எமர்ஷன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை முக்கியமானதொரு நிகழ்வாகும்.

இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்த அவர் நீதிபதிகள் குழாம், சிறைச்சாலையில் கடந்த பல வருடாங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், சிறைச்சாலையில் இருந்து விடுதலையானோர், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் என்பவற்றில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போதும் புலனாய்வுத் துறையினரின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வோர் மற்றும் நீதித்துறை அமைச்சர் என பலதரப்பட்டவர்களை சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தார்.

இச்சந்திப்பின்போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் 2015 இல் ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30-1 தீர்மானம் நடைமுறைப்படுத்துவதற்கான அறிகுறிகள் எதுவுமின்றியே அதே தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு 34-1 இன் மூலம் மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் ஐ.நாவால் வழங்கப்பட்டு இருந்தது.

இதற்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் ஆதரவளித்திருந்தது. இந்த நிலையிலேயே ஐ.நாவின் மனிதவுரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பிலான விசேட பிரதிநிதி விஜயம் செய்துள்ளார். கடந்த 14 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளதுடன், நல்லாட்சி எனக் கூறும் இந்த அரசாங்கத்திற்கு நெருக்கடிகளையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், ஐ.நாவில் கால அவகாசம் வழங்கி நான்கு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் சர்வதேச இராஜதந்திரிகளுக்கும், ஐ.நாவுக்கும் இலங்கையில் மனிதவுரிமைகள் தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து வந்த நிலையில் ஐ.நா பிரதிநிதி பென் எமர்ஷன் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையின் உண்மை நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ஐ.நா. விசேட பிரதிநிதியின் கருத்து தொடர்பில் தெரிவித்து வரும் கருத்துக்கள் அதன் தாக்கத்தை வெளிப்படுத்தியும் இருக்கின்றது.

கடந்த 26 ஆண்டுகள் நடைபெற்ற போர் மற்றும் போருக்கு பின்னர் நடந்த கடுமையான மனிதவுரிமை மீறல்கள் சம் பந்தமாக இலங்கை அரசு இதுவரை எதனையும் செய்யவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வழங்கிய இரண்டு ஆண்டு கால அவகாசத்தில் நான்கு மாதங்கள் கழிந்துள்ள போதிலும் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளின் பிரதான நோக்கங்களை அடைவதில் இலங்கையின் முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் இருக்கின்றது.

இலங்கையில் கீழ்த்தரமான மற்றும் மெருகூட்டப்பட்ட சித்திரவதைகள் இடம்பெறுகிறது எனவும்,



தமிழ் சிறுபான்மை மக்களையே பயங்கரவாதத் தடைச்சட்டம் பாதித்திருக்கின்றது எனவும் தெரிவித்துள்ள ஐ.நா.விசேட பிரதிநிதி சர்வதேசத்தின் பொறுமைக்கும் எல்லையுண்டு என எச்சரித்தும் இருக்கின்றார்.

ஒரு தசாப்த ஆண்டு காலமாக தமது உரிமைக்காக போராடி வரும் தமிழ்த் தேசிய இனம் ஆயுத ரீதியாக மேற்கொண்ட போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர் ஜனநாயக ரீதியாக தமது உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றது.

அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக அதன் தலைமை சர்வதேச இராஜதந்திரிகளிடமும், ஐ.நாவிலும் இலங்கை அரசாங்கம் சில கருமங்களை ஆற்றி வருவதாகவும், அவை மெதுவாக இடம்பெறுவதாகவும் அவர்கள் தொடர்ந்தும் பல கருமங்களை ஆற்ற வேண்டியுள்ளது.

அதற்கு காலஅவகாசம் வழங்க வேண்டும் எனக்கூறி வருகிறது. ஆனால், பயங்கரவாதம் மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்தவரும், பல நாடுகளுக்கும் விஜயம் செய்து அந்த நிலைமைகள் தொடர்பில் அவதானித்து அறிக்கையிட்டவருமான ஐ.நா. பிரதிநிதி இலங்கை தொடர்பில் மேற்சொன்னவாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்த நிலையைப் பார்க்கும்போது பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரலாக ஐ.நா பிரதிநிதியின் கருத்துக்களை வலுப்படுத்தும் முகமாக உண்மை நிலைமையை வெளிப்படுத்தி தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்காக உழைக்க வேண்டிய இவ் இனத்தின் தலைமை இன்று அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக தமக்கு வாக்களித்த மக்கள் மத்தியிலும், சர்வதேச இராஜதந்திர மட்டங்களிலும் செயற்பட்டு வருவதாகவே கருத வேண்டியிருக்கின்றது.

புண்பட்ட தமிழ்த்தேசிய இன மக்களுக்கு ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் குழுவின் கருத்துக்கள் மருந்திடுவதாகவும், தம்பால் அக்கறை கொண்டு வெளியிடப்பட்ட கருத்துக்களாகவும் தெரிகிறது.

ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் போராட்ட குரல்களை பிரதிபலிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள அதேவேளை, அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பின் தலைவர் வெளிநாட்டு இராஜதந்திரி போல் அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

அதேவேளை பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்து அறிக்கையிட்ட ஐ.நாவின் அனுபவமிக்க விசேட பிரதிநிதியின் கருத்தால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள அரசாங்கம் அதனை கடும் தொனியில் வெளிப்படுத்தியும் இருக்கின்றது.

நல்லாட்சி எனக் கூறப்படும் இந்த அரசாங்கத்தின் நீதித்துறை அமைச்சர் ஐ.நாவிசேட பிரதிநிதியுடனான சந்திப்பின் போது கடும் போக்கில் நடந்து கொண்டதுடன், அவரது கருத்துக்களுக்கும் கடும் போக்கில் பதில் அளித்துள்ளார்.

இவருடைய பதிலானது சர்வதேச நாடுகளின் இராஜதந்திர வட்டாரங்களை சினமடைய செய்திருக்கின்றது. எமர்சன் உள்ளிட்ட ஐ.நாவின் அறிக்கையாளர்கள் "பண்பாற்றல் அற்றவர்கள் எனவும், அரசியல் ரீதியான செயலாண்மைத் திறனற்றவர்கள் எனவும்" கடும் தொனியில் நீதி அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

நீதித்துறை அமைச்சருடனான சந்திப்பில் ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் குழு பாதியிலேயே வெளியேறி இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நீண்டகால போருக்கு முகம் கொடுத்த நாடு ஒன்றில் ஆட்சி மாற்றத்தினையடுத்து நல்லாட்சி, நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்கம் கூறிவரும் நிலையில் அந்த அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஒரு சர்வதேச இராஜதந்திரியுடன் நடந்து கொண்ட முறை இந்த நாட்டின் ஜனநாயக பண்பு மீதும், பொறுப்பு வாய்ந்த அமைச்சரின் அரசியல் அனுபவம் தொடர்பிலும் கேள்வி எழுப்பியிருக்கிறது.

நீண்டகாலமாக எத்தகைய விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள 71 அரசியல் கைதிகளையும்விட முடியாது என நீதிஅமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்தானது தமிழ் சமூகத்தை இந்த அரசாங்கமும் தொடர்ந்தும் அடக்கி ஆள தான் முனைகின்றதா என்ற கேள்வியை எழுப்பியிருக் கிறது.

நீதித்துறை அமைச்சர் என்பவர் அந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒருவராக செயற்பட வேண்டும். அதை விடுத்து ஒரு இனம் சார்ந்தோ, அல்லது மதம் சார்ந்தோ செயற்பட முடியாது.

மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி விடயத்தில் இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்ட கருத்துக்களும் இவ்வாறே சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த நிலையில் பௌத்த சாசனத்தை காப்பாற்றுவதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் உரிய பொறுப்புக்களை ஒரே அமைச்சரிடம் கொடுத்திருப்பதானது, எவ்வாறு அவரால் நீதியை நிலைநாட்ட முடியும் என்ற கேள்வியை எழுப்புகிறது.

ஐ.நா.விசேட பிரதிநிதிகளின் உடைய சிறைச்சாலை விஜயமும் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையும் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் தேசிய இனத்தின் மீது செலுத்தி வரும் ஆதிக்க போக்கை படம் பிடித்து காட்டுகிறது. இதனை நிரூபிக்கும் வகையில் அமைச்சரவையில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்தும் அமைந்துள்ளது.

இந்தநிலையில் 2015 ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தகையுடனேயே நூறு நாள்வேலைத் திட்டத்தில் அரசியலமைப்பு வரும் எனக் கூறப்பட்டது. அதனையடுத்து இதனை உடனடியாக செய்ய முடியாது கால அவகாசம் தேவை எனக் கூறப் பட்டது.

இன்று பொதுத் தேர்தல் முடிந்தும் இரண்டு ஆண்டுகள் ஆகிய நிலையில் புதிய அரசியலமைப்பு வருமா என்ற கேள்வி எழுகிறது. ஐ.நாவின் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையில் கூறப்பட்ட பொறுப்புக் கூறல், நல்லிணக்க பொறிமுறையை ஏற்படுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குதல், மீள் நிகழாமையை உறுதிப்படுத்தல் என்கின்ற நான்கு விடயங்களும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

அதனை நிறைவேற்றுவது தொடர்பிலும் அரசாங்கம் சிரத்தை கொண்டுள்ளதாகவும் தெரியவில்லை. ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் குழுவினரும் இதனையே வெளிப்படுத்தியுள்ளனர்.

19 ஆவது திருத்தத்தின மூலம் 100 நாள் வேலைத்திட்டத்தில் ஜனாதிபதியினுடைய அதிகாரங்கள்ள ஓரளவுக்கு குறைப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது.

வரப்போகின்ற அமர்வுகளில் புதிய தேர்தல் முறை சீர்திருத்தத்தையும் பாராளுமன்றத்தில் அதே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆக, புதிய அரசியல் யாப்பில் உள்ளீர்க்கப்பட வேண்டிய முதல் இரண்டு விடயங்களும் யாப்பு திருத்தத்தின் மூலமே நிறைவேற்றப்பட்டுவிடும்.

மூன்றாவது விடயமான அரசியல் தீர்வு என்பது எட்டாக் கனியாகவே மாறிவிடும் ஆபத்து உள்ளது. இதனையே பிரதமர் 2018 ஜனவரியில் வழிநடத்தல் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 உடன் ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகிறது. இவைகள்ள வைத்து பார்க்கின்ற பொழுது நிபந்தனையற்ற ஆதரவு வழங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டதாகவே தெரிகிறது.

தனிநாடு கோரி போராடிய தமிழ்த் தேசிய இனத்தின் விடிவு என்பது மீண்டும் இலவு காத்த கிளியின் நிலைமைக்கு திரும்பியுள்ளது.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# facebook
# சிவப்பு நிலா



ஒரு நாள் இரவு 12 மணி அளவில் ராமு தன் அலுவலகத்திலிருந்து தன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் செல்லும் பாதையில் இருந்த மின் விளக்குகள் எல்லாம் அணைந்து அணைந்து எரிந்தது. அவனுடைய பைக் ஒரு இடத்தில் திடீரென்று நின்றது.

ராமு வாகனத்தில் என்ன பிரச்சினை என்று பார்க்க கீழே இறங்கினான். அங்கே ஒரு செல்போனை பார்த் தான். அதை எடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்தான். அவன் அதை எடுக்காமல் அங்கு இருந்து வந்து விட்டான்.

வீட்டிற்கு வந்து சேர்ந்தான் அவன் வந்த உடன் அவனுடைய மனைவி அவன் அருகே வந்தாள். அவன் அவளிடம் சாப்பாடு எடுத்து வை என்று சொன்னான் .

அவளும் சாப்பாடு எடுத்து வைக்க சென்றாள். அப்பொழுது நேரம் சரியாக 1.30 மணி. அவன் சாப்பிட்டு கொண்டிருக்கும் போது அவன் பையில் ஏதோ சத்தம் வந்தது. அவள் மனைவி அது என்ன என்று பார்க்க சென்றாள். ராமு அவளை தடுத்தான். பின் அவனே சென்று என்ன என்று பார்த்தான் .

பார்த்த அவனுக்கு அதிர்ச்சி. அவன் அந்த ரோட்டில் பார்த்த செல்போன் அவன் ஷேர்ட் பாக்கெட்டில் இருந்தது.

அவன்மனைவிஅதுயாரோட போன் என்று கேட்டாள்.

அதற்கு அவன் எதுவும் சொல்லாமல் அவளை போய் தூங்க சொன்னான்.

இரவு முழுவதும் அதை பற்றி யோசுச்சிக்கிட்டயே இருந்தான் .

காலைல எழுந்த உடன்அந்த செல்போன எடுத்தான். அதுல திடீரென்று யாரோ போன் பண்ணாங்க. அவன் அந்த போனை எடுக்கவே இல்ல.

அவன் அந்த செல்போன ஒரு சாமியார் கிட்ட கொண்டு போனான். அந்த சாமியார் அவன்கிட்ட அந்த ஆத்மா எதுவோ உன்கிட்ட பேச முயற்சி செய்யிதுனு சொன்னாரு. அவனுக்கு ஒன்னும் புரியல.

வீட்டுக்கு போனான். வீட்டுக்கு போன உடனேயே அந்த செல்போன்ல இருந்து போன் வந்துச்சு.

அதுல நிஷானு பேர் போட்டிருந்தது. அவனும் அந்த போனை எடுத்து பேச ஆரம்பிச்ச உடனேயே அவன் மனைவி ரூம்ல இருந்து கத்தும் சத்தம் கேட்டது.

அவன் அங்க போய் பார்க்க அவன் மனைவி ஒரு விதமா பயங்கரமா பேசிகிட்டு இருந்தா.

ராமு அவன் மனைவியை கூப்பிட்ட உடனே அவ நான் உன் மனைவி இல்ல, என் பெரு நிஷானு சொன்னா.

ராமு பயப்படாம உனக்கு என்ன வேணும்னு சொல்லு னு கேட்டான்.

அதுக்கு நிஷா என் ஊரு சிங்கப்பட்டி இங்க தா பக்கத்துல இருக்கு.

என் குடும்பத்துல நான் என் அம்மா அப்பா மட்டும்தா. என் அம்மைக்கும் அப்பாக்கும் கண்ணு தெரியாது. அவங்களுக்கு ஒபரேஷன் பண்றதா இருந்தோம். அதுக்காக அவங்கள வைத்தியசாலையில சேர்த்திட்டேன்.

அவங்களுக்கு ஒபரேஷன் பண்றதுக்கு 20 லட்சம் கேட்டாங்க. நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நான் எங்க வீட்டுல இருந்து ஹொஸ் பிடல் போற வழில என்ன ரெண்டு பேர் சேந்து கொன்னுட்டாங்க. என்ன கொன்னுட்டு என் பணத்தையும் எடுத்துட்டு போய்ட்டாங்க. ஆனா நான் அவங்கள தேடி போய் கொன்னுட்டேன். அவங்க கிட்ட இருந்து அந்த பணத்தை யும் எடுத்துட்டேன். என் அம்மைக்கும் அப்பாக்கும் நாளைக்கு ஒபரேஷன்.

எப்படியாது அந்த பண த்த எடுத்துட்டு போய் குடுத்துடுங்கனு சொன்னா. அதுக்கு ராமு அதுக்கு ஏன் என் குடும்பத்தை தொல்லை பண்றனு கேட்டான்?

நிஷா அன்னைக்கு அவங்க என்ன கொல்லும்போது நான் கடைசியா பார்த்தது உன் முகம் தான். நீ என்னோட செல்போன் எடுக்காமப் போனதால நீ ரொம்ப நல்லவன்னு தெரிஞ்சிகிட்டன். தயவு செஞ்சு என் அம்மா அப்பாவை காப்பாத்துனு சொன்னா. ராமு சரி னு சொன்னான்.

அப்புறம் அவன் காசை எடுத்துட்டு போய் வைத்திய சாலையில் கட்டி அவளோட அம்மா அப்பாவையும் ராமு அவங்க கூடயே வச்சு பாத்துக்கிட்டான். நிஷாக்கு என்ன நடந்ததுன்னு அவங்க ரெண்டு பேர் கிட்டயும் சொன்னான் .


அவங்க் அத பத்தி தினமும் கவலைப்பட்டாங்க. ஆனா அவங்களுக்கு ஒரு பக்கம் சந்தோசமாகவும் இருந்தது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1147

### கஜரூபன்




### ராகுலன் பாலா




### திலீபன்




### சக்தி




### மகேஸ்வரநாதன் கிரிசன்




### பிரதிப்குமார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 95

# உடலுக்கு நன்மை தரும் சூரிய ஒளி

## வெயிலினால் விற்றமின் தொகுப்பு



சூரிய ஒளியிலுள்ள புறஊதா கதிர்கள் (Ultra Violet Brays) எமது தோலில் விற்றமின் டி உற்பத்தியாவதற்கு அவசியமாகிறது. எமக்குத் தேவையான விற்றமின் டி இல் பெரும்பகுதி குறிப்பாக 90 தொடக்கம் 95 வீதமானவை சூரியஒளி மூலமாகவே தோலில் உற்பத்தியாகின்றன.

போதிய சூரியஒளி நேரடியாகத் தோலில் படாவிட்டால் விற்றமின் டி குறைபாடு ஏற்பட்டும் பலநோய்கள் ஏற்படலாம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் பலருக்கு விற்றமின் டி பற்றாக்குறையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரிய ஒளி குறைவில்லாமல் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளிலும் விற்றமின் டி குறைபாடு பலருக்கு இருப்பதென்பது அதிர்ச்சிகரமான விடயமாகும்.

வெள்ளையர்களைவிடக் கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் (Melanin) எனும் நிறப் பொருளால் சூரியஒளி தோலினுள் ஊடுருவுவது குறைவடைகின்றது. இதனால் வெள்ளையர்களைவிட ஆசிய நாட்டவர்களான நாம் அதிகநேரம் சூரிய ஒளியை உடலில் படவிட வேண்டும்.

### சூரியஒளியும் விற்றமின் டி உம் உடலுக்கு தரும் நன்மைகள்

1. விற்றமின் டி ஆனது கல்சியம் அகத்துறிஞ்சப்படுவதற்கு அவசியமாகும். ஆக- எலும்பு.பல் ஆரோக்கியத்திற்கு சூரியஒளி அவசியமாகிறது. குறிப்பாக மாதவிலக்கு நின்றபின் பெண்களில் ஏற்படும் ஒஸ்ரியோபுறோசிஸ் (Osteoporosis) எனும் நோய்க்கு கல்சியம் குறைவது காரணமாக விளங்குகிறது.

2. சூரியஒளியினால் எமது உடலில் செறோரொனின் (Serotonin) எனும் ஓமோன் அதிகமாக சுரக்கப்படு கின்றது. இந்த ஓமோன் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக இயங்க உதவுகின்றது. சூரியஒளி குறைந்த குளிர்காலங்களில் மேலைத்தேய நாடுகளில் நரம்புத் தளர்ச்சி அதிகம் ஏற்படுகின்றது.

3. சூரியஒளியானது உடலின் கொலஸ்ரோல் அளவு. குருதியமுக்கம் என்பவற்றைக் குறைக்கின்றது. வெயில் குறைந்த குளிர் காலங்களிலேயே மாரடைப்பு பொதுவாக ஏற்படுகின்றது. எனவே சூரிய வெளிச்சம் மாரடைப்பை குறைக்கின்றது என்பதை ஊகிக்கலாம்.




4. அதுமட்டுமா! சூரியஒளி உடலில் படுவதால் உடல்பருமன் குறைவடைவதுடன் நீரிழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

5. சூரியஒளியினால் உடல்நோ.மூட்டு வாதம் என்பன குறைவடைகின்றன.




6. அதிகமான சூரியஒளி குறிப்பாக வெள்ளையர்களின் தோலில் புற்றுநோயை ஏற்படுத்தலாம். ஆனால் அளவான சூரியஒளி உடலில் படுவதால் பல்வேறு விதமான புற்றுநோய்கள் ஏற்படுவது குறைவடைவதாக அண்மையில் வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்புப் புற்றுநோய், குடல்புற்றுநோய், கருப்பைப்புற்றுநோய், இரப்பைப்புற்றுநோய் என்பன அவற்றில் சிலவாகும்.



7. மிதமான சூரிய ஒளியினால் மாதவிலக்குப் பிரச்சினைகள் குறைவடைகின்றன. அத்துடன் மாதவிலக்கு நிற்பதும் தள்ளிப்போடப்படுகின்றது. குறிப்பாக ஆண்மைத்தன்மை அதிகப்படுவதுடன் பெண்களில் குழந்தைப் பேற்றுக்கான சாத்தியங்கள் அதிகப்படுத்தப்படுகின்றன.

8. சூரியஒளி உட்டலில் படுவதால் நோய் எதிர்ப்புச்சக்தி அதிகரிக்கின்றது.

விற்றமின் டி சில உணவுகளிலேயே காணப்படுகின்றது. தன்மையுள்ளருனா சமன் (Tunasaman) போன்ற மீன்களில் விற்றமின் டி காணப்படுகிள்றது. பால், முட்டை என்பவற்றிலும் விற்றமின் டி காணப்படுகின்றது. ஆனால் உணவு மூலம் எடுக்கப்படும் விற்றமின் டி உடலுக்கு போதுமானது அல்ல. விற்றமின் டி உள்ள மாத்திரைகள் இப்போது பாவனையில் உள்ளன. ஆனாலும் இந்த வகையில் எடுக்கப்படும் விற்றமின் டி யால்



மேற்குறிப்பிட்ட நன்மைகள் அதிகம் கிடைப்பதில்லை என ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

ஒருநாளைக்கு உடலில் படவேண்டிய சூரியஒளியின் அளவு ஆசியநாட்டவர்களான நாங்கள் ஒவ்வொரு நாளும் அண்ணளவாக அரைமணிநேரம் வெயிலில் நின்றால் போதுமானதாகும்.

குறிப்பாக காலை 6 மணி தொடக்கம் 10 மணிவரை அல்லது மாலை 4 மணி முதல் 6 மணிவரையுள்ள நேரத்தில் சூரியஒளி படத்தக்கவாறு நிற்கலாம்.

இந்த நேரத்தில் உடற்பயிற்சி அல்லது நடப்பதனால் எமக்கு இரட்டிப்பு நன்மை ஏற்படும். ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் குறைவான ஆடைகளுடன் அரைமணி நேரம் வெயிலில் நின்றால் அவருக்கு 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் சர்வதேச அலகு விற்றமின் டி உடலில் உற்பத்தியாகின்றது. இவ்வளவானது நாளொன்றுக்கு போதுமானதெனக் கூறப்படுகின்றது.

மருத்துவர் S.கேதீஸ்வரன்
பொது வைத்திய நிபுணர்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org